விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு + II
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7070)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 08 புதன்கிழமை (24.07.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 217

## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம்

அமைச்சர் மனோ கணேசன்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இரண்டு வாரங்களில் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப் பிக்கவுள்ளதாக அமைச் 23

## நாட்டின் அரசியல் நிலைமை குறித்து அமெரிக்கத் தூதுவர் அலைனா மகிந்தவுடன் சந்தித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் மற்றும் எதிர்க் கட்சி தலைவர் மகிந்த ராஜ பக்ஷவுக்கு இடையில் கலந்து ரையாடல் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் வேண்டுகோளின் பேரில் இந்த சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சி தலைவரின் உத்தி யோகப்பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. 23

## ஜனாதிபதி, கர்தினால் ரஞ்சித் ஆண்டகையிடம் நேரில் சென்று சாட்சி பெற தெரிவுக்குழு முடிவு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்ய நிய 23

## இலங்கையில் இந்து மதத்தையும் தமிழர்களையும் பாதுகாக்க இந்தியா தலையிட வேண்டும்

சபையில் சிறீதரன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இந்து மதத்தை யும் தமிழர்களையும் அழிக்கும் சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது. ஆகவே இந்து மதத்தையும் தமிழர் களையும் பாதுகாக்க இந்தியா தலையிட வேண்டும். இனிமேலும் இந்தியா மௌனமாக இருக்கக் கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 23

## பிரித்தானியாவின் புதிய பிரதமராக

போரிஸ் ஜோன்சன் தெரிவு



23

## பட்டதாரி பயிலுநர்களாக யாழிலிருந்து 1,253 பேர் தெரிவு

2018இல் நியமிக்கப்பட்ட பலரும் சேர்ப்பு
நியமனம் எதிர்பார்த்த பலர் ஏமாற்றம் 23

## தரம் 5

புலமைப்பரிசில் பரீட்சை
கிழக்கு மாகாண
மாதிரி வினாத்தாள்
உள்ளே...

## கல்முனை பிரதேச செயலக விவகாரம்

# முஸ்லிம் தரப்பினருடன் விக்னேஸ்வரன் சந்திப்பு

## முஸ்லிம் தரப்பின் நியாயத்தையும் கேட்டறிந்தார்

(அம்பாறை)

கல்முனை உப பிரதேச செயலக விடயம் தொடர்பாக முஸ்லிம் தரப்பினரின் நியாயங்களை தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் கேட்டறிந்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## அத்துரலியே ரத்ன தேரரை சந்திக்க மறுத்த ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

மருத்துவர் மொஹமட் சிஹாப்தீன் ஷாபி சம்பந்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மகஜர் ஒன்றை கையளிக்க பாராளு மன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் உள்ளிட்டோர் நேற்று ஜனாதிபதி செயலகத்திற்கு சென் றுள்ளனர்.

எனினும் ஜனாதி பதியை சந்திக்க தமக்கு 23

## சிங்கள பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரி

பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

சிங்கள பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத் துங்கள் என கோரிக்கை விடுத்து பிரித்தானியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம்



23

## யாழ்., பல்கலையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்






03

## யாழ்.கோட்டையில் அமைந்துள்ள மாதா சொரூபம் நேற்று இரவு உடைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை பகுதியில் அமைந்துள்ள மாதா சிலை உடைக்கப்பட்டுள்ளது. 23

## ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளராக சஜித்

ஐ.தே.க., பாராளுமன்ற குழு முன்மொழிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக சஜித் 23

## பொதுவான கொள்கையுடன் புதிய கூட்டணி – ரணில்

(கொழும்பு)

எதிர்காலத்திற்கு பொருத்த மான பொதுவான கொள்கையுடன் தேசிய ஜனநாயக முன்னணி என்ற புதிய கூட்டணி எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 23

# பணி நயந்து வாழ்த்துகிறோம்

## திருமதி நவீனமலர் சந்திரபோஸ்

(SLPS 2) பிரதி அதிபர் - கிளி / கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்



கிளிநொச்சி கல்வி வலயத்தில் 16.03.1990 முதல் 10.05.2019 வரை ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக பணியாற்றி மணிவிழா காணும் திருமதி நவீனமலர் சந்திரபோஸ் அவர்களிற்கு மணிவிழா வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர்கள் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிவகுரு



கூவில் புலோலி தென்மேற்கு புலோலியைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி சிவகுரு அவர்கள் 23.07.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான சீனியன் - சீதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சிவகுரு பரமேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் ஆவார். அன்னார் கங்காதரன், புஸ்பகுமாரி, மதனகுமாரி, முரளிதரன் (பிரான்ஸ்), யசோதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன், இந்திரகுமாரி, இளங்கோதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவரான சரஸ்வதி, இலட்சுமி, சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அனுலேஸ்வரி, அன்பழகன், பிரதீபா (பிரான்ஸ்), ஜென்சி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தரூபன், ஜெசிந்தன், ரூபதரன், நாகரூபிகா, சிவரூபன், தேனுஜன், நிதுஜன், ரிதுஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தென்மேற்கு,புலோலி.
(C-7082)
தகவல் : குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு : 021 226 2949 / 077 830 0760

# வடமாகாண வீதி பாதுகாப்பு சபையின் பிரதானியாக

## கோபி சங்கர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண வீதி பாதுகாப்பு சபையின் பிரதானியாக வைத்திய கலாநிதி கோபிசங்கர், ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வு ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

வடமாகாணத்தில் இடம்பெறும் வீதி விபத் துக்களால் மக்கள் அதிகளவில் உயிரிழப்புக்கள், உடல் அவயவங்கள் மற்றும் சொத்திழப்புக்களுக்கும் முகம் கொடுத்து வருவதன் காரணமாக இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் இந்த வீதிப் பாதுகாப்பு சபை செயற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## முகாமைத்துவ உதவியாளர் தரம் III போட்டிப்பரீட்சை - 2019

### இலவச கருத்தரங்கு

இடம் :- கிருஸ் கல்விநிலையம் (ஓட்டுசுட்டான்)
காலம் :- 25.07.2019 (வியாழன்)
நேரம் :- காலை 9.00 முதல் மாலை 4.00 வரை

கருத்தமர்விற்கான வளவாளர்கள்

நுண்ணறிவு :- திரு.ச.தனலோகன்
மொழித்திறன் :- திரு.சு.சதீஸ்வரன்

அனுசரணை
கனகசபை விமலதாஸ்
தலைவர் வற்றாநதி மக்கள் நலன்காப்பகம் வன்னி.

தொடர்புகளுக்கு :
077 224 7744 / 077 228 1741

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation Works at Old Operation Theatre, Renovation of Sum near the old Operation Theatre and Construction of Room at JICA Corridor | 500.00 | 30,000.00 | 91 | 1.37 | C 9 |
| 2. | Modification of Angiography Room at JICA | 500.00 | 30,000.00 | 91 | 1.46 | C 9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.


5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.07.2019 up to 05.08.2019 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 06.08.2019, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**24/07/2019.**

(C-7078)

# கறுப்பு ஜூலை படுகொலை நினைவு நாள்
# யாழ்.பல்கலையில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு யாழ்.பல்கலைச் சமூகத்தால் நேற்று நண்பகல் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மலர் தூவி மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் திகதி தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் தமிழர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். இந்தக் கலவரம் இடம்பெற்று இன்றுடன் 36 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், உயிரிழந்தவர்களுக்கு நினைவுகூறும் முகமாக தமிழர் தாயகப் பகுதிகளில் பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். (ஞ)

## தமிழ் தேசம் வாழவேண்டும் என்றால் தமிழ்மொழி வாழவேண்டும்
### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசம் வாழவேண்டும் என்றால் தமிழ்மொழி வாழ வேண்டும். நாங்கள் மொழி அடையாளம் கொண்டவர்கள். ஆகையினாலே பாரதி சொன்னது போல் ஏனைய மொழியை படியுங்கள் ஆனால் தமிழை தாயாக கொண்டிருங்களென வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவிற்கு அமைய தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் "தேசிய பால் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்" வடமாகாண அங்குரார்ப்பண நிகழ்வு ஆளுநர் தலைமையில் நேற்றுக் காலை யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பெண்கள் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் இந்தத் திட்டம் சுமார் 4 பில்லியன் நிதி ஒதுக்கீட்டில் இடம் பெறுகின்றது. வட மாகாணத்தின் 5 பாடசாலைகளில் உத்தியோகபூர்வமாக இந்த நிகழ்வு ஒரே நேரத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

ஆரம்ப கல்விப் பிள்ளைகளின் போசணை நிலையை உயர்த்துவதற்காகவும், பிள்ளைகளை போசாக்குடனும் நலமுடனும் வளமுடனும் வாழவைக்க வேண்டும் என்பதே இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் விரைவில் நடவடிக்கை - அமைச்சர் மனோ உறுதி

(கொழும்பு)

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று பாராளுமன்றில் இரு வாரங்களில் சமர்ப்பிக்கப் படும் என அமைச்சர் மனோகணேசன் உண்ணாவிரத கைதியிடம் உறுதியளித்துள்ளார்.

புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதியான நெல்லியடியைச் சேர்ந்தவரும் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளருமான கனகசபை தேவதாசன் (வயது-62) கடந்த 15 ஆம் திகதியில் இருந்து உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்.

இவர் தனது வழக்கை தொடர்வதற்கான ஆதாரங்களை சேர்ப்பதற்கு தனக்கு பிணை வழங்கக் கோரி மேற்படி போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். ஒருவாரம் கடந்த நிலையில் குறித்த கைதியின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது.



இந்த நிலையில் நேற்று புதிய மகசீன் சிறைச்சாலைக்கு அமைச்சர் மனோ கணேசனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்.

கைதியின் உண்ணாவிரதத்தை நீர் ஆகாரம் கொடுத்து நிறைவு செய்த பின்னர் அமைச்சர் மனோ கணேசன் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தற்போது தயாரிக்கப்படுகிறது.

இரு வாரங்களில் குறித்த அமைச்சரவை பத்திரத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி அவர்களின் ஆதரவையும் பெற்றுள்ளேன். கைதிகளின் கோரிக்கைகள் மற்றும் விடுதலை குறித்த அக்கறை கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

## இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக அரசு வெளிப்படையாக செயற்பட வேண்டும்
### பொதுபலசேனா தெரிவிப்பு



(கொழும்பு)

இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் திரைமறைவில் முன்னெடுக்காது மாறாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் வெளிப்படையான வகையில் செயற்படுவது அவசியம் என பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்தோடு மத்ரஸா பாடசாலைகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையின் உள்ளடக்கத்தை உடனடியாக பகிரங்கப்படுத்த வேண்டும் என அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.


பொதுபல சேனா அமைப்பின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மத்ரஸா பாடசாலைகளை கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பில் யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடயம் தொடர்பில் இதுவரையில் எவ்வித விடயங்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

மத்ரஸா பாடசாலைகள் பகிரங்கமாக எமது பொது பாடத் திட்டத்திற்கு அமைய பிற மதங்கள் மீதான வெறுப்புக்களை மாணவர்கள் மத்தியில் கற்பித்துள்ளது என்பதற்கு உரிய ஆதாரங்கள் உள்ளன.

உலமா சபையின் தேவைகளுக்கு அமைய மத்ரஸா பாடசாலைகளை கண்காணித்தல் சட்டத்தை உருவாக்க இடமளிக்க முடியாது எனவும் மேலும் தெரிவித்தார். (7-9)

# முதன் முறையாக டெஸ்ட் அரங்கில்
# பெயர், எண் பொறித்த ஜெர்சி



ஜெர்சி அறிமுக நிகழ்வில் இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் ஜோ ரூட்

டெஸ்ட் அரங்கில் பெயர், எண் பொறித்த ஜெர்சி அணிந்து வீரர்கள் களமிறங்க உள்ளனர். வரும் ஆஷஸ் தொடரில் முதன் முறையாக இது நடைமுறைக்கு வருகிறது.

டெஸ்ட் போட்டிகளை பிரபலப்படுத்தும் வகையில், ஐ.சி.சி., சார்பில் டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடர் நடத்தப்படுகிறது. வழக்கமாக டெஸ்ட் போட்டிகளில் அணியின் லோகோ, அறிமுக எண் மட்டும் கொண்ட வெள்ளை நிற ஜெர்சி அணிவர். பின்புறம் பெயர் அல்லது எண் இல்லாமல் இருக்கும்.

இதையடுத்து ஒருநாள், 'ரி20' போட்டிகளில் போல, வீரர்கள் பெயர், எண் பொறித்த ஜெர்சி அணிந்து விளையாட கடந்த மார்ச் மாதம் ஐ.சி.சி., அனுமதி வழங்கியது. இதற்கு முன் இங்கிலாந்தின் கவுன்டி, அவுஸ்திரேலியாவில் ஷெபீல்ட் தொடரில் வீரர்கள், இந்த ஜெர்சி பயன்படுத்தினர்.

தற்போது சர்வதேச அரங்கில் முதன் முறையாக வரும் ஆக.,ல் துவங்கவுள்ள ஆஷஸ் தொடரில் இது நடைமுறைக்கு வருகிறது. இங்கிலாந்து அணி வீரர்கள் தங்களது பெயர், எண் பொறித்த ஜெர்சியுடன் களமிறங்க உள்ளனர். டெஸ்ட் அணி அணித் தலைவர் ஜோ ரூட், இந்த ஜெர்சி அணிந்து போட்டோவை இங்கிலாந்து கிரிக் கெட் சபை தனது 'டுவிட்டரில்' வெளியிட்டது.

**இந்தியா எப்போது**

இந்திய அணி மே.தீவுகளில் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. இதன் 2வது டெஸ்டில் (ஆ. 30 செப். 3), இந்திய அணி வீரர்கள், தங்களது பெயர், எண் பொறித்த வெள்ளை ஜெர்சி அணிந்து விளையாடுவர் எனத் தெரிகிறது.

சச்சின் அணிந்த 10வது எண்ணுக்கு அதிகாரப்பூர்வமற்ற முறையில் இந்திய கிரிக்கெட்டில் ஓய்வு தரப்பட்டது. விரைவில் தோனி அணியும் 7வது எண்ணும் விடை பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரு எண்கள் இல்லாமல் வீரர்கள் டெஸ்டில் களமிறங்கலாம்.

**அண்டர்சன் விலகல்**

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன். கடந்த ஜூலை 2ம் திகதி நடந்த கவுன்டி போட்டியில் இவரது கெண்டைக்கால் தசையில் காயம் ஏற்பட்டது.

இது இன் னும் சரியாகாததால், லண்டனில் இன்று தொடங்கும் அயர்லாந்துக்கு எதிரான நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியில் இருந்து விலகினார்.

# பயிற்சியாளரா ஜெயவர்த்தன
## இந்திய அணியில் இணைய ஆர்வம்



ஜெயவர்த்தன

இந்திய கிரிக்கெட் அணிக்கு இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன பயிற்சியாளராக தேர்வு செய்யப்படுவார் எனத் தெரிகிறது.

இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளராக கடந்த 2017 முதல் ரவி சாஸ்திரி உள்ளார். இரண்டு ஆண்டு கால பதவி, உலக கிண்ணத் தொடருடன் முடிந்தது. இருப்பினும் மே.தீவுகள் அணியுடனான தொடர் வரை நீட்டிக்கப்பட்டது.

அதேநேரம் புதிய தலைமை, துடுப்பாட்டம், களத்தடுப்பு பயிற்சியாளர்கள் என 7 பேருக்கு தேர்வும் நடக்கிறது. ரவி சாஸ்திரி மீண்டும் விண்ணப்பிக்கலாம் என கூறப்பட்டது. இதனால் மீண்டும் இவர் தானா என நினைத்த நிலையில், இலங்கை அணி முன்னாள் அணித் தலைவர் ஜெயவர்த்தன (வயது-42). இந்திய அணி பயிற்சியாளராக விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

ஐ.பி.எல்.,தொடரில்ஜெயவர்த்தன மும்பை அணி பயிற்சியாளராக உள்ளார். இவர் வந்த பிறகு தான் மும்பை அணி மூன்று முறை சம்பியன் ஆனது. இங்கிலாந்து அணிக்கு ஆலோசகராகவும் செயற்பட் டுள்ளார்.

இதேபோல 2011ல் இந்தியாவுக்கு உலகக் கிண்ணம் வெல்ல கைகொடுத்த தென்னாபிரிக்காவின் கேர்ஸ்டன், அவுஸ்திரேலியா வின் ரொம் மூடியும் பயிற்சியாளராக விருப் பம் தெரிவித்துள்ளனராம். இதற்காகத் தான் சமீபத்தில் ஹைதராபாத் பயிற்சியாளர் பதவியில் இருந்து ரொம் மூடி விலகியதாகவும் கூறப்படுகிறது.

# வில்லியம்ஸனுக்கு விருது
## ஸ்ரோக்ஸ் விருப்பம் இது


ஸ்ரோக்ஸ்

"நியூசிலாந்து அரசின் சிறந்த குடிமகன் விருது பெற, என்னை விட அணித் தலைவர் வில்லியம்சனுக்குத் தான் அதிக தகுதி உள்ளது," என, இங்கிலாந்து வீரர் ஸ்ரோக்ஸ் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் நடந்த உலக கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி நியூசிலாந்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது. இதில் இங்கி லாந்து வீரர் ஸ்ரோக்ஸ் 84 ஓட்டங்கள் விளாசி வெற்றிக்கு கைகொடுத்தார். இவர் நியூசிலாந்தில் பிறந்தவர். 12 வயதில் பிரிட்டன் வந்ததால், இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்காக விளையாட தொடங்கினார். சமீபத்தில், நியூசிலாந்து அரசின் சிறந்த குடிமகன் விருதுக்கு ஸ்ரோக்ஸ் தேர்வு செய்யப்பட் டார்.

இது குறித்து ஸ்ரோக்ஸ் கூறுகையில், "நியூசிலாந்தின் சிறந்த குடிமகன் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது மகிழ்ச்சி. ஆனால், என்னை விட சிறந்தவர்கள் நியூசிலாந்தில் அதிகம் உள்ளனர். 12 வயது முதல். இங்கலாந்தில் வாழ்ந்து வருகிறேன். [illegible]பாது, இங்கிலாந்து அணிக்காகவே உலக கிண்ணம் வென்று கொடுத்துள்ளேன்.

எனவே, நியூசிலாந்து கிரிக்கெட் அணியை திறமையாக வழிநடத்திய வில்லியம்சனுக்குத் தான் இந்த விருது பெற அதிக தகுதியுள்ளது. நியூசிலாந்து மக்களும் இவருக்கு ஆதரவு தருகின்றனர். எனது வாக்கும் இவருக்குத்தான்," என்றார்.

# விண்டிஸ் அணியில் நரைன், பொலார்ட்




இந்திய அணிக்கு எதிரான முதலிரண்டு 'ரி20' போட்டிகளுக்கான மே.தீவுகள் அணியில் நரைன், பொலார்ட் இடம்பிடித்துள்ளனர்.

மே.தீவுகள் செல்லவுள்ள இந்திய அணி மூன்று 'ரி20', மூன்று ஒரு நாள், இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் இரண்டு 'ரி20' போட்டிகள் அமெரிக்காவின் புளோரிடாவில் ஓக. 3, 4ல் நடக்கவுள்ளது.

இந்த இரண்டு போட்டிகளுக்கான 14 வீரர்கள் கொண்ட மே.தீவுகள் அணி அறிவிக்கப்பட்டது. இதில், இரண்டு ஆண்டுக்குப் பின் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன் (வயது-31), இடம்பிடித்தார்.

கடைசியாக 2017ல் இங்கிலாந்துக்கு எதிரான 'ரி20' போட்டியில் பங்கேற்றிருந்தார். அடுத்த ஆண்டு 'ரி20' உலக கிண்ணத் தொடருக்கு (அவுஸ்திரேலியா) அணியை தயார்படுத்த நரைனுக்கு இடம் தரப்பட்டதாக தெரிகிறது.

**மீண்டும் பொலார்ட்**

இதேபோல, 'சகலதுறை வீரர்' பொலார்ட்டும் அணியில் இடம்பெற்றார். கடந்த நவம்பரில் இந்தியாவுக்கு எதிராக சென்னையில் நடந்த 'ரி20' தொடரில் இவர் விளையாடி இருந்தார். இளம் விக்கெட் காப்பாளர் அந்தோணி பிராம்ப்ளேவுக்கு (வயது -28), வாய்ப்பு தரப்பட்டுள்ளது. விளாசல் வீரர் ரசல் இடம்பெற்றிருந்தாலும், முழு உடற்தகுதி பெற்றால் மட்டுமே விளையாடுவார். அதிரடி ஆரம்ப வீரர் கிறிஸ் கெய்ல், கனடா லீக் 'ரி20' தொடரில் பங்கேற்பதால் மே.தீவுகள் அணியில் சேர்க்கப்படவில்லை. மற்றபடி அணித் தலைவர் கார்லஸ் பிராத்வைட், கீமோ போல், பூரன் உள்ளிட்டோர் இடம்பெற்றனர்.

**அணி விபரம்:** கார்ல்ஸ் பிராத்வைட் (அணித் தலைவர்), நரைன், கீமோ போல், பெய்ரே, பொலார்ட், பூரன், பவெல், ரசல், தோமஸ், அந்தோணி பிராம்ப்ளே (விக்கெட் காப்பாளர்), ஜோன் காம்ப்லே, காட்ரெல், ஹெட்மயர், எவின் லீவிஸ்.

# தீராத கப்டில் சோகம்



கப்டில்

"உலக கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி சிறப்பான மற்றும் மோசமான நாளாக அமைந்து விட்டது," என நியூசிலாந்து வீரர் கப்டில் தெரிவித்தார்.

இங்கிலாந்து மண்ணில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடந்தது. லண்டன் லோர்ட்ஸில் நடந்த இறுதிப் போட்டியில் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதின. இப்போட்டி மற்றும் அடுத்து நடந்த 'சுப்பர் ஓவர்' என இரண்டும் 'சமன்' ஆகின.

கடைசியில் பவுண்டரி அடிப்படையில் இங்கிலாந்து அணிக்கு கிண்ணம் வசமானது. இப் போட்டியில் நெருக்கடியான கட்டத்தில் நியூசி லாந்து வீரர் கப்டில் 'த்ரோ' செய்த பந்து பவுண்டரியாக மாறியது. தவிர, 'சுப்பர் ஓவர்' கடைசி பந்தில் ரன் அவுட்டானது தோல்விக்கு காரணமாக அமைந்தது.

இது குறித்து கப்டில் வெளியிட்ட 'இன்ஸ் டா கிராம்' செய்தியில், 'உலக கிண்ண இறுதிப் போட்டி தான், எனது கிரிக்கெட் வாழ்வின் சிறப்பான மற்றும் மோசமான நாள் என கருதுகிறேன். இது பல்வேறு உணர்வுகளை தருகிறது. இருப்பினும் நியூசிலாந்து அணிக்காக விளையாடியதை எண்ணி பெருமை கொள்கிறேன்,' என தெரிவித்துள்ளார்.

# வடக்கு - கிழக்கு 10 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் 4 ஆயிரத்து 750 வீடுகள் முடிவுறும் நிலையில்

## அமைச்சின் செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாவட்டங்களில் முதற் கட்டமாக 10,000 கல் வீடுகளில் 4,750 வீடுகள் முடிவுறுத்தப்படும் நிலையிலுள்ளதாக வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்ட 10,000 கல் வீடுகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில்யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் அரச நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

10,000 வீடுகளில் 4,750 வீடுகள் ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளன. முதற்கட்டமான 4,750 வீடுகளில் யாழ்.மாவட்டத்தில் 1500 வீடுகளும் (புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் உள்ளடங்கலாக), கிளிநொச்சியில் 670 வீடுகளும், முல்லைத்தீவில் 630 வீடுகளும் வவுனியாவில் 450 வீடுகளும், மட்டக்களப்பில் 625 வீடுகளும், திருகோணமலையில் 400 வீடுகளும் மன்னாரில் 350 வீடுகளும் அம்பாறையில் 125 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு இவ்வீடுகள் அனைத்தும் முடிவுறும் நிலையிலுள்ளது.

முடிவுறுத்தப்பட்ட வீடுகளில் சில வீடுகள் யாழ்ப்பாண மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமான மிகுதி 5,250 வீடுகளில் யாழ் மாவட்டத்தில் 1,065 வீடுகளும் (புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் உள்ளடங்கலாக), கிளிநொச்சியில் 855 வீடுகளும், முல்லைத்தீவில் 695 வீடுகளும், மன்னாரில் 850 வீடுகளும்,வவுனியாவில் 550 வீடுகளும், திருகோணமலையில் 600 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு இவை ஒக்டோபர் மாத இறுதியில் முடிவுறுத்தப்படும்.

மேலும், கிழக்கு மாகாணத்திற்கான 7,000 சிறப்பு வீட்டுத் திட்டத்தில் முதல் கட்டமாக 1,000 புதிய தொழில்நுட்ப வீடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. ஒரு வீட்டுக்கான கிரயம் ரூபா ஒரு மில்லியனாகும். 2019 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 10 பில்லியன் இவ் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகள் 550 சதுரகிலோ மீற்றர்களாக காணப்படுவதுடன் இரண்டு படுக்கை அறைகள், சமையலறை மற்றும் ஓடுகளிலான கூரையைக் கொண்டதாக காணப்படும். மேலும் பயனாளிகளால் அமைக்கப்படுகின்ற வீடாக காணப்படுவதால் பயனாளிகள் மற்றும் அப்பிரதேசத்திலுள்ள மக்கள் வேலைவாய்ப்புக்களைப் பெறக் கூடியதாக இருக்கும்.

மேலும் நிதியானது மாவட்டத்தினுள் சுழற்சியடைவதால் அம்மாவட்டங்கள் பயன்பெறக் கூடியதாக காணப்படுகின்றது.

பயனாளிகள் தெரிவு தொடர்பாக பயனாளிகளை தெரிவு செய்வதற்கான முன்னுரிமைப்படுத்தல் பிரமாணங்களில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர்களுடன் வாழும் உள்ளக இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் தாயகம் திரும்பும் அகதிகள் கருத்திற் கொள்ளப்படுவதுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள், காணாமல் போனவர்களை கொண்ட குடும்பங்கள், சமூகமயமாக்கப்பட்ட முன்னாள் போராளிகள் குடும்பங்கள், வருமானம் குறைந்த குடிசைகளில் வாழும் குடும்பங்கள், கண்ணிவெடியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், வயோதிபர்கள், இளம் சிறார்களைக் கொண்ட குடும்பங்கள் என்பவை முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளன.



மேலும் பயனாளிகள் தெரிவு தொடர்பாக ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை தீர்ப்பதற்காக தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் நலன்புரி நிலையங்களிலுள்ள காணியற்ற 381 குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்காக காணிகளை கொள்வனவு செய்வதற்காக, பிரதமரால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் அரச காணிகள் அரிதாகவுள்ளமையினால் தனியார் காணிகளை ஒரு குடும்பத்திற்கு 20 பேர்ச்சஸ் என்ற அடிப்படையில் நலன்புரி நிலையங்களிலுள்ள காணியற்ற 381 குடும்பங்களுக்கு காணிகளை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. முதற்கட்டமாக 50 காணிகள் அற்ற நலன்புரி நிலையங்களிலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்காக காணிகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 35 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. (9)

# பிரபல எழுத்தாளருக்கு மறியல்

(பொல்ஹாவெல).

இலங்கையின் பிரபல எழுத்தாளர் ஷக்திக சத்குமாரவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க பொல்ஹாவெல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை பொல்ஹாவெல நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குமாரை தனது எழுத்துக்களால் விமர்சித்தாரென சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆதரவு சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) கீழ் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை ஷக்திக சத்குமாரவை விடுதலை செய்ய வலியுறுத்தி கடந்த மாதம் மனித உரிமை செயற்பாட்டாளர்களால் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீனவரொருவரின் சடலம் மீட்பு

(தெஹிவளை)

தெஹிவளை கடற்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்றிருந்த மீனவர்கள் மூவரின் படகுகள் விபத்துக்குள்ளாகியிருந்த நிலையில் ஒருவர் காப்பற்றப்பட்டுள்ளதுடன் இருவர் காணாமற்போயுள்ளனர்.

இந்நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை குறித்த மீனவர்கள் மூவரும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகக் கடலுக்குச் சென்றிருந்த வேளை, அவர்கள் சென்றிருந்த படகு விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காப்பாற்றப்பட்ட போதும் மற்றைய இருவர் தேடப்பட்டு வந்த நிலையில், ஒருவரது சடலம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இவ்வருடத்திற்கான சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரை பல்கலைக்கழக நல்லையா அரங்கில் அடிகளாரின் நினைவு தினமான கடந்த 19 ஆம் திகதி இடம் பெற்றது. இதில் 'தமிழிசையின் செல்நெறி: இனமரபு இசையியல் தரிசனம்' என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பேருரையை வழங்கியதையும், கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எவ்.சி. றாகலினால் கௌரவிக்கப்பட்டதையும் படங்களில் காணலாம்.

## இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு, சுக், புத |
| | | | சூரி, செவ் |
| | | | |
| சனி, கேது | குரு | | |

**24.07.2019**

ஆடி 08, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

சப்தமி பிற்பகல் 3.15 மணிவரை

ரேவதி பிற்பகல் 1.46 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

வளவன்

**மேடம்** — அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்** — காலையில் நடைபெறவிருந்த காரியங்கள் மாலை நேரம் தாமதமாகலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** — எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், கௌரவமான நாள்.

**கடகம்** — உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**சிம்மம்** — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** — முக்கிய பொறுப்புக்களை காலைப் பொழுதே செய்து முடிப்பது நல்லது, எதிர்பாராத வகையில் மாலை நேரம் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**துலாம்** — சுய முயற்சிகளின் மூலம் சுகம் -காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** — செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளால் பெருமையுண்டு.

**மகரம்** — மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** — செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, வாக்கு மேன்மையுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்** — பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

# களப்பு குடிநீர்த்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்



(கொழும்பு)
வடமராட்சி களப்பு குடிநீர் திட்டம் தொடர்பான விசேட கல ந்துரையாடல் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முன்தினம் நகர திட்ட மிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு அலுவல கத்தில் இடம் பெற்றது.

யாழ்.குடாநாட்டில் வசிக்கும் சுமார் 630,000 மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய் யும் முகமாக பொறியியலாளர் குகனேஸ்வரராஜாவால் முன் மொழியப்பட்ட இந்த திட்டம் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற் றுள்ளதுடன் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவால் அடுத்த மாதம் ஆரம்பித்து வைக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# எச்சரித்து வெளியேற்றப்பட்ட மதமாற்றுக் குழுவினர்

(பொன்னாலை)
பொன்னாலை மற்றும் கல்வி ளான் கிராமங்களில் மதம் பரப் பும் நோக்கத்துடன் கூட்டம் நடத்துவதற்கு முற்பட்ட கிறிஸ்தவ சபை ஒன்றின் உறுப் பினர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை வெளியேற்றப்பட்டனர்.

பொன்னாலையில், கிறிஸ் தவ மக்கள் எவரும் வசிக்காத இடத்தில், தனியார் காணி ஒன் றில் இசை நிகழ்வுடன் கூடிய கூட் டம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பா டுகள் செய்யப்பட்டன. வெளி இடத்தில் இருந்து நூற்றுக்கணக் கானோர் கொண்டுவரப்பட்ட னர்.

இதை அவதானித்து அங்கு சென்ற அவ்வூர் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் இருவர், யார் அனுமதி வழங்கியது என அப்பகுதி மக்களைக் கேட்ட போது அவர்கள், தாங்களாகவே இவர்கள் வந்து இங்கு கூட்டம் நடத்துகின்றார்கள் என்றனர்.

எதற்காகக் கூட்டம் நடத்துகி றீர்கள் என வந்தவர்களிடம் கேட்டபோது, நோய், பிணிகளில் இருந்து மக்களை விடுவிப்பதற் கான நிகழ்வு எனப் பதிலளித் தனர்.

அப்படியாயின் வைத்திய சாலைகளை மூடிவிட்டு நீங்களே ஜெபியுங்கள் என ஆத்திரத்துடன் கூறிய அவ் இளைஞர்கள் உடன டியாக இந்த இடத்தில் இருந்து வெளியேறுங்கள் என அவர் களை எச்சரித்து அவர்களை வெளியேற்றினர்.

பொன்னாலையில் இருந்து வெளியேற்றப்பட்ட குறித்த குழு வினர் அடுத்த கிராமமான கல்வி ளானில் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். அந்தப் பகுதி யைச் சேர்ந்த சனசமூக நிலைய த்தின் பிரதிநிதிகள் அங்கு சென்று அவர்களையும் வெளியேற்றி னர். (5-9-10)

# புனரமைப்பு நிறைவு பெறாத நிலையில் யாழ்.குருநகர் பொது நூலகம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் குருநகர் பகுதி யில் அமைந்துள்ள பொது நூல கம் யாழ்.மாநகரசபை நிர்வாகத் தினால் நடத்தப்பட்டு வருகின் றது.

நீண்ட காலமாக புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றதாகவும் அவ்வேலைகள் பூரணப்படுத்தாத நிலைமையில் நீண்ட நாட்களாக பூட்டப்பட்டு இருப்பதாகவும் அப் பிரதேச மக்கள் கூறுகின்றார் கள்.

பாடசாலை மாணவர்கள், பரீட்சை எடுக்கும் மாணவர்கள், புத்திஜீவிகள் இப் பொது நூல கத்தை பயன்படுத்தி வந்தார்கள். தற்போது கல் வியை வளர்க்கும் இப்பொது நூலகம் செயற் படாமல் பூட்டப்பட்டிருப்பது இப் பகுதிக்கு பெரும் இழப்பாகவும் கருதப்படுகின்றது.

இவ்விடயம் சம்பந்தமாக மக் கள் பிரதிநிதிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் விசனப் படுகின்றனர். மேலும் இப்பொது நூலகமானது அமைதியான இட த்தில் அமைந்துள்ளது.

ஆகவே இப்பொது நூலகத்தை திறந்து குறிப்பிட்ட சிறார்கள், மாணவர்கள், பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பயன்படுத்தக் கூடிய விதமாக திறந்து ஆவன செய்யுமாறு உரிய அதிகாரிகளையும் மாநக ராட்சி மன்ற உறுப்பினர்களை யும் பிரதேச மக்கள் கோருகின்ற னர். (5-106)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
மந்துவில் றோ.க.த.க. பாட சாலையின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கான விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 7.30 மணியளவில் பாடசாலை பிர தான மண்டபத்தில் அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்கள், பழைய மாண வர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கல ந்து கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (5-114)

# 22 உறுப்பினர்களை உள்ளடக்கிய பாதுகாப்புக் குழு தெரிவு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி -கோவிற் குடி யிருப்பு ஜே/301 கிராம உத்தி யோகத்தர் பிரிவுக்கான கிராமிய பாதுகாப்புக் குழு நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பிற்கு அமைவாக கிராமிய பாதுகாப்புச் செயலகத்தின் கீழ் ஒவ்வொரு கிராம உத்தியோகத் தர் பிரிவுகளிலும் கிராமிய பாது காப்புக் குழுத் தெரிவு இடம் பெற்று வருகிறது.

குறித்த கிராமிய பாதுகாப்புக் குழுவில் கிராம உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தர், இரா ணுவ வீரர்,கிராமத்தில் உள்ள சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாக த் தினர் மற்றும் கிராமத்தில் உள்ள பாடசாலையின் அதிபர் ஒருவர் உட்பட 22 உறுப்பினர்கள் உள் ளடக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கோவிற் குடியிருப்பு ஜே/301 கிராமிய பாது காப்புக் குழுத் தலைவராக சாவ கச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்ஷனும் செயலாளராக கோவிற்குடியிருப்புக் கிராம உத்தியோகத்தர் கார்த்திகேயன் உட்பட 22 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

குறித்த குழு சிவில் பாதுகா ப்புக் குழு போல் அல்லாது தொட ர்ந்து இயங்கு நிலையில் காணப் படும் எனவும், பல பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகள் குறித்த குழு ஊடாகவே கிராமத்தில் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-30)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)
யாழ். சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நல்லூர் செட்டித்தெரு சின்மயா மிஷனில் இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு சின் மயா மிஷன், இல 9, செட்டித் தெரு ஒழுங்கை, நல்லூர் தொ.பே. 021 222 3447, 077 857 3447 என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும். (ஜ)

# முன்னேற்ற ஆறுமுகம் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(கொழும்பு)
யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்யும் முக மாக முன்மொழியப்பட்டுள்ள "முன்னேற்ற ஆறுமுகம்" திட்டம் தொடர்பான விசேட கலந்துரை யாடல் ஆளுநரின் தலைமையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலா ளர் அநுர திஸாநாயக்கவின் பங்குபற்றலுடன் நேற்று முன் தினம் பிற்பகல் மகாவலி அபி விருத்தி திணைக்களத்தில் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தை ஆரம்பிக் கும்போதும் அதற்கு முன்ன ருமான காலப்பகுதியில் எதிர் கொள்ளும் நடைமுறைச் சிக் கல்கள் தொடர்பில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் திணைக்களம், சுற்றாடல் பாது காப்பு அதிகாரசபை, வனவள பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் இக் கலந்து ரையாடலில் ஆராயப்பட்டது. (5)

# நாக சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான நாகசதுர்த்தி விரதப் பூஜைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 4.45 மணி யளவில் அபிஷேகத்தைத் தொடர் ந்து நடைபெறும். அதனைத் தொட ர்ந்துவிநாயகப்பெருமான்வீதியுலா வருதலும் இடம் பெறவுள்ளது.(5)

# ஆழியவளை சி.சி.த.க பாடசாலை சிரியர் விடுதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)
அரச கல்விக் கொள்கை வெளிப்பாட்டின் மூலம் சகலரு க்கும் சம கல்விக்கான சந்தர் ப்பத்தை வழங்கும் நோக்கோடு கல்வியமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாட சாலை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.வடமராட்சி ஆழியவளை சி.சி.த.க. பாடசாலையில் புதி தாக நிர்மாணிக்கப்பட்ட ஆசிரி யர் விடுதி திறப்பு விழா கடந்த சனிக் கிழமை அதிபர் க.பாஸ் கரன் தலைமையில் நடைபெற் றது.


இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டு ஆசிரியர் விடு தியை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாட சாலை தேசிய வேலைத் திட்ட வடமாகாண திட்டப் பொறியிய லாளர் ஜே.வாசுதேவன், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தன்,வலயக் கல்விப் பணிப்பாளர்,பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச செய லர் மற்றும் பாடசாலை ஆசி ரியர்கள், மாண வர்கள் என பலரும் கலந்து கொண்ட னர். (5-350)

# மாதாந்த சபை அமர்வு

வலி.கிழக்குப் பிரதேச சபையின் மாதாந்தச் சபை அமர்வு நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் சபையின் தவிசாளர் நி. நிரோஷ் தலைமையில் புத்தூர் தலைமையக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும்.

இக் கூட்டத்திற்கு சகல சபை உறுப்பினர்களையும் கலந்து கொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (5-10)



பருத்தித்துறை இசைவானம் இசைமன்றமும் சர்வதேச சிறுவர் பணியகமும் இணைந்து கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு பாதணி வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. நிகழ்வில் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், ஐக்கிய மனித உரிமை அமைப்பின் பணிப்பாளர் பிரணிதா வர்ணகுலசூரிய, பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ண ஐயர், அருட்தந்தை கலாநிதி வண. ஜோன்போல் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பாதணிகளை வழங்கி வைத்தனர்.

# நாட்டில் கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது எமது பிரதான கடமை

## அமைச்சர் சாகல தெரிவிப்பு



(கொழும்பு)

தேயிலை மற்றும் மிளகிற்கான கேள்வியை அதிகரித்து கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது எமது பிரதான கடமையாகும் எனத் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் தேயிலை மற்றும் மிளகு உற்பத்தியில் காணப்படுகின்ற விலை தளம்பல் காரணமாக மக்கள் பெருமளவு பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

நாட்டினுள் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு இணையாக தேயிலை மற்றும் மிளகு உற்பத்திகளின் பொருட்டும் விசேட அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் பொருட்டும் ஒழுங்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

தெனியாய பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிட்டபெத்தர பிரதேச செயலக அலுவலகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய ஐந்து மாடி நிர்வாக கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அமைச்சர் சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

1400 மில்லியன் ரூபாவுக்கும் அதிக செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இப் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டதன் பின்னர் அமைச்சர் பிட்டபெத்தர பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட குறைந்த வருமானம் ஈட்டும் மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களையும் வழங்கி வைத்தார்.

அத்துடன் தெனியாய கொட்டபொல கொடகும்புரவில் 39 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பாலத்தை அமைச்சர் மக்கள் பாவனைக்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சம்பள உயர்வு விவகாரம்

# ஐ.தே.கவின் கூட்டணி தொடர்பில் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(கொழும்பு)

50 ரூபாய்க்கு தீர்வு வராவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கவுள்ள கூட்டணி தொடர்பாகவும் நாங்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கம்பரெலிய வேலைத்திட்டத்தின் கீழ் கந்தப்பளை பாக் கொலனி, நோனாதோட்டம், பூப்பனை கீழ்ப் பிரிவு ஆகிய பகுதிகளில் தலா 2 மில்லியன் ரூபா வீதம் அமைக்கப்பட்ட மூன்று பாதைகளை திறந்து வைத்த பின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பாக கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக ஒரு தொகைச் சம்பள அதிகரிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுத்த பேச்சுவார்த்தையின் ஊடாகத் தேயிலை சபையின் ஊடாக 100 ரூபாய் கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனாலும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் 50 ரூபாய் வழங்க முடியும் எனவும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்திருந்தார். இதனை தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்றுக்கொண்டது. ஆனால் இது வரையில் அந்த ஐம்பது ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இது பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுகின்ற ஒரு செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

50 ரூபாய்க்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என்றால் ஐக்கிய தேசியக் கட்சி ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி அறிவிக்கவுள்ள அல்லது ஏற்படுத்தவுள்ள கூட்டணியில் தமிழ் முற்போக்கு கூட்டணி இடம்பெறுமா? அல்லது வேறு தீர்மானங்களை எடுக்குமா? என்பது தொடர்பாக கூட்டணியின் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிலை ஏற்படும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சிறுபான்மை மக்களின் வாக்குகள் அவர்களுக்கு தேவைப்படும்.

எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அமைச்சர் நவீன் திஸாநாயக்க அதேபோல பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களங்களின் அனுசரணையில் யாழ்.மாவட்ட செயலகமும் மாவட்ட கலை, கலாசார பேரவையும் மாவட்ட அதிகார சபையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா 26,27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வாக "யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியற் பண்பாட்டுச் சுவடுகள்" தலைப்பில் ஆய்வரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வாக பண்பாட்டு பெருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் முதன்மை விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி.சுஜீவா சிவதாஸ், கௌரவ விருந்தினராக புனைகதை இலக்கியப் படைப்பாளி கா.சச்சிதானந்தன் (கே.எஸ்.ஆனந்தன்) ஆகியோர் கலந்து கொள்வர். (5-9)


விவசாயப் பண்ணைக்கு

**தொழிலாளி தேவை**

எமது பண்ணையில் தங்கியிருந்து வேலை பார்க்க, விவசாயத்தில் அனுபவம் பெற்ற தொழிலாளி ஒருவர் தேவை. நம்பிக்கையும், நாணயமும், தன்முனைப்புடன் வேலையில் அக்கறை செலுத்தும் மனப்பான்மையும் முக்கியம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(மேற்பார்வையாளர் வேலை நாடுவோர் தொடர்பு கொள்ள வேண்டாம்.)

SLS Trust

திருநாவுக்கரசு நினைவு
மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்
பரிபூரணமான இயற்கை விவசாயம்

**076 234 8877**

காய் கறிகளும், பழங்களும் பெற:
சனி, செவ்வாய் காலை 8.00 - 10.00



பழமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்,
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
c auk; 5'5"
தகைமை/தொழில் NCT QS, கட்ட ஒப்பந்தகாரர்
எதிர்பார்ப்பு:அரசதொழில் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9927

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 14 ½செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமைதொழில்:கல்வியியற்கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு:உத்தியோகம்(உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9929

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 18 ½செவ் 4இல்
உயரம்: 5'10"
தகைமைதொழில்:கல்வியியற்கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்(உள்நாடு).
தொ.இ: B/9930

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 39 ¾சூரி செவ்5இல்
உயரம்: 5'9"
தகைமைதொழில்:பட்டதாரிமுகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி,அரச தொழில் (உள்நாடு)
தொ.இ: B/9931

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 18
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9937

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 03
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA பட்டதாரி
எதிர்பார்ப்பு:அரசதொழில் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9939

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/9940

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 20 ½
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:பல்கலைக்கழக மாணவி
எதிர்பார்ப்பு: Engineer, Accountant, Lecturer, ITField(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9944

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2019-17.08.2019



விகாரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன், அங்காரகன் செவ்வாயோடு இணைந்து விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அதேநேரத்தில் விரயஸ்தானத்தைக் குருவும் பார்க்கின்றார். எனவே சுப விரயங்கள் இம்மாதத்தில் அதிகரிக்கும். பிள்ளைகளின் படிப்பை முன்னிட்டுச் செலவிடுவது, பிள்ளைகளின் திருமண வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது, சொத்துக்கள் வாங்குவது போன்றவற்றின் மூலம் நல்ல விரயங்களைச் செய்ய வாய்ப்புகள் கைகூடிவரும் நேரமிது.

இம்மாதத்தில் குருவும் வக்கிர நிர்த்தியாகிப் பார்வையைப் பலப்படுத்துவதால் நீங்கள் நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் ஒவ்வொன்றும் உடனடியாகப் பூர்த்தியாகும். லாபஸ்தானத்தில் புதன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றார்கள். எனவே புத-சுக்கிர யோகமும் செயற்படப் போகின்றது. பொருளாதார முன்னேற்றம், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகுதல், தனவரவில் இருந்த தடை அகலுதல் போன்றவைகள் ஏற்படும்.

இதுவரை குரு வக்கிர கதியில் இருந்ததால் நீங்கள் எவ்வளவோ முயற்சி செய்திருந்தும் ஒரு சில காரியங்கள் கை கூடாமலிருந்து தாமதப்பட்டிருக்கலாம். இனி அந்த நிலைமாறும். தடைகளைத் தகர்த்து எறிவதே குருவின் பார்வைதான். அப்படிப்பட்ட குருவின் பார்வையால் அனைத்துக் காரியங்களிலும் உங்களுக்கு வெற்றிகிடைக்க குரு வக்கிர நிவர்த்தியாகும் நாளையொட்டி குரு பீடங்களாக விளங்கும் திருச்செந்தூர், திட்டை, ஆலங்குடி, பட்டமங்கலம் போன்றஸ்தலங்களுக்குசென்றுவழிபட்டுவரலாம்.

பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் வக்கிரச் சனியோடும், கேதுவோடும் இணைந்திருக்கின்றார். விரயாதிபதியாக சந்திரன் விளங்குவதால் அவர் சனியோடு இணைந்திருக்கும் இந்தமாதத்தில் பிள்ளைகள் வழியில் விரயம் உண்டு. மேலும் பூர்வீகச் சொத்துக்களைக் கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்கும் யோகமும் ஏற்படலாம். அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் ஒருசில சமயங்களில் தொல்லைகள் வரலாம். இருப்பினும் உடனுக்குடன் அது நிவர்த்தியாகிவிடும். தொழில் முன்னேற்றம் சிறப்பாகவே இருக்கின்றது. தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் லாபஸ்தானத்தில் புதனோடு இணைந்திருப்பதால் தொழில் முன்னேற்றம் இலாபம் தரும் விதத்தில் உள்ளது.

இம்மாதம் ஆடி வெள்ளியில் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆடி 18ஆம் பெருக்கன்று குலதெய்வ வழிபாட்டையும் அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டையும் மேற்கொண்டால் முன்னேற்றம் அதிகரிக்கும்.

**கடகம் மற்றும் சிம்மத்தில் சுக்கிரனின் சஞ்சாரம்**

ஜுலை 24 ஆம் திகதி கடகத்திற்கு சுக்கிரன் வருகின்றார். பிறகு ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்கிரன் வருகின்றார். கடகச்சுக்கிரனின் ஆதிக்க காலத்தில் பெண்வழிப் பிரச்சினைகள் நல்லமுடிவிற்கு வரும். ஆடை, ஆபரணச்சேர்க்கை உண்டு. பெண் பிள்ளைகளின் திருமணப்பேச்சுக்களை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சிம்மச் சுக்கிரனின் ஆதிக்க காலத்தில் மூத்த சகோதரத்தால் சந்தித்த பிரச்சினைகள் அகலும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். நண்பர்கள் நம்பிக்கைக்கு உரிய தகவல்களைத் தருவர். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வழக்குகள் சாதகமாகும்.

**கடக புதனின் சஞ்சாரம்**

பொதுவாக உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்கு வருகின்றார். விரயஸ்தானத்திற்கு லாபாதிபதி புதன் வரும் பொழுது இலாபம் அனைத்தும் விரயமாகும் சூழ்நிலை உண்டு. எனவே எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.




வீண்விரயங்களும்அதிகரிக்கும். எந்த ஒரு வேலையையும் ஒரு முறைக்கு இரு முறை யோசித்துச் செய்யும் நிர்ப்பந்தம் ஏற்படும். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது, வீட்டை விரிவு செய்து கட்டுவது போன்றவற்றில் கவனம் செலுத்த உகந்த நேரமிது. ஒருசிலருக்கு வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் வந்து சேரும். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகி திடீரெனப் பணியிட மாற்றம் ஏற்படலாம். அரசாங்க பதவியில் உள்ள வர்களுக்கு கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரம். இக்காலத்தில் இஷ்ட தெய்வம், குலதெய்வம் மற்றும் சிறப்பு தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளலாம்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். யோகாதிபதியான செவ்வாய் உங்கள் இராசிக்கே வருவது மிகுந்த யோகத்தைக் கொடுப்பார். நினைக்க இயலாத இராஜயோகம் உருவாகும். சொத்து சேர்க்கையும், சொத்துக்களால் இலாபமும் உண்டு. ஒரு சிலருக்கு கிளைத் தொழில் தொடங்கும் யோகம் ஏற்படும். இக்காலத்தில் அங்காரக வழிபாடும், சூரியனுக்குரிய வழிபாடுகளையும் அடுத்தடுத்த நாட்களில் செய்தால் தங்கு தடைகள் அகலும்.

**குருவின் வக்கிர நிவர்த்திக்காலம்**


ஓகஸ்ட் 7 ஆம் திகதி குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். அதன்பிறகு குருவின் பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கும். இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் உருவாகும். தொழில் முன்னேற்றமும், புதிய வாகனங்கள் வாங்கும் யோகமும் உண்டு. ஆதாயம் தரும் தகவல் அதிகரிக்கும். இம்மாதம் ஆடி வெள்ளியன்று அம்பிகையை வழிபட்டால் நாடிவரும்பலன்கள்நல்லபலனாக அமையும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும் மாதமாகும். நாட்பட்ட நோயிலிருந்து குணமடைவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே புதியதொழில் தொடங்க வாய்ப்புகள் கைகூடி வரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும். கல்யாணக்கனவுகள் நனவாகும். மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உண்டு. விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வதில் நாட்டம் செலுத்துவீர்கள். தாய் மற்றும் சகோதர வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமைபளிச்சிடும். திடீர் சம்பள உயர்வும் கிடைக்கலாம். குரு வழிபாடும், சனி வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

## சுப விரயங்களை சந்திக்கும் நேரம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் பலம் பெற்றிருக்கின்றார். அவரோடு தனாதிபதி சுக்கிரனும் இணைந்திருக்கின்றார். எனவே பணவரவு திருப்திகரமாக இருக்கும். ஆனால் அதேநேரத்தில் அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் விரயங்களும் கூடுதலாக இருக்கும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிட்டதே என்று சொல்வீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகவே இருக்கும். உரிமையோடு பழகும் உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர்.

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். உங்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். வேலைப்பளு அதிகரிக்கும். அலுவலகத்தில் சக ஊழியர்களின் பணிகளையும் நீங்களே செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சனி விலகும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எவ்வளவு சிறப்பாகப் பணி புரிந்தாலும் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற இயலாது.

சுகஸ்தானத்தில் சனியோடு சந்திரனும் கேதுவும் வீற்றிருக்கின்றார்கள். சகாய ஸ்தானத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். எனவே ஆரோக்கியத் தொல்லை அடிக்கடி ஏற்படத்தான் செய்யும். இருப்பினும் மருத்துவ முறைகளை மாற்றிப் பார்ப்பதன் மூலம் ஒரு சிலருக்கு நோய்கள் குணமாகலாம். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். குலதெய்வம் மற்றும் இஷ்ட தெய்வங்களுக்கு செய்ய நினைத்த பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.


10 இல் ராகு இருப்பதால் உத்தியோகத்தில் போதிய ஊதியம் கிடைக்கவில்லையே என்று தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். ஆனால் இப்பொழுது அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. மேலும் சனி, குரு, சுக்கிரன், செவ்வாய் ஆகிய நான்கு கிரகங்களும் வலிமை இழந்திருக்கின்றன. எனவே சில மாதங்கள் கழித்து அல்லது சனிப்பெயர்ச்சிக்குப் பிறகே புது முயற்சிகளில் துணிந்து ஈடுபடலாம். அர்த்தாஷ்டமச் சனிக்குப் பரிகாரமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனிக்கவசம் பாடி சனி பகவானை வழிபடுவது நல்லது.

அதேநேரத்தில் விரயாதிபதி சூரியன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயத்திற்கேற்ற தொகை வந்து கொண்டேயிருக்கும். இம்மாதம் ஆடிக்கார்த்திகை அன்று முருகப்பெருமானையும், ஆடி அமாவாசை அன்று முன்னோர்களையும் வழிபட்டு வருவதன் மூலம் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கடகம், சிம்மத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன்**

ஜுலை 24 ஆம் திகதி கடகத்திற்கு சுக்கிரன் வருகின்றார். பிறகு ஓகஸ்ட் 17 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்கிரன் வருகின்றார். கடக சுக்கிரனின் ஆதிக்க காலத்தில் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிரிகள் விலகுவர். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வெளிநாட்டு அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. சிம்மத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சம் விரயம் கூடுதலாகும். குடும்பச்சுமை அதிகரிக்கும். விருந்தினர் வருகையால் தொல்லை உண்டு. அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள்.

**கடக புதனின் சஞ்சாரம்**




ஓகஸ்ட் 3 ஆம் திகதி கடக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிநாதனாகவும் தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன் லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புத ஆதித்ய யோகம் உருவாவதால் கலைத்துறை மற்றும் கல்வித்துறை சம்பந்தப்பட்ட வகையில் நீங்கள் செய்த முயற்சிகள் பலன்தரும். குறுக்கீடு சக்தியாக இருந்தவர்கள் விலகுவர். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்கதாக அமையும்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 10 ஆம் திகதி சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். மறைவிடங்களுக்கு அதிபதியான செவ்வாய் இப்பொழுது மறைவிடமான 12 ஆம் இடத்திற்கு வரும்பொழுது விபரீத இராஜ யோகத்தை வழங்கப் போகின்றார். எனவே நினைக்க இயலாத இராஜயோகம் வரலாம். நீண்ட நாட்களாக முயற்சி செய்தும் முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையலாம். தூரதேசத்திலிருந்து அனுகூலத் தகவல் வரலாம். தொடர் கதையாய் வந்த கடன் சுமை குறையும்.

**குருவின் வக்கிர நிவர்த்திக் காலம்**

ஓகஸ்ட் 7 ஆம் திகதி குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார். 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவானின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த இடங்கள் எல்லாம் இனி பலம்பெறும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். தந்தை வழியில் உதவி கிடைக்கும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைந்து உறவைப் பலப்படுத்திக் கொள்வர். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் சுபச்செலவுகள் அதிகரிக்கும் மாதமாகும். துணிவும், தன்னம்பிக்கையையும் தளரவிடாமல் பார்த்துக்கொள்வது நல்லது. குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் கைகூடும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் பிணக்குகள் அகலும். தாய், தந்தையரின் ஆதரவு திருப்தியைத் தரும். காலம்காலமாக நடைபெறாதிருந்த காரியங்கள் குருவின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு நடைபெறும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி செலவிடுவீர்கள். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வதே நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். பணிச் சுமையும் கூடும். சக பணியாளர்களின் வேலையையும் நீங்கள் சேர்த்துப் பார்க்கும் சூழ்நிலை உருவாகும். வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபட்டால் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கும்.

## வரவு வந்த மறு நிமிடமே செலவு

(தொடரும்)

# தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை நடைமுறைப்படுத்துவது கூட்டமைப்பு மாத்திரமே

## ஸ்ரீநேசன் எம்.பி.பெருமிதம்



(வெல்லாவெளி)

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை நடைமுறைப்படுத்துவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

வெல்லாவெளியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதையை நிலைமைகளில் பலர் இழந்துபோன செல்வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுகின்றனர்.

ஆனால் அதற்கான விடயங்களைக் கையாள்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே இருக்கின்றது எனக் கூறிக்கொண்டிருப்பது மிக இலகுவான காரியம்.

ஆனால் அதனைச் செய்து முடிப்பதுதான் கடினமான விடயம். இங்கிருக்கின்ற பல அரசியல்வாதிகள் எல்லாவற்றையும் கூறிக்கொண்டிருப்பார்கள் எதனையும் செய்ய மாட்டார்கள்.

ஆனால் அவர்கள் கூறுகின்ற விடயங்களை ஒவ்வொன்றாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே செய்துகொண்டிருக்கின்றது. கல்முனை தொடக்கம் கன்னியா உட்பட எமது உரிமைப் பிரச்சினைகள், அரசியல் கைதிகள், காணாமலாக்கப்பட்டோர் என அனைத்திலும் எமது தலைமைகளே முற்றுமுழுதான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்" என மேலும் தெரிவித்தார். (ஐ)

# மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் கூட்டணி பணிமனையைத் திறந்து வைத்தார் விக்னேஸ்வரன்







(ஏறாவூர்)

தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பணிமனை நேற்று முன்தினம் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரனால் வைபவ ரீதியாக திறந்து வைத்து மாவட்ட பணிமனை பெயர்ப்பலகையும் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிர்வாக இணை உப செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான எஸ். சோமசுந்தரம், பொருளாளரும் பொருளாதார விவகாரங்களுக்கான உப செயலாளருமான பேரா சிரியர் வி.பி.சிவநாதன், நிர்வாக இணை உப செயலாளர் ஆ.ஆலலசுந்தரம், சட்ட விவகாரங்களுக்கான உப செயலாளர் திருமதி ரூபா சுரேந்திரன், மகளிர் அணி உப செயலாளர் திருமதி இளவேந்தி நிர்மலராஜ், ஊடகம் மற்றும் செயற்றிட்ட ஆக்கங்களுக்கான உப செயலாளர் த.சிற்பரன், தொகுதி அமைப்பாளர் இரா.மயூதரன், இளைஞர் அணி அமைப்பாளர் கே.கிருஸ்ணமீனன், வவுனியா மாவட்ட அமைப்பாளர் செ.சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அன்ரனி கெப்ரியல், கணக்காளர் ராஜா துரைசிங்கம் மற்றும் ஊடக உதவியாளர் சதீஸ் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# வைத்தியர் விவகாரத்தை இழுத்தடிப்பது முஸ்லிம்கள் குறித்து வீண் சந்தேகங்களை உருவாகும்

## சம்பிக்க சுட்டிக்காட்டு



(ஹெட்டிபொல)

பெண்ணின் கர்ப்பப்பையை அகற்றுவது சிங்கள மக்களுக்கு மாத்திரம் அல்ல உலகில் வாழும் எந்தவொரு இனத்தையும் பாதிக்கக் கூடிய உணர்பூர்வமான விடயமாகுமென தெரிவித்துள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, வைத்தியர் ஷாபி விவகாரத்தை விசாரணை என்ற பேரில் காலம் கடத்துவது சிங்கள பௌத்தர்கள் மத்தியில் முஸ்லிம் மக்கள் தொடர்பிலும் அந்த இனத்தை சார்ந்த வைத்தியர்கள் குறித்தும் சந்தேகங்களுக்கே வழி வகுக்கும் எனவும் தெரிவித்தார்.

ஹெட்டிபொல - படுவஸ்நுவர வாராந்த சந்தை தொகுதி மற்றும் பல்நோக்கி கட்டட தொகுதியை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்.

வைத்தியர் ஷாபி தொடர்பான பிரச்சினைக்கு ஒரு வார காலத்தில் தீர்வை காண முடியும். நீதிமன்றத்திற்கு சென்று பல வருட காலமாக இழுத்தடிப்பு செய்ய வேண்டிய விடயமல்ல. இலங்கை வைத்திய சபை மற்றும் அரசாங்கம் ஒன்றிணைந்து வைத்தியர் ஷாபி தொடர்பான பிரச்சினையை தீர்க்க முடியும்.

மேலும் சிங்கள மற்றும் தமிழ் வைத்தியர்களால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சைகள் குறித்து ஆய்வு செய்து அவற்றை வைத்தியர் ஷாபியுடன் மீளாய்வு செய்தால் மிக எளிதாக ஒரு தீர்மானத்திற்கு வந்து விட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# குறை'களை' பதிகம் 69

## வாழைக்குலைக்கு மருந்தடித்து வஞ்சகம் செய்திடாதீர்!

வாழ்வு தொடங்கும் திருமணத்தில்
வாசலில் வாழை கட்டுவது தம்பதியர்
வாழையடி வாழை போல்
வாழ வேண்டும் என்பதற்கே

**தொண்ணூறு கிட்ஸ் திருமணங்களில்...**

நான்கு நாட்களுக்கு முன்
வாழையோடு குலை வெட்டி
பத்திரமாய் லாண்ட்மாஸ்ரரில் ஏற்றி
அதற்கென வெட்டப்பட்ட
புகைக்கிடங்கில் புதைத்து
பொச்சு வைத்து நாளுக்கு நாலுதரம்
தவறாது புகை அடிக்க
நான்காம் நாளன்று வாழைக் குலையது
தங்கம் போல் ஜொலிஜொலிக்கும்

வாசலில் கட்டிய குலையில்
இளசுகள் இழுத்து விளையாடும்
சிறுசுகள் தின்று தீர்க்கும்
முதுசுகள் முறைத்துப் பார்க்கும்
திருமண வீடுகளில் அப்பப்பா
இதுவல்லவோ சந்தோசம்

**இன்று 2K கிட்ஸ் திருமணங்களில்...**

வாழைக்குலைக்கு இறக்குக் கூலியுடன்
ரேட் பேசி காசு கொடுத்து விட்டால்
வந்திறங்கும் வீட்டு வாசலிலே

இறங்கிய .குலை அன்றிரவு
பச்சையாய்க் கிடக்கும்
அடுத்த நாள் காலையில்
கனிந்து பழுத்துக் காட்சி தரும்

பூவிலிருந்து பிஞ்சாகி
பிஞ்சு முற்றிக் காயாகி
காய் முற்றிக் கனியாகும்
இதை முற்றிலும் முடித்து வைத்து
ம்ருந்தடித்து மறுநாள் பழுக்க வைக்கும்
வாழைக்குலையை வாசலில் கட்டினால்
அவர் வாழ்வு எப்படிச் சிறக்கும்

பச்சைக் காயை மருந்தடித்துப்
பழுக்க வைக்கும் பாதகத்தை
இரண்டு இதயங்கள் இணையும்
இன்பமான நிகழ்வில் ஏன் செய்வான்

நான்கு நாள் முடிந்ததும்
நான்காவது கடையில்
மருந்தடித்த குலை தொங்குகிறது
மக்கள் பூசிக்கும் பழமாக...

அன்பான உறவுகளே
இரு உறவுகளை ஒன்று சேர்க்கும்
அந் நன்நாளிலேனும்
பழத்துக்கு மருந்தடிக்கும்
பாதகச் செயலைச் செய்யாது விடுவோமே
அவர் வாழ்வை சிறக்கச் செய்வோமே!

**மாவை நா.கஜேந்திரன்**

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# கௌதாரி முனையில் மண் அகழ இடைக்காலத் தடை

(பரந்தன்)

பூநகரி கௌதாரிமுனை பகுதியில் மேற்கொள்ளப்படும் மண் அகழ்விற்கு 14 நாட்களிற்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்று தடை விதித்துள்ளது. சம்பவம் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூநகரி பொலிஸ் நிலையம் முன்பாக மக்கள் திரண்டு சட்டவிரோத மண் அகழ்வைத் தடுக்குமாறு கோரியிருந்தனர். இந்த நிலையில் கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸாரால் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை ஏற்ற நீதிமன்று மேற்கண்டவாறு இடைக்கால தடை பிறப்பித்துள்ளது. (9-312)




# சுகாதார ஊழியர்கள் போராட்டம்





(பரந்தன்)

உள்ளூராட்சி சபைகளின் சுகாதார ஊழியர்களுடைய நியமன சுற்று நிருபத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கோரி வடமாகாண சுகாதார ஊழியர்கள் கரைச்சிப் பிரதேச சபை முன்றலில் நேற்று தொடர் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். வட மாகாண அரச பொது ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் சுகாதார ஊழியர்களை நியமிப்பது தொடர்பில் வடமாகாணத்தில் கொண்டுவரப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமது போராட்டத்திற்கு தீர்வு வழங்கப்படும்வரை குறித்த போராட்டம் தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்படும் என அவர்கள் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவித்தனர்.

வடமாகாணத்தில் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு சாதாரணதரம் கோரப்பட்டுள்ளதாகவும், இதேவேளை தென்னிலங்கையில் பிரதேச சபைகளிற்கு ஆட்சேர்ப்பிற்காக அவ்வாறான கல்வி தராதரம் கோரப்படவில்லை எனவும் கரைச்சி பிரதேச சபையில் இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களை மீள இணைக்குமாறு தெரிவித்தும் மேற்குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் தொடர்பில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கருத்துத் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் சுகாதார ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கு சாதாரண தரத்தில் ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்படும் என வடமாகாண சுற்றுநிருபம் தெரிவிப்பதாகவும், அதே காலத்தில் தென்பகுதியில் வெளியான ஆட்சேர்ப்பு தொடர்பான சுற்றுநிருபத்தில் கல்வித்தரம் தொடர்பில் அவ்வாறான இறுக்கமான விடயங்கள் கோரப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். எனவே, ஊழியர்களின் போராட்டம் நியாயமானது எனவும், அவர்களின் நியமனம் தொடர்பில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-312,315)

# 10 ஆண்டுகளாக பேருந்து சேவை இல்லை

## புதுக்குடியிருப்பு மக்கள் கவலை

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து வற்றாப்பளை கேப்பாப்பிலவு ஊடாக புதுக்குடியிருப்பு நகரத்திற்கான பேருந்து சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என பொதுமக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து காலை 7 மணிக்கும் நண்பகல் 12மணிக்கும் வற்றாப்பளை- கேப்பாப்பிலவு- புதுக்குடியிருப்பு வழியாக யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இரு பேருந்துகள் பயணிக்கின்றன. மாலையில் ஒரு பேருந்து குறித்த வழித்தடத்தில் திரும்புகின்றது.

இதன் காரணமாக வற்றாப்பளை மகா வித்தியாலயம், கேப்பாப்பிலவு பாடசாலை, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளை பிலக்குடியிருப்பு, கேப்பாப்பிலவு, வற்றாப்பளை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு நகரத்திற்கும் புதுக்குடியிருப்பு நகரத்திற்கும் செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு மக்கள் செல்வதில் பலத்த போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பாக மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் ஆகியவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் கடந்த பத்தாண்டுகளாக ஆராயப்பட்ட போதிலும் பேருந்து சேவைகள் நடைபெறவில்லை எனப் பொது அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன. முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்புவரை மேற்படி வழித்தடத்தில் உள்ளூர் பேருந்து சேவை கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்பு நேற்றும் இன்றும் வவுனியாவில்

(குருமன்காடு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவும் தமிழ் பேசும் பொலிஸாருக்கான வெற்றிடத்தினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் பொலிஸாருக்கு தமிழ் இளைஞர் யுவதிகளை சேர்க்கும் நேர்முகப் பரீட்சையின் இறுதிநாள் தேர்வுகள் நேற்று வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரெட்ன தலைமையில் நடைபெற்ற பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான யு.எல். உடவத்த மற்றும் ரி. எம்.எஸ். தென்னக்கோன், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஓசித குணதிலக, வவுனியா உதவி பிரதேச செயலாளர் திருமதி பிரியதர்சினி சஜீவன் ஆகியோர் நடத்தியிருந்தனர்.

வவுனியாவில் இருநாட்கள் நடைபெறவுள்ள பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப்பரீட்சையில் 1500 இளைஞர்கள் நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். இதில் 111 பெண்களும் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பித்திருந்தனர். அத்துடன் வவுனியாவில் நேற்று நடைபெற்ற பொலிஸாருக்கான நேர்முகப்பரீட்சையில் இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடமையாற்றுவதற்கு 10 ஆயிரம் தமிழ் பொலிஸாருக்கான தேவை இருக்கிறது. இருந்தபோதும் மிகக் குறைவான அளவிலேயே தமிழ் இளைஞர்-யுவதிகள் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

எனவே இளைஞர்-யுவதிகள் பொலிஸ் திணைக்களத்தில் ஆர்வத்துடன் இணைந்து கொள்ள முன்வர வேண்டும் என பொலிஸ் திணைக்களத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்- யுவதிகளுக்கான மருத்துவப் பரிசோதனையானது வடபகுதி இளைஞர்களுக்கு காங்கேசன்துறையிலும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களுக்கு கொழும்பிலும் நடைபெறும் என வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரை காலமும் தென்னிலங்கையில் நடைபெற்று வந்த பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப்பரீட்சைகள் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# நந்திக்கடலை துப்புரவு செய்ய இதுவரை நிதி கிடைக்கவில்லை - அரச அதிபர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு நந்திக்கடலில் காணப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்கோ அல்லது வட்டு வாகல் பாலத்தினை அமைப்பதற்கோ இதுவரை எந்தநிதிகளும் கிடைக்கவில்லை என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடற்பகுதிகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற நந்திக்கடல் பகுதியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீன் பிடியை வாழ்வாதாரத்தொழிலாகக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சுனாமி அனர்தத்தின் போது நந்திக்கடல் ஆற்றின் கழிவுகள் நிரம்பி ஆழமற்ற பகுதியாக காணப்படுகின்றது.

இதனால் தமது தொழில்கள் பாதிக்கப்படுவதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்தகாலங்களில் தாங்கள் வருடத்தில் பத்து மாதங்கள் தொழில் செய்து வந்ததாகவும் ஆனால் இப்போதுள்ள சூழலில் மூன்று மாதங்களில் கடல் வற்றிக்காணப்படுவதுடன், தொழிலும் இழக்கப்படுவதாகவும் குறிப்பிட்ட மீனவர்கள் சட்டவிரோதத்தொழில்களும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

1954ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாரம்பரிய தொழில்களையே இதில் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்தக்கடலில் தொழில் செய்யும் உரிமை இந்தப் பிரதேசத்தைச்சேர்ந்த ஆண் வழித்தோன்றல்கள் அல்லது பெண் வழித்தோன்றல்களில் வருபவர்களே தொழில் செய்யமுடியும் என்று சட்டமுள்ள போதும் இப்போது வெளியிடங்களிலிருந்து வருகின்ற மீனவர்களால் சட்டவிரோதத்தொழில்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் இதனைக்கட்டுப்படுத்தக் கோரி இலங்கை ஜனாதிபதி அமைச்சுக்கள், அரசாங்க அதிபர் உள்ளிட்டோருக்கு மகஜர்களை கையளித்துள்ளபோதும் ஆனால் எந்தத்தீர்வும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். நந்திக்கடலை துப்புரவு செய்வதற்கு பலமுறை கோரிக்கை விடுத்தும் கடந்த ஆண்டிலேயே 1500 மில்லியன் நிதி கிடைக்கப்பெற்று அது துப்புரவு செய்யப்படாமல் நிதி திரும்பிச் சென்றுள்ளதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், ஏ-35 வீதியின் பிரதான பாலமாகக் காணப்படுகின்ற வட்டுவாகல் பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம், தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு கேட்டபோது, நந்திக்கடல் ஆற்றினை ஆழப்படுத்துவதற்கு நிதி கிடைத்தபோதும், வனஜீவராசிகள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதனால் அவற்றை விடுவிப்பதில் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாக அவற்றை செய்ய முடியாது போயுள்ளது. இம் முறையும் அதற்கான கோரிக்கையும் முன்வைத்துள்ளோம். அது கிடைக்கும் பட்சத்தில் அதனை விரைவாக முன்னெடுப்போம் என்றும் வட்டுவாகல் பாலத்தினை புனரமைப்பதற்கான கோரிக்கைகளையும் முன்வைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-315)



**முல்லைத்தீவு பழம்பாசிக் கிராமத்தில் மருத்துவ முகாம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாணம் சத்தியசாய் நிறுவனமும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும் இணைந்து பழம்பாசி கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்ற இம்மருத்துவ முகாமில் 250க்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளனர். (படம்-அக்கராயன் செய்தியாளர்)**

# புதுக்குடியிருப்பில் வெப்பம் அதிகரிப்பு

## மரங்கள் அழிக்கப்பட்டதால் இந்த அவலம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய நகரமான புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மரங்கள் அழிவடைந்ததன் காரணமாக வெப்பத்தை தாங்க முடியாத நிலையில் நகருக்குச் செல்லும் மக்கள் அவதியுறுகின்றனர்.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் புதுக்குடியிருப்பு நகரத்தில் பெருமளவு மரங்கள் நிழல் தந்தன. பெரும் போர் ஏற்பட்டு புதுக்குடியிருப்பு நகரம் பேரழிவு ஏற்பட்டு தற்போது அந்நகரம் அழிவுகளில் இருந்து மீண்டு வருகின்ற போதிலும் உயிர் தப்பிய மரங்களும் மின் இணைப்புகளுக்காக அழிக்கப்பட்டுள்ளன. ஆனால் புதுக்குடியிருப்பு நகரம் பாலைவனமாக தற்போது காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு நகரத்தில் மரங்கள் நடப்பட்டு குளிர்மைப் படுத்தப்பட வேண்டும் என்பது கடந்த பத்தாண்டுகளாக பொது அமைப்புகள் விடுத்து வரும் கோரிக்கை ஆகும். ஆனால் நகரத்தில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டதாகக் காணப்படவில்லை. ஆனால் கட்டடங்கள் மட்டும் அமைக்கப்பட்டு வருகின்றன. திட்டமிட்ட முறையில் புதுக்குடியிருப்பு நகரத்தில் மரங்கள் நடப்பட வேண்டும் என்பது பொது அமைப்புகளின் கோரிக்கை ஆகும். மரங்கள் நடுவதன் மூலமே புதுக்குடியிருப்பு நகரம் வளம் பெறும்.

இதற்கான முயற்சிகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# யாழ்.ஆயருக்கு மன்.இந்து மக்கள் பேரவை நன்றி தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு இந்து மக்கள் பேரவை யாழ். மறை மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 12 ஆம் திகதி தெல்லிப்பழை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 11 ஆம் ஆண்டு நினைவு வைபவ நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது திருக்கேதீஸ்வரம் தோரண வளைவு பிணக்கு தொடர்பான உள்ளார்ந்த கருத்தினை முன்வைத்தமைக்கு எமது பேரவை சார்பாகவும் மாந்தை மேற்கு இந்து சமூகம் சார்பாகவும் சிரம் தாழ்த்தி எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எல்லோருக்கும் முன்மாதிரியாக மதத் தலைவரின் மகத்துவத்தை உணர்ந்து மதம் கூறும் விழுமியங்களை கடைப் பிடித்து தூய உள்ளத்துடன் உங்களின் உயர்வான கருத்தினை பதிவு செய்தீர்கள்.

வரலாறுகள் எமக்கு பல பாடங்களை கற்றுத்தந்துள்ளது. கேதீச்சர ஆலயத்தின் வரலாறு தமிழ் இனத்தின் அடையாளம். ஆங்கிலேய ஆட்சிக்காலம் தொட்டு இன்று வரை விட்டுக் கொடுப்புடன் நடந்து வருகின்றோம்.

தமிழ் இனத்தின் வரலாறு எதனுடன் தொடர்புபட்டு தொன்மை மொழியாக, தொன்மை இனமாக உள்ளது என்பதை அறியாதவர் அல்ல நீங்கள்.

எமது சாத்வீகமான நியாயமான கோரிக்கையை உணர்ந்த காரணத்தினால் எமது நியாயத்தின் காரணத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

உங்களைப் போல் எமது மன்னார் வணக்கத்திற்குரிய ஆயர் ஆண்டகையும் செயற்படுவார்கள் என நம்புகின்றோம். பல வகையான விட்டுக்கொடுப்புடன் இனத்தின் பால் ஈர்க்கப்பட்டு செயற்படும் எமது உணர்வுகளை ஆண்டகை புரிந்து கொள்வார்கள்.

மீண்டும் முன்மாதிரியான உங்களின் செயற்பாட்டிற்கு தலை வணங்கி உங்களின் ஆன்மீகப் பயணத்திற்கு என்றும் இறைவன் துணைபுரிய வேண்டும் என வேண்டுகிறோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-285)

# இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் புலமைப் பரிசில்கள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்ற இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற பிள்ளைகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த சமூக பாதுகாப்பு திட்டத்தில் ஒரு வயது முதல் 18 வயது வரையான பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

கடந்த ஆண்டுகளில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளில் கடந்த வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 3 மாண வர்களுக்கு துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து இந்த புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. இதனூடாக அவர்களுடைய சேமிப்பு தொகைக்கு ஏற்ற வகையில் 5000 ரூபா முதல் 50,000 ரூபா வரையான பணப் பரிசுகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

சமூக பாதுகாப்பு சபையினுடைய மாவட்ட இணைப்பதிகாரி க.சஞ்சீவன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகர மூர்த்தி, துணுக்காய் பிரதேச செயலக கணக்காளர், சமூக சேவைகள் உத்தியோகத்தர், அரச அதிகாரிகள், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-281)

# அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் முல்லையில் சட்டவிரோத மணல் அகழ்வு

## பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காயின் பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களே தற்போது முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று குமுழமுனைக் கிராமத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளதாக குமுழமுனை பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கிராமங்களில் மணல் அகழ்வை மேற்கொண்டு பெரும் அழிவுகளை ஏற்படுத்தியவர்கள் வளமான குமுழமுனைக் கிராமத்திலும் மணல் அகழ்வில் ஈடுபட்டு கிராமத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு வனவளத் திணைக்களம், கனியவளத் திணைக்களத்தின் அதிகாரிகள் துணையாக உள்ளனர். மாவட்ட செயலகத்தின் சூழல் சட்ட அமுலாக்கல் கூட்டத்தின் தீர்மானங்களை மீறி மாவட்ட செயலகத்தின் அனுமதிகள் இல்லாமல் வனவளத் திணைக்களம், கனியவளத் திணைக்களம் என்பவற்றின் அனுமதிகளுடன் குறித்த நபர்கள் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு காணப்படுகின்றது. பழைய முறிகண்டி, புத்து வெட்டுவான், ஐயன்கன்குளம், மாந்தை கிழக்கின் கிராமங்களில் மணல் அகழ்வினால் எவ்வாறு அழிவுகள் ஏற்பட்டனவோ அதேபோன்று அழிவுகள் குமுழமுனையிலும் ஏற்படத் தொடங்கி இருக்கும் நிலையில் இதனைத் தடுப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (9-350)

# கிளிநொச்சியில் 4000 வீட்டுத்திட்டப் பயனாளிகள் நெருக்கடியில்;

## பருவ மழைக்கு முன்னர் கொடுப்பனவுகளை வழங்கக் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத் திட்டப் பயனாளிகள் 4018 பேர் வீடுகளை அமைக்க முடியாது நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

வீட்டுத்திட்டங்களுக்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான முதல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் ஏனைய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் தொடர்ந்து வீடுகளை அமைக்க முடியாது தெரிவு செய்யப்பட்டுள்ள வீட்டுத் திட்டப் பயனாளிகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் ஆரம்பம் முதல் மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் ஓடிஓடி வீட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் வைத்து மக்களுக்கு நம்பிக்கையளித்து வந்தனர். ஆனால் அந்த நம்பிக்கைக்கு அமைவாக வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. 1405 கொத்தணி வீடுகளும், 2613 வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் ஏனைய வீடுகளுமாக 4018 வீடுகள் அமைப்பதற்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதிலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது. பருவ மழைக்கு முன்கொடுப்பனவுகளை வழங்கி வீடுகளை புனரமைக்க உதவுமாறு தெரிவு செய்யப்பட்டுள்ள வீட்டுத்திட்டப் பயனாளிகள் கோரியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் ரி. சுபாஸ்கரனை தொடர்பு கொண்டபோது, தலைமை அலுவலகத்தில் இருந்து நிதி கிடைக்காமையே பயனாளிகளுக்கு கட்டம் கட்டமாக நிதியினை வழங்க முடியாதுள்ளது. இருப்பினும் இருபது மில்லியன் நிதி விரைவில் தருவதாக தெரிவித்துள்ளனர். எனவே குறித்த நிதி கிடைக்கப்பெற்றதும் பயனாளிகளுக்கு படிப்படியாக வழங்குவோம் எனத் தெரிவித்தார். (9-312-350)

# தேசிய போராளிகள் தினம் அனுஷ்டிப்பு









(நெளுக்குளம்)

ஈழப்புரட்சி அமைப்பின் ஈழ தேசிய போராளிகள் தினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. ஈழப் புரட்சி அமைப்பின் தலைவர் துஸ்யந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த இந்நிகழ்வானது வவுனியா, குறிசுட்ட குளத்தில் அமைந்துள்ள மரணித்த போராளிகளின் நினைவிடத்தில் இடம் பெற்றது. இதன்போது போராளியின் தாயார் ஒருவரினால் ஈகச் சுடர் ஏற்றப்பட்டதோடு மரணித்த போராளிகளின் திருஉருவப் படத்திற்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. அத்துடன் ஈழ தேசிய போராளிகள் தினத்தினை ஒட்டி இடம்பெற்ற உதைபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராலிங்கம், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், ஈழப் புரட்சி அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

## பாரதம்

# பீகார் - அசாம் மாநிலங்களில் கனமழை ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பு



(பீகார்)

பீகார் மற்றும் அசாம் மாநிலங்களில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறித்த மாநிலங்களில் பெய்துவரும் கனமழை காரணமாக இந்தியாவின் வடக்கு மற்றும் தென் கிழக்கு மாநிலங்களில் என்றும் இல்லாத வகையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் பீகாரில் 12 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் சுமார் 73 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 100க்கும் மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

மதுபானி மாவட்டத்தில் மட்டும் 23 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய பேரிடர் மீட்புப் படை தெரிவித்துள்ளது.

மேலும் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இதேபோன்று அசாம் மாநிலத்திலும் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகின்றமையினால், இங்குள்ள 33 மாவட்டங்களில் 18 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.


இங்கும் சுமார் 38 இலட்சம் பேர் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இங்கு உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அறுபதைக் கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மும்பையில் கட்டடமொன்றில் தீ! 84 பேர் பாதுகாப்பாக மீட்பு

(மகாராஷ்டிரா)

மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பை நகரில் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் மக்கள் அகப்பட்ட நிலையில் தீவிர மீட்புப் பணிகளைத் தொடர்ந்து 84 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.




மும்பையின், பந்த்ரா பகுதியில் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் கட்டடம் ஒன்றிலே நேற்று முன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு 14 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டு தீயணைக்கும் பணியுடன் மீட்புப் பணிகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, கட்டடத்தின் மேல்தளத்தில் பலர் தஞ்சம் புகுந்திருந்த நிலையில், கட்டடத்தில் சிக்கியிருந்த 84 பேரும் தீயணைப்பு வீரர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இந்த தீ விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## கர்நாடகாவில் நீடிக்கும் அரசியல் குழப்பம்

# பா.ஜனதா ஆட்சி அமைக்க வாய்ப்புத்தர வேண்டும்

(கர்நாடகா)

கர்நாடகாவில் பா.ஜனதா ஆட்சியமைக்க வாய்ப்புத் தர வேண்டும் என்று அம்மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரான எடியூரப்பா கோரிக்கை விடுத்துள்ளார்.




கர்நாடகாவில் நீடிக்கும் அரசியல் குழப்பம் குறித்து செய்தியாளர்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், கர்நாடக முதல்வர் குமாரசாமி தலைமையிலான மதசார்பற்ற ஜனதா தளம் காங்கிரஸ் கூட்டணி அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது. ஆனாலும் பெரும்பான்மையை நிரூபிப்பதாக கூறியதையடுத்து சட்ட சபையில் விவாதம் நடைபெற்று வருகிறது.

விவாதத்தை நீடிக்காமல் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஒருவேளை நம்பிக்கை வாக்கெடுப்பு மீதான விவாதம் சட்ட சபையில் நீடிக்கப்பட்டால் அது ஜனநாயகத்துக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் குமாரசாமி தலைமையிலான கூட்டணி அரசு தோற்பது உறுதி. இதனை அடுத்து, பா.ஜனதா அரசு ஆட்சியமைக்க வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும், நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட வில்லை என்றால் அடுத்த கட்ட நடவடிக்கையை பா.ஜனதா அரசு மேற்கொள்ளும் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஹொங்கொங்கில் போரா

# இனந்தெரியாதோர் சரம

(ஹொங்கொங்)

**ஹொங்கொங்கில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது இனந்தெரியாத குழுவொன்று சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்தும் சட்டத்திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் தொடக்கம் மீண்டும் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு மாபெரும் பேரணியை நடத்தினர்.

பேரணியாக சென்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்திய போது, இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், 'மிளகு விசிறல்' மேற்கொண்டும் போராட்டக்காரர்களை கலைத்தனர்.

இதற்கிடையில், யுவான் லாங் மாவட்டத்தில் உள்ள சுரங்க ரயில் நிலையத்தில் போராட்டக்காரர்களை குறிவைத்து இனந்தெரியாத குழுவொன்று சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

வெள்ளை நிற மேலங்கி மற்றும் முகமூடி அணிந்த குழுவினர், போராட்டத்தை முடித்து திரும்பியவர்களை மரக்கட்டை உள்ளிட்ட கூர்மையற்ற ஆயுதங்களால் கண்மூடித்தனமாக

# ஈரானில் சி.ஐ.ஏ.உளவு அ

# கூலிப்படையினர் 17 பே

## கைதாகிய சிலருக்கு மரணதண்ட

(டெஹ்ரான்)

ஈரான் நாட்டில் செயற்பட்டுவந்த அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு அமைப்பை சேர்ந்த கூலிப்படையினர் 17 பேர் கைது செய்யப்பட்டு அவர்களில் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் செய்து கொண்ட அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் கைவிடப்பட்டதையடுத்து ஈரான் அணு ஆயுத தயாரிப்பை தீவிரப்படுத்தி வருகிறது.

இதனால் ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடை களை அமெரிக்கா விதித்து வரு கிறது.

மேலும், தனது நேசநாடு களும் ஈரானை புறக்கணிக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத் துறையின் சார்பில் நிர்ப்பந்திக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை இருநாடுகளுக்கு இடையிலான மோதலுக்கு வழிவகுத்த நிலையில் ஈரானை மேலும் அச்சுறுத்தும் விதமாக மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்கா தனது போர்க்கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை குவித்து வந்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் உருவாகும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

# நேரு குடும்பத்தைச் சாரா

# காங்கிரஸ் கட்சி பிளவ

(டில்லி)

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பை யார் ஏற்பது என்பதில் சிக்கல் நிலை எழுந்துள்ள நிலையில், நேரு குடும்பத்தைத் தவிர்ந்த வேறு ஒருவர் கட்சியின் தலைவராக பொறுப் பேற்றால் 24 மணித்தியாலங்களில் கட்சி பிளவடையும் என அக்கட்சியின் சிரேஷ்ட நட்வர் சிங் கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், ராகுல் காந்தி இராஜினாமா செய்த பின்னர், நேரு குடும்பத்தில் இருந்து யாரும் தலைவர் பதவிக்கு

# வெளிநாடு

# போராட்டக்காரர்கள் மீது
# சரமாரியாகத் தாக்குதல்!




தாக்கியுள்ளனர். இதனால் ரயில் நிலையத்தில் பெரும் பதற்றமும், பீதியும் உருவானதுடன், தாக்குதலில் காயம் அடைந்தவர்கள் சிதறி ஓடினர்.

இந்தத் தாக்குதலில் 45 பேர் படுகாயமடைந்தனர். அருகில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு வைத்தியசாலைகளில் அனுமதித்தனர். ரயில் நிலையத்தில் இருந்த கண்காணிப்பு கமெராக்களில் தாக்குதல் நடத்தப்பட்ட காட்சிகள் பதிவாகியுள்ளன.

அந்த காணொலி ஹொங்கொங் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. தாக்குதல் நடந்தபோது பொலிஸார் ஏன் விரைந்து சென்று, அந்த குழு வினரை தடுக்கவில்லை என எதிர்க்கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதேவேளை போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துக்கு ஹொங்கொங் நிர்வாக தலைவர் கேரி லேம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (ஐ)

# வு அமைப்பின்
# 7 பேர் கைது
## தண்டனை விதிப்பு

இந்நிலையில், ஈரான் நாட்டில் செயற்பட்டுவந்த அமெரிக்காவின் சிஐஏ உளவு அமைப்பை சேர்ந்த கூலிப் படையினர் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஈரான் நாட்டில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு அமைப்பால் கட்டமைக்கப்பட்ட மிகப்பெரிய உளவு வலைப் பின்னல் தகர்க்கப்பட்டுள்ளது. இந்த அதிரடி நடவடிக்கையில் 17 உளவாளிகள் கைது செய்யப்பட்டு அதில் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்படுள்ளது.

கைது செய்யப்பட்ட உளவாளிகள் அனைவரும் ஈரான் நாட்டின் அணுசக்தி, இராணுவம், மென்பொருள் போன்ற துறைகளில் அரசுக்கு உதவும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றியுள்ளனர். அந்த நிறுவனங்கள் மூலம் ஈரானின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ரீதியிலான தகவல்களை திருடி அதை அெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்புக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த உளவு வேலையில் சி.ஐ.ஏ. அதிகாரிகள் யாரும் நேரடியாக ஈடுபடவில்லை. கைக்கூலிகள் மூலம் தகவல்களை பெற்று அவற்றை அமெரிக்க அரசுடன் பகிர்ந்துள்ளனர்.

இவ்வாறு அந்த செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்நிலையில், அமெரிக்க உளவாளிகள் 17 பேர் ஈரானில் கைது செய்யப்பட்டு அவர்களில் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# ராதவர் பொறுப்பேற்றால்
# வடையும் - நட்வர் சிங்

வரமாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

நேரு குடும்பத்தில் அல்லாதோர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றால் 24 மணி நேரத்தில் கட்சி நிச்சயம் பிளவுபடும்.

சோன்பத்ரா விவகாரத்தில் பிரியங்கா காந்தி செய்திருப்பதை பார்த்திருப்பீர்கள். அது மிகவும் அற்புதமானது. அவர் அந்தக் கிராமத்தில் இருந்தபடியே விரும்பியதை செய்து காட்டிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு மிகவும் தகுதியானவர் பிரியங்கா காந்திதான் என்பதற்கு, அங்கு அவர் செய்த செயல் சாட்சியாகிவிட்டது" எனக் தெரிவித்தார்.

17ஆவது மக்களவைக்கான நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. இந்த தோல்விக்கு பொறுப்பேற்று கட்சியின் மாநிலத் தலைவர்கள் பலர் பதவி விலகியிருந்ததுடன், கட்சியின் தலைவரான ராகுல் காந்தி இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து இடம்பெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் ராகுல் காந்தியை பதவி விலகவேண்டாம் என கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் வலியுறுத்தினர். இருப்பினும் தனது முடிவில் உறுதியாக இருந்த ராகுல் காந்தி தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்திருந்தார். அத்துடன் நேரு குடும்பத்தைச் சாராத ஒருவரை தலைவராக நியமிக்குமாறு வலியுறுத்தியிருந்ததுடன், இந்த விடயத்தில் தான் தலையிட மாட்டேன் என்றும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிரியா சந்தை மீது வான்தாக்குதல்
# 16 பொதுமக்கள் உட்பட 20 பேர் பலி



(டமாஸ்கஸ்)

வடமேற்கு சிரியாவிலுள்ள சந்தையொன்றின் மீது ரஷ்ய போர் விமானம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்ட வான் தாக்குதலில் 16 பொதுமக்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 45 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக சிரிய மனித உரிமைகள் அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இட்லிப் மாகாணத்தில் மாரெத் அல்நுமான் பிராந்தியத்திலுள்ள சந்தையில் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் இடிந்து விழுந்த கட்டடங்களின் இடிபாடுகளில் மேலும் பலர் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் காயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இறந்தவர்கள் தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. உயிரிழந்தவர்களில் மூவரின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இட்லிப் மாகாணத்தில் சிரிய மற்றும் ரஷ்யப் படையினரால் நடத்தப்பட்ட மற்றுமொரு தாக்குதலில் இளம் புகைப்பட ஊடகவியலாளரான அனாஸ் அல் டயாப் உள்ளடங்கலாக 18 பேர் பலியானதற்கு மறுநாள் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 2024 ஆம் ஆண்டில்
# நிலவுக்கு அனுப்பப்படும் முதல் பெண்மணி
## நாசா தகவல்

(வோஷிங்டன்)

2024 ஆம் ஆண்டு நிலவுக்கு முதல் பெண் அனுப்பப்படுவார் என்று அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா அறிவித்துள்ளது.

நிலவில் மனிதன் முதன் முறையாக கால்பதித்து 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், 2024ஆம் ஆண்டு நிலவுக்கு முதல் பெண்ணை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலவில் முதல் பெண்ணை தரையிறக்கும் நாசாவின் புதிய திட்டத்திற்கு 'ஆர்ட்டிமிஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

"2024 ஆம் ஆண்டில் 'ஆர்ட்டிமிஸ் 1' விண்கலம் நாசாவின் ஓரியன்ட் உந்துகணை மூலம் விண்ணில் ஏவப்பட்டு, முதல் பெண் நிலவில் கால் பதிப்பார்" என நாசாவின் நிர்வாக அதிகாரி ஜிம் பிரிட்டைன்ஸ்டைன் தெரிவித்தார்.

அத்துடன், 'ஆர்ட்டிமிஸ்' திட்டத்தின் மூலம் விண்வெளி துறையில் அமெரிக்கா மேலும் ஒரு சாதனையை படைக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஆயிரத்திற்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள் மீட்பு





(வத்திக்கான்)

வத்திக்கானில் இரண்டு புதை குழிகளில் ஆயிரக்கணக்கான எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.15 வயது சிறுமி 1983 ஆம் ஆண்டு ரோமில் காணாமல் போயுள்ளார். அவரை குடும்பத்தினர் 36 வருடங்களாக தேடி வந்தனர்.

இந்நிலையில், சிறுமி காணாமல் போனது குறித்த தடயங்களைத் தேடும் ஒரு பகுதியாக, வத்திக்கான் நகரில் கிரிப்ட் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு புதைகுழிகளில் ஆயிரக்கணக்கான எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வத்திக்கானில் வசித்த ஊழியர் ஒருவரின் மகளான இம்மானு வேல் ஆர்லாண்டி கோடை காலத்தில் இசை வகுப்பிற்கு சென்று வீடு திரும்பும் போது ரோமில் காணாமல் போயுள்ளார்.

இமானுவேல் ஆர்லாண்டியின் காணாமல் போன மர்மம் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இத்தாலியர்களைப் பிடித்திருந்த நிலையில் தற்போது எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# மகிந்த ராஜபக்ஷவின் தேவைக்காக எம்மால் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க முடியாது

## இம்ரான் மகரூப் கூறுகிறார்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை மகிந்த ராஜபக்ஷவின் தேவைக்கோ கட்சியை உடைக்க நினைப்பவர்களின் தேவைக்கோ எம்மால் அறிவிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.**





கிண்ணியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எந்த அரசாங்கத்தாலும் மேற்கொள்ள முடியாத அபிவிருத்தியை இன்று ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கம் மேற் கொண்டு வருகின்றது.

முன்னைய அரசாங்கத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் ஒரு கோடி, இரண்டு கோடி என்றே அபிவிருத்தி செய்ய முடிந்தது.

ஆனால் இன்று எமது அரசின் கம்பரெலிய திட்டத்தின் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் குறைந்தது 50 கோடிக்கு மேல் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கிறார்.

வைத்தியசாலைக்கு கட்டடங்கள் வழங்கப்படுகின்றன. "அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை" திட்டம் மூலம் பாடசாலைகளுக்கு கட்டடங்கள் வழங்கப்படுகின்றன. பிரதேச செயலகங்கள் புதிதாக அமைக்கப்படுகின்றன.

இவ்வாறு எல்லா அமைச்சு மூலமும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கம்பரெலிய திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள பெரும்பாலான கிராமிய வீதிகள் புனரமைக்கப்பட்டன.

இன்னும் இரண்டு வருடங்களுக்கு கம்பரெலியத் திட்டம் தொடருமாக இருந்தால் நாட்டில் உள்ள அனைத்துக் கிராமிய வீதிகளும் புனரமைக்கப்பட்டு விடும்.


இந்த அபிவிருத்திப் பணிகள் ஊடகங்களின் கண்களுக்கு தெரிவதில்லை.

அவர்கள் இப்போது தேடுவது நாட்டையும் கட்சியையும் நேசித்துப் பாதுகாக்கக்கூடிய ஒருவர் பொருத்தமான நேரம் வரும்போது ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவார்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, கரு ஜெயசூரிய, ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்கள் அனைவரும் ஒரே மேடையில் பிரசாரம் செய்வர்.

ஆகவே இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடரவேண்டுமாக இருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரை நீங்கள் ஆதரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கையின் புதிய வரைபடம்



(கொழும்பு)

சீனாவின் முதலீட்டில் உருவாக்கப்படும், துறைமுக நகர நிலப்பரப்பை உள்ளடக்கிய இலங்கையின் புதிய புவியியல் வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

இறுதியாக இலங்கையின் வரைபடம், 1995ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இந்நிலையில் புதிய வரைபடம் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளதாக, அளவையாளர் நாயகம் பி.சங்ககார தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வரைபடத்தில், கொழும்புத் துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், நெடுஞ்சாலைகள், மொரகஹகந்த நீர்த்தேக்கம் உள்ளிட்டவை புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வரைபடத் தயாரிப்புப் பணி மார்ச் மாதம் நிறைவு செய்யப்பட்டது. தற்போது அதனைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தப் புதிய வரைபடத்தில், துறைமுக நகரம் உள்ளிட்ட 25 ஆண்டுகளில் இடம்பெற்ற அனைத்து மாற்றங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் இருந்து வரைபடத்தை புதுப்பிக்கும் பணிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இணையத்தளத்தில்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் இவ்வருடம் தோற்றவுள்ள தனியார் பரீட்சார்த்திகள், இன்று முதல் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அனுமதி அட்டைகள் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் https://doenets.lk/ என்ற இணையத்தளத்தினூடாக பிரவேசித்து பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பதிவு செய்து பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தகவல் ஜோசியம்

என்ன இன்று ஒரு தகவல் வாசிப்பதற்குத் தயாராக இருக் கின்றீர்களா? எதற்கு இப்படிக் கேட்கின்றேன் என்றால் இது வரைக்கும் உங்களுக்கு தகவல்தானே சொல்லிக்கொண்டிருந்தேன். இன்றைக்கு உங்களுக்கு ஜோசியம் சொல்லப் போகின்றேன்.

நாடி ஜோசியம், ரேகை ஜோசியம் போல் இது தகவல் ஜோசியம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இதிலே நம்பிக்கை உள்ளவர்கள் மட்டும் கவனமாக வாசியுங்கள். நான் இங்கே இருந்த படியே உங்கள் முகத்தைப் பார்த்து பலன் சொல்லப் போகின்றேன். கவனமாகப் பாருங்கள். நான் சொல்வது எல்லாம் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது தானே என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். பலன் சரியாக இருந்தால் ஒரு வரி எழுதிப் போட்டு விடுங்கள். என்ன சரியா இதோ ஆரம்பிக்கின்றேன். நீங்கள் எப்படி என்றால் அடுத்தவர்கள் உங்களை விரும்ப வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற தேவை உங்களிடம் அதிக மாக இருக்கின்றது. நீங்கள் உங்களிடம் இருக்கின்ற நல்லது, கெட்டதை அடிக்கடி நினைத்துப் பார்க்கின்றீர்கள். அப்படி சுயமாக விமர்சனம் செய்கின்ற தன்மை உங்களுக்கு உண்டு.

உங்களிடம் திறமைகளிலே பலதை நீங்கள் பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக் கொண்டிருக்கின்றீர்கள்! என்ன சரி தானே? உங்களுடைய ஆளுமையிலே, திறமையிலே பல குறைகள் இருந்தால் கூட பொதுவாக நீங்கள் அதற்கெல்லாம் வேறு வகையிலே ஈடுபடுவீர்கள். வெளித்தோற்றத்திற்காக நீங் கள் ஒழுங்குக் கட்டுப்பாடு உள்ளவர்களாகத் தெரிகின்றீர்கள். இருந்தாலும் உள் மனது அப்படியில்லை. பத்திரமில்லாத உணர்ச்சி இருக்கின்றது. சஞ்சலம் இருக்கின்றது. அடிக்கடி உங்களுடைய முடிவுகளும் செயல்களும் சரியானவை தானா என்கின்ற சந்தேகம் உங்களுக்குத் தீவிரமாக ஏற்படுவது உண்டு.

நீங்கள் ஓரளவுக்கு மாற்றமும் புதுமையும் ஏற்பட வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள். கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும் உங் களை அடக்கி வைக்கின்ற போது உங்களுக்கு அதிருப்தி உண்டா கும். நாங்கள் சுயேட்சையாக சிந்திக்கக்கூடியவர் என்ற நினைப்பு உங்களுக்கு உண்டு. மற்றவர்கள் சொல்வதை சரியான ஆதார மில்லாமல் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.

மற்றவர்களிடம் நம்மைப் பற்றி அளவுக்கு மீறி வெளிப்படையாகப் பேசுவது புத்திசாலித்தனம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து வைத்திருக்கிறீர்கள். நடைமுறைச் சாத்தியமில்லாத சில ஆசைகள் உங்களிடம் உண்டு. சுய பாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமான இலட்சியங்களில் ஒன்று. சிலசமயம் நீங்கள் மற்றவர்கள் உங்களிடம் வந்து சகஜமாகப் பழகக்கூடிய அளவுக்கு நடந்து கொள்கின்றீர்கள்.

சிலசமயம் மிகவும் கவனமாக இருக்கின்றீர்கள். தயங்குகின்றீர்கள், ஒதுங்கிப் போகின்றீர்கள். என்ன இதுவரைக்கும் நான் சொல்லிக் கொண்டு வந்த ஜோசியம் எப்படி? உங்களுக்கு ஒத்து வருகின்றதா? அப்படி ஒத்து வந்தால் உடனே என்னைப் பாராட்ட ஆரம்பித்து விடாதீர்கள்.

நீங்கள் பாராட்ட வேண்டியது Ross Stagner ஐ. ஒரு மனோ தத்துவ நிபுணர். அவர் அமெரிக்காவிலே ஒரு உளவியல் சோதனை நடத்தினார். அந்த அடிப்படையிலேதான் இப்ப நான் உங்களுக்குப் பலன் சொன்னேன்.

எனக்கு ஜோசியமும் தெரியாது, ஒன்றும் தெரியாது. விடயம் என்ன தெரியுமா? பொதுவாக மனிதர்கள் பாராட்டுகளை விரும்புவார்கள். விமர்சனங்களை வெறுப்பார்கள். இதை மனதிலே வைத்துக் கொண்டு பலன் சொல்ல வேண்டும். அவ்வளவு தான். நாம் சொல்வதிலே பெருமளவு சாதகமானதாகவும் இலேசாக விமர்சிக்கிற மாதிரியும் இருக்க வேண்டும். மக்கள் நம்பி விடு வார்கள். ஒருவரை கருமி என்று சொல்வதை விட சிக்கனமா னவர் என்று சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வார். அவர் ஊதாரியாக இருந்தால் பெரிய செலவாளி தான். இருந்தாலும் நல்ல விடயங்களுக்குத்தான் செலவளிப்பீர்கள் என்று சொல்ல வேண்டும்.

சொல்கிற பலனெல்லாம் பொதுப்படையானது தான். இருந் தாலும் அதெல்லாம் தனக்கு மட்டுமே உரியவைவையாக கண்டு பிடிக்கப்படவை என்பது பிரமையை கேட்பவர்களுக்கு உண்டாக்க வேண்டும். அதுதான் ஜோசியரின் சாமர்த்தியம்.

இந்த பிரமைக்கு உளவியலாளர் ''பார்னம் உத்தி'' என்று பேர் வைத்திருக்கிறார்கள் **Barnum effect.**

பீனியஸ் பார்னம் **(Phineas T.Barnum)** என்று ஒருத்தர் 19 ஆம் நூற்றாண்டிலே அமெரிக்காவில் மிகவும் பிரபல்யமாக இருந்த ஒரு சர்க்கஸ் கம்பனியின் அதிபர். "உலகத்திலே ஒவ்வொரு நிமிடமும் ஓர் ஏமாளி பிறந்து கொண்டே இருக்கிறான்'' என்கிறது அவருடைய சித்தாந்தம்.

ஒவ்வொருத்தரையும் திருப்திப்படுத்துகிற அம்சங்களை கொஞ் சம் கொஞ்சமாக கலந்து கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியது தான் அவருடைய மகத்தான வெற்றிக்குக் காரணமாம்.

அந்த உத்தியை அடிப்படையாக வைத்துத்தான் இன்றைக்கு பலபேர் இந்த உலகத்திலே ஒவ்வொரு கூட்டத்தைக் கூட்டி பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படி பிழைப்பு நடத்திக்கொண்டிருந்த ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள். பல பேர் அவரிடம் வந்து அருள் வாக்கு கேட்பார்கள். அவரும் சொல்வார். ஒருநாள் ஒரு அம்மா கவலையோடு அவர் முன்பு வந்து நின்றார்.

இவர் அவரைப் பார்த்தவுடன் ''அம்மா... கவலைப்படாதே... சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போன உன் கணவர் சொல்லிக் கொள்ளாமல் ஒருநாள் வந்து சேருவான். தைரியமா இரு'' என்று ஆசீர்வாதம் செய்தார்.

அந்த அம்மா போனவுடனே அவருடைய சீடன் அவரிடம் வந்து "அது எப்படி சுவாமி அந்த அம்மாவினுடைய கணவர் சொல்லா மல் புறப்பட்டு போய்விட்டார் என்ற விபரத்தை அவ்வளவு சரியாச் கண்டு பிடித்தீர்கள்'' என்று கேட்டான்.

"அவளுடைய தொந்தரவு தாங்க முடியாமல் தலை மறைவாகி விட்ட அந்த அப்பாவி நான் தானப்பா!'' என்றார் அவர்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# முருங்கை

**Botanical Name:- Moringa oleifera**
**English Name:- Drumstick tree**
**Family Name:- Moringaceae**
**Sinhala Name:- Murunga**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

முருங்கையின் இலை, பூ, காய், விதை, ஈர்க்கு, பட்டை, பிசின் அனைத்துமே மருத்துவ குணங்கள் நிறைந்தவை

இலை:-

செறிமந்தம் வெப்பந்
தெறிக் குந் தலைநோய்
வெறிமுர்ச்சை கண்ணோய்
விலனும் - மறமே
நெருங்கையிலை யொத்த
விழி நேரிழையே! நல்ல
மருங்கையிலையை மொழி

இதனால் மிக்க மந்தம், உடற்சூடு, தலைநோய், வெறிநோய், மூர்ச்சை, கண்ணோய் ஆகியன நீங்கும்.

பூ:-


விழி குளிரும் பித்தம்போம்
வீறருசி யேகும்
அழிவிந் துவும்புஷ்டி
யாகும் - எழிலார்
ஒருங்கையக லாகற்
புடைலா னைகையே
முருங்கையின் பூவை
மொழி


இதனால் திக்குற்றமும் சுவையின்மையும் நீங்கும். கண் குளிர்ச்சியும் உண்டாகும்.

பிஞ்சு:-

சிக்குருக்க யப்பிஞ்சத்
திச்சுரத்திற் குஞ்சநிக்கும்
அக்குருக்கு ரப்பம்
அரோசிகட்குஞ் -
சுக்கிலத்தின்
கொச்சை யுறவருந்திக்
கூறுவதற்கு மாமதனைப்
பச்சை யுறவருந்திப்பார்.

இதன் பிஞ்சைச் சமைத்து தோலுடனுண்ணில் என்புச்சுரம், எலும்பை உருக்குகின்ற வெப்பம், சுவையின்மை, தாதுநட்டம் இவை நீங்கும்.





முருங்கைப்பூவைப் பாலில் இட்டு கொதிக்க வைத்து அருந்த விந்து விருத்தியடையும், நித்திரை யின்மை தீரும்.

முருங்கையிலையை வறுத்து அல்லது 50 கிராம் நல்ல கொழுந்துக்கீரையை நீராவியிலோ அல்லது போதுமான நீரிலோ வேக வைத்து சிறிது உப்பு மட்டும் சேர்த்து உபயோகித்தால் உடலுக்கு குளிர்ச்சியைத்தரும். மலத்தை இளக்கும். முடிஉதிர்வதை தடுக்கும். வயிற்றுப் புழுக்களைக் கொல்லும்.

இலைச்சாறு காமாலை, கண் எரிச்சல், கண்குத்து நோய்கட்கு சிறந்தது.



தாய்மார் இக் கீரையை சமையல் செய்து சாப்பிட மிகுதியான பால் சுரக்கும். கீழே விழுந்து அடி பட்டதால் ஏற்படும் இரத்தக்கட்டுக்கு அவற்றின் மீது முருங்கை இலைச்சாறு, நல்லெண்ணெய் ஆகியவற்றை கலந்து நன்கு காய்ச்சி சூடு ஆறிய பின் தடவ வேண்டும்.

முருங்கையிலையை ஆமணக்கெண்ணெயில் வதக்கி இடுப்பு வலி, வாதமூட்டுவலி ஆகியவற்றிற்கு ஒத்தடம் தடவல்.

முருங்கையிலை சாற்றுடன் எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து தடவ பருக்கள் மறையும்.

முருங்கையிலைச் சாறு, கரட் சாறு சமஅளவு கலந்து அருந்த குடல் சம்பந்தப்பட்ட கோளாறுகள், சிறுநீர் கோளாறுகளினால் உடலில் ஏற்படும் நீர்ச்சுரப்பு வீக்கம் குணமாகும்.

முருங்கையிலைகளை தனித்தெடுத்து பொரியல் செய்து நெய் சேர்த்து உண்டுவர விந்து பெருகும். வெண்ணெயைக் காய்ச்சி நெய் தயாரிக்கும் போது முருங்கையிலையை அதில் போட்டு இறக்கி வடிகட்டி பயன்படுத்தினால் நெய் மணம் மிகுந்தும் நீண்ட நாட்களுக்கு கெடாமலும் இருக்கும்.

முருங்கையின் புதிய பூவிலிருந்து கிடைத்த இரசத்துடன் 200 மில்லிலீற்றர் மோரைக் கலந்து அருந்த அஜீரணம் தீரும். உடற்சூடு தணியும்.

முருங்கைப் பூவைப் பருப்புடன் வேகவைத்து உண்டாலும் உடற்சூடு தணிந்து கண்ணெரிச்சல் நீங்கும் வாயில் நீர் ஊறலும் தீரும்.

முருங்கைப்பிஞ்சுகளை பொரியல் செய்து உண்பதால் மிகு வெப்பம் குறையும். இளம்பிஞ்சு சூப்புடன் தேனைக் கலந்து அருந்தினால் பாரிசவாயுவினால் உண்டாகும் ஒருபகுதி உணர்ச்சியின்மைக்கு பலத்தைக் கொடுக்கும்.

முருங்கைப்பட்டைச்சாறு, குப்பைமேனிச்சாறு இரண்டையும் சேர்த்து எண்ணெய் விட்டுக் காய்ச்சி கரப்பான், சொறி, சிரங்குகளின் மீது தடவ அவை நீங்கும். இதன் பிஞ்சுக்காய்களை பத்தியக் கறியாக பயன்படுத்துவதால் இரத்தம் விருத்தியாகும்.

முருங்கைப்பூவைப் பாலில் போட்டு கொதிக்க வைத்து பின்பு அதனை அருந்த உடல் சக்தி கிடைக்கும்.

முருங்கையிலையை உருவிய பின்பு காம்புகளை நறுக்கிப் போட்டு மிளகு இரசம் வைத்து சோற்றுடன் உண்ண கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கி சிறு நீரைப் பெருக்கும்.

முருங்கைக் கீரையுடன் எள் சேர்த்து குடிநீர் காய்ச்சி 30 மில்லிலீற்றர் அளவு தொடர்ந்து ஒரு வாரம் குடித்தால் தடைப்பட்ட மாதவிலக்கு குணமாகும்.

முருங்கைச் கீரைச்சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் 2 கிராம் காலை, மாலை தேனில் குழைத்து சாப்பிட்டால் இதயநோய்கள், அதி உயர் இரத்த அழுத்தம் குறையும்.

முருங்கைக்கீரைச் சாற்றில் மிளகு, அதிமதுரம் ஒரேயளவு எடுத்து இரண்டையும் ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கி தினமும் 2 கிராம் தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் இருமல், சளி குணமாகும்.

முருங்கைப்பிசின் 50 கிராம் சட்டியிலிட்டு 1 லீற்றர் நீர் விட்டு இரவு முழுவதும் ஊறவிட்டு மறுநாள் காலை அந்தத் தண்ணீரை குடித்து வந்தால் ஆண்மைக் குறைவு நீங்கி தாது விருத்தியாகும்.

முருங்கைப்பூ 5 கிராம், நெல்லிச்சாறு 10 மில்லிகிராம் விட்டு அரைத்து காலை, மாலை சாப்பிட்டால் பசி எடுக்கும். அத்துடன் உடற்சூடு தணியும்.

முருங்கை பிஞ்சு, மிளகு மஞ்சள், உப்பு சேர்த்து வேகவைத்து சாப்பிட்டால் இருமல் விலகும்.

முருங்கை வேர்பட்டை, திப்பிலி சம அளவு எடுத்து தினமும் 2 கிராம் தேனுடன் எடுக்க தொண்டையிலுள்ள கபம் நீங்கும்.

முருங்கை ஈர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு, நுணா ஈர்க்கு மூன்றையும் நீரிலிட்டு கொதிக்க வைத்து 30 மில்லிலீற்றர் குடித்தால் வயிற்றுப் பித்தம், செரியாமை நீங்கும்.



முருங்கை மர வேர்ப்பட்டை, புழுங்கல் அரிசி, உப்பு மூன்றையும் சம அளவு எடுத்து கட்டு மீது வைத்து கட்ட கட்டி உடையும்.

முருங்கை கீரையோடு, சிறிதளவு உப்பு சேர்த்து அவித்து 60 மில்லிலீற்றர் அளவு தொடர்ந்து 15 நாட்கள் குடிக்க மூட்டு வலி நீங்கும்.

100 கிராம் முருங்கை யிலையிலுள்ள சத்துக்கள்:-

புரதம் 6.7 கிராம், காபோவைதரேற்று 12 கிராம், கொழுப்பு 1.7 கிராம், கல்சியம் 440 மில்லிகிராம், பொசுபரசு 70 மில்லிகிராம், நார்ச்சத்து 0.9கிராம், இரும்பு 7.0 மில்லிகிராம், கரோட்டின் 6780மில்லிகிராம்.

100கிராம் முருங்கைப் பூவிலுள்ள சத்துக்கள்:-

புரதம் 3.6 கிராம், கொழுப்பு 0.8 கிராம், காபோவைதரேற்று 7.1 கிராம், கல்சியம் 51 மில்லிகிராம், பொசுபரசு 900 மில்லிகிராம், நார்ச்சத்து 1.3கிராம், ஈரலிப்பு 85.9 கிராம்.

100 கிராம் முருங்கை காயிலுள்ள சத்துகள்:-

புரதம் 2.5 கிராம், கொழுப்பு 0.1கிராம், காபோவைதரேற்று 3.7 கிராம், நார்ச்சத்து 4.8கிராம், கல்சியம் 30 கிராம், பொசு பரசு 110 மில்லிகிராம், இரும்பு 5.3 மில்லி கிராம், கரோட்டின் 110 மில்லிகிராம், தயமின் 50 மில்லிகிராம், உயிர்ச்சத்து A 120 மில்லிகிராம்.

முருங்கைக் கீரை தாய்ப்பால் சுரப்பை தூண்டக் கூடியது. எனவே தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு அவசியமாகும். பிரசவித்த பெண்களுக்கு பத்திய கறியிலும் முருங்கை பிஞ்சு முக்கிய இடம் பெறுகிறது. முருங்கை பிஞ்சில் உயிர்ச்சத்து A , கல்சியம் அதிகளவு உண்டு.

முற்றிய முருங்கையில் அதிகளவு கல்சியம், ஒட்சாமிக்கமிலம் இருப்பதால் சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் இதனை உண்பதை தவிர்க்க வேண்டும்.

## அமெரிக்க பிரஜாவுரிமையைக் கைவிட்டவர்களின் முதல் காலாண்டுப் பட்டியலில் கோத்தாவின் பெயரில்லை

(கொழும்பு)

இவ்வருடத்தின் மார்ச் 31 வரையான முதல் காலாண்டின் போது அமெரிக்கப் பிரஜாவுரிமையைக் கைவிட்டவர்கள் தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் இல்லை என்று தெரியவந்துள்ளது.

உள்நாட்டு இறைவரி சேவையினால் 13 மே 2019 திகதியிட்டு வெளியிடப்பட்ட ஒரு அறிவித்தலாக அமெரிக்க சமஷ்டிப் பதிவு இணையத்தளத்தில் இந்தப் பட்டியல் காணப்படுகின்றது.

31 மார்ச் 2019 வரையான முதல்காலாண்டில் அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் பெறப்பட்ட தகவலில் அமெரிக்கப் பிரஜாவுரிமையை இழந்த ஒவ்வொருவரினதும் பெயர்கள் உள்ளடக்கியதாக இந்தப்பட்டியல் காணப்படுகிறது.

இதேவேளை 17 ஏப்ரல் 2019 இல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கோத்தபாய ராஜபக்ஷ அந்நாட்டுப் பிரஜாவுரிமையை துறப்பதற்கு ஆவணங்களைத் தாக்கல் செய்தாரென்று கலிபோர்னியாவின் மத்திய மாவட்டத்திற்கான மாவட்ட நீதிமன்றத்தில் முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தாக்கல் செய்த பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது காலாண்டில் அமெரிக்கப் பிரஜாவுரிமையை கைவிட்டவர்களின் பெயர்ப்பட்டியல் வெகு விரைவில் வெளிவரும். (ஐ)

# தொடர்மாடி வீடுகளின் (Condominium) கூட்டுச் சொத்துரிமையும் அதன் பராமரிப்பும்

08


**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு.
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



முகாமைத்துவகழகம் (Management Corporation) திறம்படச் செயற்படாமை, பொதுக்கூறுகளை/ பொது அம்சங்களைத் திருத்துவதற்கு சொத்தாண்மைக்காரர் களிடம் இருந்து போதிய அளவு பணம் கிடையாமை, கிடைக்கப்பெற்ற பணத்தை சரியான முறையில் பயன் படுத்தாமை, தனி அலகு உரிமைக்காரர்களுக்கிடையே உள்ள ஒற்றுமையின்மை போன்ற பல குறைபாடுகள் இருந்த போதும் மக்கள் தொடர்மாடி மனைகளை விரும்புவ தற்கு முக்கிய காரணம் அவர்களுக்குரிய பாதுகாப்பே யாகும்.

அதுமட்டுமல்ல சில வருடங்களாக, கொழும் பையும் அதனைச் சேர்ந்த பகுதிகளுக்கும் தொடர் மாடிக் குடியிருப்பு சந்தை ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள் ளது. அநேகமான இளம் சமுதாயங்களும் கூட அவர் களது அவசர வாழ்க்கைச் சூழல் காரணமாக தொடர் மாடிக் குடியிருப்பு வாழ்க்கையை விரும்புகிறார்கள்.

அதே நேரத்தில் வயது போனவர்களும் கூட இந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். காரணம் அவர்களாக வெளிப்புற வேலைகள் எதையும் செய்யத் தேவை இல்லை என்பதாகும். மேலும் கடந்த பல வருடங்களாகக் கட்டப்பட்டுவரும் தொடர்மாடி மனை களைச் சுற்றிவர மதில்கள் கட்டப்பட்டிருப்பதும் பாது காப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருப்பதும் விசேட அம்சங்களாகும்.



**ஒரு தொடர் மாடியில் வீட்டு உரிமையாளர் கள் எல்லோரும் சேர்ந்து முகாமைத்துவ கழகம் (Management Corporation) ஒன்றை உருவாக்க வேண்டும். வீட்டு உரி மையாளர்கள் எல்லோரும் அதன் அங்கத்தவர்கள். தொடர்மாடியைப் பராமரிக்க முகாமைத்துவ கழகம் தமது அங்கத் தவர்களிலிருந்து ஒரு செயற்பாட்டுக் குழுவை (Council of Managment Corporation) ஆண்டு தோறும் நியமிக்கும்.**

**முகாமைத்துவ கழகங்களை (Managment Corporation) கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார் சபையில் (Condominium Management Authority) பதிவு செய்தல் வேண்டும்.**

**கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் (Condominium Management Authority) ஒரு அரச சார்பு நிறுவனம்**

## முகாமைத்துவ கழகத்தின் செயற்பாட்டுக் குழு ( Council of Management Corporation)

ஒரு தொடர்மாடியில் உள்ள சகல அலகினதும் (வீடுகளினதும்) உரிமையாளர்களும் (வாடகைக்கு இருப்பவர்கள் அல்ல) முகாமைத்துவ கழகத்தின் உறுப்பினர்களாவர். இம் முகாமைத்துவக்கழகத்தின் உறுப்பினர்களிலிருந்து வருடந்தோறும் ஒரு செயற் பாட்டுக் குழுவை (Council of Management Corporation) அவ்வுறுப்பினர்கள் வருடாந்தக் கூட்டத்தை வைத்து தெரிவுசெய்ய வேண்டும். அக் குழுவில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலும் குறையாமலும் 14 இலும் கூடாமலும் இருக்க வேண்டும். ஒரு தொடர்மாடியில் உள்ள மொத்த உரிமையாளர்கள் மூன்றிலும் குறைவாக இருந்தால் அவர்கள் எல்லோரும் செயற்பாட்டுக் குழுவில் உறுப்பினர்களாவர். முகாமைத்துவ கழ கத்தின் செயற்பாட்டுக்குழு எவ்வாறு தொழிற்பட வேண்டும், ஆண்டறிக்கை சம்பந்தமான விடயங்கள் பற்றிய மேலதிக தகவல்கள் தேவைப்படின் கூட்டு ரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் இணையத்தளத்தில் பார்வையிடமுடியும். அவ் இணையத்தளத்தில் எந்தவொரு தகவல்களும் தமிழில் இல்லாதது கவலைக்குரிய விடயமாகும்.


## முகாமைத்துவ கழகம்- வருடாந்த பொதுக்கூட்டத்தின் முக்கியத்துவம்.

முகாமைத்துவ கழகத்தின் (Management Corporation) பிரதான பொறுப்புகள், உரிமையாளர் சொத்துக்களில் பொதுக் கூறுகள் (common elements), பொது வசதிகள் (common amenities) போன்ற வற்றைப் பராமரிப்பதுடன், உகந்த சேவையை வழங் குவதற்கு அவற்றை நல்ல மற்றும் சேவைக்குரிய நிலையில் வைத்திருப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை சம்பந்தமான முடிவுகள் ஆண்டுப் பொது கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டும். இப் பொது கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் உறுப்பினர்களால் விவாதிக்கப்பட வேண்டும்.

❖ அடுத்த வருடத்திற்கான செயற்பாட்டுக் குழு (Council of Management Corporation) நியமனம்.
❖ சேவைகள் வழங்குவதற்கான செலவினங்கள் (நீர், மின்சாரம் மற்றும் மின் உயர்த்தி) மற்றும் பராமரிப்பு.
❖ அடுத்த வருடம் பொதுக் கூறுகளில் (common elements) மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலை கள் மற்றும் மறுசீரமைப்புகள் பற்றிய கலந்துரையாடல்.
❖ இந்த நோக்கங்களுக்காக செலவிட வேண்டிய தொகை.
❖ அவ்வாறு ஏற்படும் செலவுகளுக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளும் முறை.
❖ செலவுத்தொகையில் ஒவ்வொரு உறுப்பினரதும் / உரிமையாளரினதும் பங்களிப்பு.
❖ மாத சந்தா கட்டணம்.
❖ அங்கீகரிக்கப்படாத கட்டமைப்புகள் அகற்றப்படு தல், ஏதேனும் இருந்தால்.
❖ கட்டடத்தின் பாதுகாப்பு தொடர்பான மற்ற விவகா ரங்கள் (காவல், காப்பீடு போன்றவை).
❖ கூட்டத்திற்கு முந்திய வருடசெலவு கணக்கு மற்றும் கணக்காய்வு அறிக்கை சம்பந்தமான ஆய்வு மற்றும் கலந்துரையாடல். கணக்கு அறிக்கை மற்றும் கணக்குகள் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**பொதுநல வசதிகள் சபை (Common Amenities Board) ஆல் தொடர்மாடிகளின் பொதுவசதிகள், பராமரிப்புக்கள், பொதுக்கூறுகளின் திருத்தவேலைகள் செய்யப்பட்டு வந்தபோதும், 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இருபிடிக்கூறுகள் சொத்தாண்மை திருத்தச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டு, பல முக்கிய கடமைகளையும் பொறுப்புக்களையும் தொடர்மாடிக் கட்டடத்திலுள்ள சகல தனி வீடுகளின் உரிமையாளர்களையும் உள்ளடக்கிய ஒரு முகாமைத்துவ கழகத்திடம் (Management Corporation) ஒப்படைக் கப்பட்டுள்ளது. இம் முகாமைத்துவ கழகம் ஒரு செயற்பாட்டுக் குழுவை ( Council of Management Corporation) நியமித்து அதன் மூலம் பொதுக் கூறுகள் (common elements) , பொது வசதிகள் (common amenities) போன்றவற்றைப் பராமரித்தல், உகந்த சேவையை வழங்குவதற்கு அவற்றை நல்ல மற்றும் சேவைக்குரிய நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றைச் செய்து வருகின்றது.**

**ஒரு தொடர்மாடிக் கட்டடத்தின் பராமரிப்பும் நிர்வாகமும்**




## கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகாரசபையில் (Condominium Management Authority) முகாமைத்துவ கழகங்களை (Management Corporation) பதிவுசெய்தல்.


2005ஆம் ஆண்டில் இருந்து 2012ஆம் ஆண்டு வரை கூட்டுரிமை ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் (Condominium Management Authority) பதியப்பட்ட முகாமைத்துவ கழகங்களின் (Management Corporation) எண்ணிக்கை அட்டவணை -1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை -1**

| ஆண்டு | பதியப்பட்ட முகாமைத்துவ கழகங்களின் எண்ணிக்கை | கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் | கொழும்பு மாநகர சபை எல்லைக்கு வெளியே |
|---|---|---|---|
| 2005 | 65 | 58 | 07 |
| 2006 | 16 | 14 | 02 |
| 2007 | 49 | 41 | 08 |
| 2008 | 62 | 39 | 23 |
| 2009 | 50 | 37 | 13 |
| 2010 | 11 | 07 | 04 |
| 2011 | 121 | 89 | 32 |
| 2012 | 147 | 51 | 96 |
| | 521 | 336 | 185 |

(தொடரும்...)

# சமல் ஜனாதிபதி வேட்பாளர்-மகிந்த பிரதமர் நிலைப்பாட்டில் மாற்றமில்லை -வாசு திட்டவட்டம்



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர், சமல் ராஜபக்ஷவாக இருக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லையெனவும் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்படுதல் அவசியம் நிகழவேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**



19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரம் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளதாகவும் பிரதமருக்கு அதிகாரம் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியல்வாதியாக வரத் தயாராக இருந்தால், அவரைச் சூழ மக்கள் சக்தியொன்றை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குமார வெல்கம எம்.பி. தான் நாட்டின் தலைவராக வரத் தயார் என விடுத்துள்ள அறிவிப்பு அர்த்தமற்ற ஒன்று என்றும், இதுபோன்றவர்கள் மன்னர்களின் காலங்களிலும் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை கொள்வனவு குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து



(கொழும்பு)

எந்தவொரு கொடுப்பனவும் வழங்காமல், அரசாங்கத்தின் பொறுப்பில் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட, நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை, 3.5 பில்லியன் ரூபாய் செலுத்தி கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தி, தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட ஏனைய பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (ஐ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1786

### விக்னா

தாய்க்குப் பின் தாரம். ஆனால் தந்தைக்குப் பின் தந்தை மட்டுமே. அந்த இடத்தை யாராலும் நிரப்ப முடியாது. அவருக்கு நிகர் அவரே



### சிவா

சாராயம் விற்றவன் சக்கரவர்த்தியாக வாழ்வதும் சாப்பாடு தரும் விவசாயி சாப்பாடின்றி மடிவதும் எங்கள் நாட்டில்தான்



### ராம்




### கௌரி

தன்னை நல்லவராகக் காட்டிக்கொள்ள அடுத்தவரைக் கெட்டவராகச் சித்திரிக்கும் எவரும் நீண்டநாள் நல்லவர் வேடத்தில் சுற்ற முடியாது



### சங்கரி

பேசி முட்டாளாவதைவிட சில நேரங்களில் பேசாமல் இருப்பதே புத்திசாலித்தனம்



### ராசாத்தி

பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் பெரும்பாலும் முதியோர் இல்லத்திற்குச் செல்வதில்லை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தர்மபுரம் பிரதேச வைத்தியசாலை தரம் உயர்த்தப்படுமா?

கிளிநொச்சி மாவட்டம் 2009 இற்கு முன்பு தொடர் யுத்தப் பிரதேசமாக இருந்தது. அதனால் யுத்தத்தின் அனைத்துத் துயரங்களையும் முழுமையாக அனுபவித்த ஒரு பிரதேசமிது. இங்கே மருத்துவச் சேவைகளுக்காக மாவட்ட பொது வைத்தியசாலையும் முழங்காவில் தள வைத்தியசாலையும் அக்கராயன், தருமபுரம், பூநகரி, பளை ஆகிய இடங்களில் 4 பிரதேச வைத்தியசாலைகளும் உள்ளன. இதைவிட உருத்திரபுரம், வன்னேரிக்குளம், வட்டக்கச்சி, கண்டாவளை, பிரமந்தனாறு போன்ற இடங்களில் சில சிறு வைத்திய நிலையங்களும் இயங்கி வருகின்றன. ஆனையிறவு வைத்தியசாலை இன்னும் அங்கே மீள இயங்கவில்லை. ஆனையிறவு உப்பளம் சீராக இயங்கி, அந்தப் பகுதியில் மக்கள் முறையாக மீளக்குடியேறினால்தான் ஆனையிறவு வைத்தியசாலை மீள இயங்கக் கூடியதாக இருக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த சனத் தொகை 145,167 பேராகும். குடும்பங்களின் எண்ணிக்கை 46,172. இவ்வளவு பேருக்கும் இந்த வைத்தியசாலைகளிலேயே சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலதிக சிகிச்சைக்கு பெரும்பாலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கே அம்புலன்ஸ்கள் ஓடுகின்றன. அவசர நோயாளிகள் அங்கேதான் போகிறார்கள். மேலதிக சிகிச்சையைப் பெறுவதற்கும் அங்கேயே செல்ல வேண்டும். பெரியாஸ்பத்திரி என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சொல்வதற்கான காரணம், அது வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கான பொது வைத்தியசாலையாக — மேல் வைத்தியசாலையாக இருப்பதால்.

கிளிநொச்சியில் மாவட்ட வைத்தியசாலைக்கு அடுத்ததாக அதிக நோயாளர்களைச் சந்திப்பது தருமபுரம் பிரதேச வைத்தியசாலையே. இது கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ளது. கரைச்சிக்கு—கிளிநொச்சிக்கு அடுத்து அதிக சனத்தொகை உள்ள பிரதேசம் தருமபுரமே. தருமபுரத்தை மையமாகக் கொண்ட விசுவமடு, கல்லாறு, உழவனூர், சுதந்திரபுரம், றெட்பானா, கண்டாவளை, புளியம்பொக்கணை, பெரியகுளம், கல்மடு, கல்மடு நகர், இராமநாதபுரம் கிழக்கு, உடையார்கட்டு, முரசுமோட்டை போன்ற பகுதிகள் உள்ளன. இதனால் தருமபுரம் வைத்தியசாலை, இங்கே வசிக்கும் மக்களுக்கு மட்டுமன்றி பரந்தன் தொடக்கம் உடையார்கட்டு, சுதந்திரபுரம் வரையுள்ள பிரதேசங்களில் வசிக்கும் மக்களுடைய வைத்திய சேவைக்கான முதல் தெரிவாகவுள்ளது.

அதாவது, தருமபுரம் வைத்திய சாலை கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் பிரதேச மக்களுக்கும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாஞ்சோலை (முள்ளியவளை) வைத்தியசாலையை விட தருமபுரம் வைத்தியசாலைக்கு செல்வது போக்குவரத்து மற்றும் ஏனைய விடயங்களை நோக்கும் போது எல்லைக் கிராம மக்களுக்கு இலகுவாக உள்ளதே இதற்குக் காரணமாகும்.

எனவே, தனது சுகாதார சேவைப் பிரிவினுள் அடங்குகின்ற மக்கள் தொகையை விட மேலதிகமான மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய நிலையில் தருமபுரம் வைத்தியசாலை உள்ளது. ஏறத்தாழ 40,000 பேருக்கான வைத்திய சேவையை வழங்க வேண்டியுள்ளது. வைத்தியசாலைத் தகவலின்படி நாளாந்தம் 150 இற்கு மேற்பட்ட வெளி நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருகை தருகின்றனர். விடுதி வசதி போதாத நிலையிலும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறவேண்டியவர்களின் எண்ணிக்கை எப்போதும் மீறியே காணப்படுகிறது. இவ்வளவுக்கும் இங்கே எல்லாவற்றுக்குமாக இரண்டே இரண்டு வைத்தியர்களே கடமையாற்றுகின்றனர்.

வைத்தியசாலையின் பிரமாணப்படி இரண்டு வைத்தியர்களுக்கான இடமே குறிப் பிடப்பட்டுள்ளது. ஆனால், இது சனத்தொகை குறைந்திருந்த காலத்தின் பதிவு. இப்போது சனத்தொகை பல மடங்கு அதிகரித்து விட்டது. நோயாளர் தொகையும் கூடி விட்டது. ஆகவே இவற்றைக் கவனத்திற்கொண்டு இந்த வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டிருக்க வேண்டும். அப்படித் தரமுயர்த்தப்படும்போது கூடுதலான வைத்தியர்களும் பிற பணிகளுக்கான உத்தியோகத்தர்களைக் கொண்ட ஆளணியும் பிற வசதிகளும் கூடியிருக்கும். இன்னும் இது நடக்கவில்லை. இப்பொழுது இந்த வைத்தியசாலை B தரத்தில் உள்ளது. இதற்கு அனுமதிக்கப்பட்ட வைத்தியர்கள் 4 ஆகும். தாதிய ஆளணி 6. B இற்குரிய ஆளணிகளும் பௌதீக வளங்களும் பெறப்பட்டால் மட்டுமே அடுத்த கட்டமான A இற்குத் தரமுயர முடியும். சனத்தொகை கூடிய தருமபுரம் கவனிக்கப்படாதிருப்பதற்குக் காரணம் என்ன? கடந்த மாகாண சபையின் ஆட்சிக்காலத்தில் கூட இந்த விடயம் கவனிக்கப்படாமல் விடப்பட்டது துரதிர்ஷ்டமானது. இத்தகைய நிலையில், இந்த வைத்திய சாலையில் காணப்படும் வசதிகள் மற்றும் ஆளணி வளம் போன்றன கூடிய விரைவில் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம்.

இப்போது வைத்தியசாலைக்கான புதிய வெளிநோயாளர் பிரிவிற்கான கட்டடம் மட்டுமே கட்டப்பட்டு அதுவும் இன்னும் திறக்கப்படாமல் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படுகின்றது. தற்போது பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளராகக் கடமையாற்றும் வைத்தியக் கலாநிதி சி.குமரவேலின் முயற்சினால் இதை விரைவில் திறந்து வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வைத்தியசாலைத் தகவல்கள் கூறுகின்றன. வைத்தியசாலைக்குத் தேவையான, நோயாளர் தங்கி சிகிச்சை பெறுவதற்கான நோயாளர் சிகிச்சை விடுதிகளைக் கட்டும் பணிகள் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நோயாளர் விடுதிகளின்றி வைத்தியசாலையை புதிய இடத்தில் செயற்படுத்த முடியாது என்பது இன்னொரு பிரச்சினை. இதனால் பழைய கட்டடத்திலேயே வைத்தியசாலை இயங்கி வருகிறது. அப்படி இயங்குவதால் போதிய வசதிகளின்றி நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வைத்தியசாலையில் இரண்டே இரண்டு வைத்திய அதிகாரிகளும் மூன்று தாதிய உத்தியோகத்தர்களும் கடமையாற்ற வேண்டியிருப்பதால் வைத்திய சாலையில் சேவையைப் பெறுகின்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சேவைக்கான ஆளணி குறைந்து பயனாளர் அதிகரிக்கும்போது சேவையில் குறைபாடுகள் நேர்வதற்கான சந்தர்ப்பங்களே அதிகமுண்டு.

ஆனாலும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் குறைபாடுகள் நேராமல், அதை நோயாளர்கள் உணராத வகையில் வைத்தியசாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. இது சேவைப் பளுவையே கூட்டியுள்ளது. இந்த நிலை தொடர்ந்தும் நீடிக்க முடியாது. இந்த நிலையிலும் அண்மையில் நோயாளர் நலன் மற்றும் வைத்தியசாலையின் வளர்ச்சி கருதி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போதைய வைத்திய அதிகாரி சஞ்ஜயன், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் குமரவேல் ஆகியோரின் முயற்சி இதைச்சாத்தியப்படுத்தியிருக்கிறது.

ஒப்பீட்டளவில் 45,483 வெளி நோயாளர்களுக்கு (நாளொன்றுக்கு சராசரியாக 125 பேர்) சிகிச்சையளிப்பதற்கு பகல், இரவுக் கடமைகளுக்கு இரண்டு வைத்திய அதிகாரிகள் மட்டும் கடமையாற்றும் நிலையில் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்ளக்காத்திருக்கும் நேரம் அத்தோடு சிகிச்சையின் தரம் என்பன கேள்விக்குள்ளாகின்றன. இது கடந்த ஆண்டு விபரம். தற்போது முன் சொன்னவாறு நாளொன்றுக்கு 150 நோயாளிகள் வருகை தருகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலைக்குரிய வசதிகள் போதிய அளவில் மேம்படுத்தப்படவில்லை என்பது தொடர் பிரச்சினையே. விபத்து அதிகமாக நடக்கும் பகுதிகளில் ஒன்றாகத் தருமபுரம் பிரதேசம் காணப்படுகிறது. ஆகவே அதனுடைய சுமை இந்த வைத்தியசாலைக்கே உண்டு. இதைப்போல அதிகளவிலான பாம்புக்கடி, கசிப்புப் பாவனை போன்றவற்றினால் பாதிக்கப்படுவோருக்கான சிகிச்சையளித்தலையும் இந்த வைத்தியசாலையே செய்ய வேண்டியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் சமூகப் பொருளாதார நிலையும் பிரதேச வளர்ச்சியும் பிற இடங்களில் (தனியார் வைத்தியசாலைகளில்) வைத்தியச் சேவையைப் பெறும் நிலையிலில்லை. 1958 இல் இன வன்முறையினால் பாதிக்கப்பட்டுத் தென்பகுதியிலிருந்து வடக்கு நோக்கி வந்தவர்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட பிரதேசமே தருமபுரம். இதனுடைய சுற்றயல் பிரதேசங்களும் வளர்ச்சியடைந்தவையல்ல. ஆகவே வைத்தியத்தேவைகளை வேறு வழிகளில் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இந்த மக்களில்லை. எனவேதான் அனைத்துச் சுமையும் இந்த வைத்தியசாலைக்கே உண்டு. இந்த நிலையில் அடிப்படை வைத்திய வசதிகளோடு மட்டும் இந்த வைத்தியசாலை இயங்க முடியாது. குறைந்த பட்சம் குழந்தைப்பேறுக்கான — மகப்பேற்று விடுதியாவது தேவை.

எனினும் உச்ச சேவையை வழங்கும் இவ்வைத்தியசாலை பாராட்டுதற்குரியது. மிகக்குறைந்த வசதிகள் மற்றும் குறைந்த மனித வளத்துடன் மிகுந்த சிரமத்துடனேயே தனது சேவைகளை வழங்கிக்கொண்டிருக்கின்ற வைத்தியர்களும் தாதிய உத்தியோகத்தர்களும் பாராட்டுதற்குரியவர்கள். ஏறத்தாழ ஒரு தள வைத்தியசாலைக்குரிய கடமைகளை பிரதேச வைத்தியசாலைக்குரிய வளங்களோடு ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

சுகாதார அமைச்சினால் நாடெங்கிலும் உள்ள வைத்தியசாலைகளின் செயற்பாடுகளை கணனிமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் மாவட்ட ரீதியாக இரண்டு வைத்தியசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆரம்பத்திட்டமானது தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தச் செயற்றிட்டத்திற்காக அக்கராயன் மற்றும் தருமபுரம் பிரதேச வைத்தியசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும் குறித்த கணனிமயப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்துவதற்கு போதிய வசதிகளோ வளங்களோ இல்லாத நிலையில் தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா? என்பது கேள்விக்குறியே. இது, தருவதுபோல் போக்குக்காட்டி பின்னர் கைவிடுவதற்கான அரசாங்கத்தின் தந்திரமோ என மக்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

குறித்த செயற்றிட்டம் உண்மையிலேயே செயலுருப் பெற வேண்டுமாயின் தருமபுரம் பிரதேச வைத்தியசாலையின் குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டும். இவ்வைத்தியசாலை விரைவில் ஒரு தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு பொதுமக்களுக்கான வைத்திய சேவைகள் ஒழுங்காக வழங்கப்பட வேண்டுமென்பதே அப்பிரதேச மக்களின் நியாயமான எதிர்பார்ப்பாகும்.

1. நோயாளர் நிலை பற்றிய அறிக்கை — 2018

| | விபரம் | முழங்காவில் தள வைத்திய சாலை | தருமபுரம் பிரதேச வைத்திய சாலை | அக்கராயன் பிரதேச வைத்திய சாலை | பூநகரி பிரதேச வைத்திய சாலை | பளை பிரதேச வைத்திய சாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | மொத்த வெளி நோயாளர்கள் | 50,199 | 45,843 | 31,468 | 30,391 | 40,524 |
| 2 | நாளொன்றுக்கான சராசரி வெளி நோயாளர்கள் | 136 | 125 | 86 | 83 | 111 |
| 3 | மொத்த மருத்துவ (Clinic) நோயாளர்கள் | 76 | 9,394 | 4,867 | 3,529 | 3,006 |

2. மனித வளம்

| விபரம் | முழங்காவில் தள வைத்தியசாலை | | தருமபுரம் பிரதேச வைத்தியசாலை | | அக்கராயன் பிரதேச வைத்திய சாலை | | பூநகரி பிரதேச வைத்தியசாலை | | பளை பிரதேச வைத்தியசாலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பதவியணி | தற்போதைய ஆளணி | பதவியணி | தற்போதைய ஆளணி | பதவியணி | தற்போதைய ஆளணி | பதவியணி | தற்போதைய ஆளணி | பதவியணி | தற்போதைய ஆளணி |
| 1 வைத்திய அதிகாரி | 10 | 4 | 2 | 2 | 4 | 5 | 4 | 3 | 3 | 3 |
| 2 தாதியர் | -- | 6 | -- | 3 | -- | 6 | -- | 5 | -- | 3 |
| 3 குடும்ப நல உத்தியோகத்தர் | -- | 3 | -- | 2 | -- | 1 | -- | -- | -- | 2 |

**கருணாகரன்**

# பத்து அரசியல் கட்சிகளுடன் பெரமுன புரிந்துணர்வு ஒப்பந்தம்

## ஜீ.எல்.பீரிஸ் தகவல்



(கொழும்பு)

அங்கீகரிக்கப்பட்ட பத்து அரசியல் கட்சிகளுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளதாக அக்கட்சியின் தவிசாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பொதுஜன பெரமுன கையெழுத்திடவுள்ளது.

குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் தற்போது நாடாளுமன்றதைப் பிரதிநிதித்துவப்படுத்தாத 18 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் ஏற்கனவே எமது கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

அந்தவகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த தீர்மானித்துள்ளோம்" எனவும் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

# செய்தித்துளிகள்



"சத்விரு அபிமான் 2019" இராணுவத்தினருக்கு நலன்புரி நன்மைகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார். (ஐ)

## துப்பாக்கியுடன் மூவர் கைது

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திபட்டி பிரதேசத்தில் வீடொன்றில் சந்தேகத்திற்கிடமாக மூவர் தங்கியிருப்பதாக ஏறாவூர் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதனையடுத்து செயற்பட்ட பொலிஸார் ரி -56 ரக துப்பாக்கி ஒன்றும், அதற்கான 16 தோட்டாக்கள் மற்றும் வாள் ஒன்றுடன் மூவரையும் கைது செய்துள்ளனர்.


கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 25, 30 மற்றும் 34 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நேற்று ஏறாவூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# 20 இலட்சம் இளைஞர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு மறுப்பு

## மகிந்த யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

"ஜனாதிபதி தேர்தலின் போது 2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலையே பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதால், 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போகும்" என, நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.



பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளதால் இளைஞர்கள் அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியில் உள்ளதாகவும், அதனாலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

அத்துடன், 2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலை தயாரித்து அதன் அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர்மகிந்த யாப்பா அபேவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## ஆஸிக்குள் நுழைய முயன்ற 20 இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக, அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற 20 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்களைக் கைதுசெய்த அதிகாரிகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பியுள்ளதாகவும் வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதுசெய்யப்பட்ட இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த மே மாதத்துக்குப் பின்னர், அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்த இரண்டாவது இலங்கையர் குழு இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரத்கம வியாபாரிகள் கொலை வழக்கு; சந்தேக நபர்களுக்கு மீண்டும் மறியல்

(காலி)

காலி-ரத்கம பகுதியில் வியாபாரிகள் இருவரை கடத்தி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய 17 சந்தேக நபர்களும் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். காலி பிரதான நீதவான் ஹர்சன கெக்குணுவெல முன்னிலையில் நேற்று முன்தினம் அவர்களை முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மேலும் ஒரு சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி குறித்த வர்த்தகர்களை கடத்திச் சென்று கொலை செய்து எரித்தமை தொடர்பில் மேற்குறிப்பிடப்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 300 |
| தக்காளி | 100 | 70 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 100 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 140 | 120 | 160 |
| பூசணி | 80 | 65 | 80 |
| புடோல் | 50 | 60 | 120 |
| வாழைக்காய் | 100 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 120 |
| பாகற்காய் | 180 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 40 | 30 | 80 |
| லீக்ஸ் | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 100 | 60 | 100 |
| கறிமிளகாய் | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 50 | 80 |
| போஞ்சி | 120 | 70 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 100 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 70 | 110 | 80 |


## அல்பிட்டியவில் பஸ் வேலைநிறுத்தம்

(அல்பிட்டிய)

அல்பிட்டியவில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் அனைத்துத் தனியார் பஸ் ஊழியர்களும் வேலைநிறுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி அல்பிட்டிய - காலி, அல்பிட்டிய - அம்பலாங்கொடை, அல்பிட்டிய - பெலவத்தை, அல்பிட்டிய - மாபகலம ஆகிய பஸ் சேவை ஊழியர்கள் இவ்வாறு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.


காலியில் இடம்பெறும் மேலதிக வகுப்புக்களுக்கு செல்லும் மாணவர்கள் பிரயாணத்திற்காக



அனுமதி பெறப்படாத பஸ் வண்டிகளை பயன்படுத்தியதாக தெரிவித்து இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# ராமுவின் துப்பறியும் மூளை



பெரிய கடை வீதியில் உள்ள "கணபதி ஒயில் ஸ்டோர்", எண்ணெய் கடையில் எண்ணெய் ஊற்றிக்கொண்டிருந்த சாமியப்பண்ணன் உடல் நிலை சரியில்லாமல் ஒரு மாதம் விடுமுறை எடுத்து விட்டார். கணபதி ஒயில் ஸ்டோரில் மேலும் ஒரு பணியாளர் உண்டு, அவருடன் முதலாளி கணபதியப்பனும் இருப்பதால் இந்த ஒரு மாதம் சமாளித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து விட்டார்கள். ஆனால் கூட்டம் அலை மோத கண்டிப்பாக ஒரு ஆள் தேவை என்றாகிவிட்டது. தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்தார் கணபதியப்பன்.

அடுத்த நாள் ஒருவர் வந்து கடையில் வேலை கேட்டார். இதற்கு முன்னர் ஒரு "ஒயில் தடையில்" வேலை பார்த்ததாகவும் சம்பளம் கட்டுப்படியாகாமல் இங்கு வருவதாகவும் சொல்ல மேற்கொண்டு விசாரிக்காமல் நாளை வேலைக்கு வரும்படி சொல்லி விட்டார்கள்.

மறுநாள் வந்தவர் கையோடு நல்ல வெளுத்த துணிகள் பத்து பதினைந்து கையோடு கொண்டு வந்திருந்தார். அதனைக்கொண்டு முதலில் எண்ணெய் பிசுக்குகளை சுத்தமாக துடைக்க ஆரம்பித்தார். எண்ணெய் வாங்க ஆட்கள் வரும்போது, அவர்களுக்கு எண்ணெய் ஊற்றி விட்டு மற்ற நேரங்களில் சுற்றி உள்ள ஒயில் ரின்களில் உள்ள எண்ணெய்ப் பிசுக்குகளை துடைத்ததால் அந்த இடம் "பளிச்" என்று ஆனது. இப்பொழுது எண்ணெய் கடையா? என்று கேட்கும் அளவுக்கு கடை இருக்கவும் கணபதியப்பனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஆகி விட்டது.

ஒரு வாரம் ஓடியது, வழக்கமாக விற்றது போக கடையில் மிச்சமுள்ள எண்ணெய் வழக்கமான அளவை விட குறைவாக இருந்தது. கணபதியப்பன் தலையை பிய்த்துக்கொண்டார். கண் முன்னால் தான் எண்ணெய் ஊற்றுகிறார்கள், இவர் கண் கொத்திப் பாம்பாய் பார்த்துக் கொண்டிருக்கிறார், அப்படியும் எண்ணெய் குறைய என்ன காரணம் என்று புரியவில்லை. புதிதாக வந்த ஆளும் ஒழுங்காக எண்ணெய் ஊற்றுகிறார். இடைப்பட்ட நேரங்களில் வழியும் எண்ணெய் பிசுக்குகளை துடைத்து, அதனை ஒரு பொலித்தீன் கவரில் வைத்து கட்டி வெளியே கொண்டு போய் வைத்து விடுகிறார். தினமும் குப்பை பொறுக்கும் ஒரு அம்மாள் அதனை எடுத்து சென்று விடுகிறார். முன்பைவிட கடை இப்பொழுது சுத்தமாக இருக்கிறது. எல்லாம் சரி எண்ணெய் மட்டும் அடிக்கடி குறைந்து போகிறதே? அது எப்படி என்று மண்டையை பிய்த்துக்கொள்கிறார்.

"ராமு" கணபதியப்பனின் ஒரே பையன். அருகில் உள்ள பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறான். நல்ல புத்திசாலி. அவ்வப்பொழுது அப்பாவுக்கு துணையாக கடை கணக்கு வழக்குகளை பார்த்துக்கொள்வான்.

அப்பா கொஞ்ச நாட்களாக யோசனையில் இருப்பதை பார்த்த ராமு அப்பாவிடம் "என்னப்பா எப்ப பார்த்தாலும் யோசனையாகவே இருக்கிறீர்கள்? கணபதியப்பன், ராமுவிடம் கொஞ்ச நாளாகவே கடையின் எண்ணெய் அளவு குறைஞ்சுகிட்டே வருது. என் முன்னால் தான் எல்லாரும் வேலை செய்யிறாங்க, அப்புறம் எப்படி எண்ணெய் குறையும்னு தெரியலையே? ராமு யோசித்தவன் நாளைக்கு எனக்கு ஸ்கூல் லீவுதான், கடைக்கு நானும் வருகிறேன், அப்புறம் பார்க்கலாம் என்று அப்பாவிடம் சொன்னான்.

மறுநாள் இவன் அப்பாவுக்கு முன்னால் கடைக்கு சென்றபோது புதிதாக சேர்ந்தவர் கடையில் எண்ணெய் டப்பாக்களில் வழிந்து கொண்டிருந்த எண்ணெய் பிசுக்குக்களை துடைத்து எடுத்து ஒரு கவரில் போட்டுக்கொண்டிருந்தார். "வாங்க தம்பி"என்று சொல்லி விட்டு இந்த அழுக்கு மூட்டை கவரை வெளியில போட்டுட்டு வந்திடுறேன் என்று சொல்லி விட்டு வெளியே கடைக்கு எதிர்ப்புறம் உள்ள குப்பைக் கூடையில் போட்டு விட்டு வந்தார்.

கடைக்கு கூட்டம் வர ஆரம்பித்து விட்டது. ராமு அப்பாவுடன் பேசிக்கொண்டே வியாபாரத்தையும் பார்த்துக்கொண்டு, வெளியே குப்பைக் கூடையில் இருந்த பொருட்களை மாநகராட்சி வண்டி வந்து எடுத்து செல்வதை பார்த்துக்கொண்டிருந்தான்.

இரவு ஏழு மணிக்கு மேல் கூட்டம் குறைந்தவுடன் கணபதியப்பன் ராமுவை வீட்டுக்கு போக சொல்ல, உங்களுடனே நானும் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டான். கடை சாத்த அரை மணி நேரம் முன்பு புதிதாக வந்தவர், எல்லாவறையும் துடைத்து வைத்து ஒரு பொலித்தீன் பையில் வைத்து விட்டு நான் சென்று வரட்டுமா என்று கேட்டார். ராமு நீங்கள் தினமும் சுத்தமாக துடைத்து விட்டுத்தான் கிளம்புவீர்களா? என்று கேட்டான். ஆமாம் தம்பி அப்பொழுதுதான் காலையில் வந்து வேலை செய்ய நமக்கு சுலபமாக இருக்கும் என்று சொல்லிவிட்டு கிளம்பினார். கணபதியப்பனும் ராமுவும் கடையை பூட்டிவிட்டு வீட்டுக்கு கிளம்பினர்.

மறுநாள் காலையில் வெளியே எங்கோ சென்று விட்டு வந்த ராமு, அப்பாவிடம் அப்பா புதிதாக வந்து சேர்ந்த ஆளை வேலையை விட்டு நிறுத்தி விடுங்கள் என்று சொன்னான். ஏன் ராமு, அந்த ஆள் பொறுப்பாத்தானே வேலை எல்லாம் செஞ்சுகிட்டு இருக்காரு, அவரை எப்படி வேலையை விட்டு நிறுத்துறது? ராமு பதில் சொல்லாமல் இவர்கள் கடையில் புதிதாக வந்தவர் எண்ணெய் பிசுக்கை துடைத்து மூட்டையாக வைத்திருந்த்தை எடுத்துக்காட்டினான். அதை திறந்துப் பார்த்த கணபதியப்பன் அதில் எண்ணெயில் ஊறிக்கிடந்த நான்கைந்து துணிகள் இருந்தன.

அப்பா இந்த துணிகளை கொண்டு போய் பிழிந்தால் குறையாமல் ஒரு லீற்றர் எண்ணெய் கிடைக்கும். இவர் தினமும் துடைப்பது போல் எண்ணெயில் முக்கி பிளாஸ்ரிக் பையில் போட்டு எதிரில் உள்ள குப்பைக்கூடையில் போட்டு விடுவார். அடுத்த அரை மணி நேரத்தில் இவர் ஏற்பாடு செய்திருந்த அம்மாள் வந்து பொறுக்கிக்கொண்டு போய் விடுவார். நான் எப்படி இதை கண்டு பிடித்தேன் என்றால் மாநகராட்சி வண்டி வந்து நம் கடை எதிரில் உள்ள குப்பைகளை அள்ளும் பொழுது இவர் போட்டிருந்த எண்ணெய் பை அங்கில்லை. அப்படியானால் அந்த பை யாராலோ எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்து காலையில் நானே நம் கடை ஓரத்தில் காத்திருந்து அவர் இந்த மூட்டையை வெளியே குப்பைக் கூடையில் போட்டுவிட்டு சென்ற பின்னால் எடுத்து வந்து விட்டேன். உங்களுக்கு நாளொன்றுக்கு இரு வேளையும் ஒரு லீற்றர் எண்ணெய் இப்படி போனால் அளவு குறைவாகத்தானே இருக்கும் என்று சொன்னான்.

கணபதியப்பன் ராமுவின் துப்பறியும் மூளையைக்கண்டு வியப்புடன் அவனை தழுவிக் கொண்டார்.

## கொண்டாட்டப்பாடல்



கும்மியடி பெண்கள் கும்மியடி நல்ல
குடும்பம் வாழவே கும்மியடி
கேளுங்கடி பெண்கள் கேளுங்கடி நல்ல
திட்டங்கள் கூறுவேன் கேளுங்கடி (கும்மியடி)

பஞ்சம் பசிவரும் காரணத்தால்
மக்கள் பெருகுவதும் பெருங் காரணமே
மானிட மக்கள் பெருக்கத்தை நீக்கி
மாபெரும் திட்டத்தைத் தீட்டியுள்ளார் (கும்மியடி)

ஐம்பது கோடி ஜனத் தொகையால் மக்கள்
ஆயிரம் தொல்லை அடையுதடி
கட்டுக்கடங்காத மக்கள் தொகையினை
திட்டம் வகுத்துத் தடுத்திடுவோம் (கும்மியடி)

பள்ளியின் பெருமை சிறந்திடவே நல்ல
பாடுபடுதல் நம் கடனாகும்
நல்ல பாதையில் நாம் என்றும் சென்று
பாரினில் பெரும் புகழ் அடைந்திடுவோம் (கும்மியடி)

## விடுகதைகளும் விடைகளும்

- நீல நிறக் கடலிலே வெள்ளைத் தோணி மிதக்குது. அது என்ன?
  **நிலவு**
- நீரிலே கொண்டாட்டம், நிலத்திலே திண்டாட்டம். அது யாருக்கு?
  **மீனுக்கு**
- வெளுத்த ஆளுக்கு, கறுப்பு தலைப்பாகை. அது என்ன?
  **தீக்குச்சி**
- பத்து பேர் சேர்ந்தால் பஞ்சம் போக்குவார்கள். அவர்கள் யார்?
  **கைவிரல்கள்**
- ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல் - அது என்ன?
  **மூக்கு**
- கல்லை சுமந்து, கறிக்கு ருசியாவான். அவன் யார்?
  **புடோலங்காய்**

"பலமே வாழ்வு: பலவீனமே மரணம்!"
~ விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்குக் கிழக்கில் இரண்டாயிரம் விகாரை அமைக்க உடன்பட்டவர்கள்...

பெரும்பான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த பீடங்களும் பேரினவாதிகளும் தமிழ் மக்களைப் படுத்தும் பாடு கொஞ்சமல்ல.

தமிழ் இனத்தை ஒட்டுமொத்தமாக ஒழித்துக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் நடந்தன எனும் போது இலங்கையில் தமிழ் மக்கள் படும் துன்பம் எத்தகையது என்பதை எவரும் புரிந்து கொள்வர். இந்த நீரோசை இன்னமும் முடிந்தபாடில்லை.

தங்கள் சொந்த நிலத்தில் வாழ முடியாத நிலையிலேயே தமிழ் மக்கள் உள்ளனர்.

இதுதவிர, இப்போது பௌத்த விகாரைகளை வடக்குக் கிழக்கில் அமைக்கின்ற முயற்சியில் சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த பீடங்களும் மும்முரமாக உள்ளன.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்களின் தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களிலும் புத்த விகாரைகளை அமைத்து அவற்றை கையகப்படுத்துகின்ற முயற்சியும் நடந்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியிலும் முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திலும் புத்தர் சிலையை நிறுவுகின்ற முயற்சிகளைக் குறிப்பிடலாம்.

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தை தாங்கி நிற்கின்ற பலமான தூணாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றபோதிலும் விகாரைகள் அமைப்பதைத் தடுக்க முடியாதவர்களாக அல்லது தடுக்க விருப்பமில்லாதவர்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இருக்கின்றனர்.

இதன் பின்னணி என்ன என்பது பற்றி தீவிரமாக ஆராய வேண்டுமாக இருந்தாலும் அரசாங்கத்தின் எந்த நடவடிக்கையையும் தாம் எதிர்ப்பதில்லை என்று அரசுடன் உடன்படிக்கை செய்தவர்கள் போல கூட்டமைப்பினர் நடந்து கொள்கின்றனர்.

அதிலும் கன்னியா வெந்நீருற்றுப் பகுதியில் பிள்ளையர் ஆலயம் இருந்த இடத்தில் புத்த விகாரையை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் மக்கள் திரண்டு அகிம்சைப் போராட்டம் நடத்தினர்.

ஆனாலும் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவில்லை. தவிர, தென்கயிலை ஆதீனகுரு முதல்வர் மீது கொதிநீர் ஊற்றி சிங்களப் பேரினவாதிகள் இந்து சமயத்தை அவமதித்தனர். அதற்குக் கூட கூட்டமைப்பின் தலைமை கண்டனம் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் அமைச்சர் மனோ கணேசன் உடனடியாகத் தலையிட்டு ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமையை எடுத்துக்கூறி புத்த விகாரை அமைக்கின்ற முயற்சியை தடுத்து நிறுத்தினார்.

இச்சந்தர்ப்பத்தில் கூட கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், இச்சம்பவங்கள் சைவத் தமிழ் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்த; தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென்று இந்துத் தலைவர்கள் கோரிக்கை விட்டனர்.

இந்தக் கோரிக்கைகள் நாடு கடந்து சூடுபிடிக்க அதிர்ந்து போன கூட்டமைப்பு தாங்களும் ஈடுபட்டதாகக் காட்டிக் கொள்கின்றனர்.

ஆனால் இவையெல்லாம் மாய மான் விளையாட்டு என்பதை தமிழ் மக்கள் உணர வேண்டும்.

வடக்கு கிழக்கில் இரண்டாயிரம் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்துவிட்டு இப்போது நல்ல பிள்ளைக்கு நடிக்கின்றனர்.

இதை ஒருபோதும் நம்பாமல் தமிழ் மக்கள் தொடர்ந்து அகிம்சை வழியில் போராட வேண்டும். அரசியலைத் தீர்மானிக்கின்ற சக்தியாக தமிழ் மக்கள் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இதுவே எங்கள் இனத்தை - சமயத்தை பாதுகாப்பதற்கான ஒரே வழியாக இருக்கும்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தால் நேற்று மாலை வெளியிடப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமணத்திற்கான பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியலில் வெளிவாரிப்பட்டதாரிகள் எவரும் உள்வாங்கப்படவில்லை. நேர்முகத்தேர்வுகள் ஒன்றாக நடைபெற்ற போதிலும் நியமனத் தெரிவில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்காக பாதிக்கப்பட்ட அனைத்து வெளிவாரிப்பட்டதாரிகளையும் இன்று காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு தெரிவிக்கப்ட்டுள்ளது. (3)

## வெளிநாடுகளிலுள்ள மருத்துவர்கள் வடக்கிற்கு வர 6மாத இலவச வீசா

### ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மருத்துவர்கள் வடக்கு மாகாணத்திற்கு வந்து மருத்துவச் சேவை செய்ய விரும்பினால் 6 மாத இலவச வீசா மற்றும் தங்குமிடம் போன்ற ஒழுங்குகளைச் செய்து தருவதாக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் சற்ரன் நகரசபை உறுப்பினர் பரம் நந்தாவுக்கும் இடையிலான சந்திப்பின்போதே இந்த விடயத்தை வடமாகாண ஆளுநர் தெரியப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து 10 வருடங்கள் ஆகியுள்ளபோதிலும் வடக்கில் மருத்துவத்துறை பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

எனவே நலிந்துபோயுள்ள மக்களுக்கு உதவும் நோக்கில் தாம் இந்தத் திட்டத்தினை முன்னெடுத்துள்ளதாக சுரேன் ராகவன் கூறியுள்ளார்.

சுரேன் ராகவனுடன் பரம் நந்தா மேற்கொண்ட இந்தச் சந்திப்பில் வடமாகாண ஆளுநரின் முன்னாள செயலாளரும் தற்போதைய வடமாகாண கல்வியமைச்சின் செயலாளருமான டு.இளங்கோவன் அவர்களும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## - பருத்தித்துறை கடற்பரப்பில் -
## கடலட்டை பிடிப்பில் ஈடுபட்ட 24 வெளி மாவட்ட மீனவர்கள்

### பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்ட ஒன்பது படகுகளை மடக்கிய முனைக் கடற்றொழிலாளர்கள் அப் படகில் இருந்த 24 வெளி மாவட்ட மீனவர்களை சிறைப்பிடித்து ப்ருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் அத்துமீறி நுழையும் வெளி மாவட்ட படகுகள் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றன.

அது தொடர்பில் பல முறை உரிய அதிகாரிகளிற்கு தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந் நிலையில் முல்லைத்தீவு, சாலை கடற்கரையில் இருந்து முனைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த ஒன்பது படகுகள் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டன.

இதை அவதானித்த முனை கடற்றொழிலாளர்கள் விரைந்து சென்று ஒன்பது படகுகளையும் சுற்றிவளைத்து அதில் இருந்த மன்னார் மற்றும் வவுனியா பகுதிகளைச் சேர்ந்த 24 வெளி மாவட்ட மீனவர்களை சிறைப்பிடித்து கரைக்கு கொண்டுவந்தனர்.

பின்னர் அவர்கள் பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-60)

## அனைத்து தோட்ட வைத்தியசாலைகளும் அரசுடைமையாக்கப்படும்-ராஜித

(கொழும்பு)

அனைத்து தோட்ட வைத்தியசாலைகளையும் அரசாங்கம் கையகப்படுத்தி அதன் நிர்வாகம் மாகாண சபைக்கு வழங்கப்படும் என்று சுகாதாரம், போசாக்கு மற்றும் சுகாதார வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கான நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மாகாண சுகாதார அமைச்சர்களின் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்துத் தோட்ட வைத்தியசாலைகளையும் அரசாங்கம் கையகப்படுத்துவது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர தெரிவித்தார்.

சிறந்த தோட்ட வைத்தியசாலைக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில் இவ்வாறு செய்யப்படவுள்ளதாகவும், பகுதி பகுதியாகவே அரசாங்கம் கையகப்படுத்தும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (ஜ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில** கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், சிவநகர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** வவுனியா நகரத்திலிருந்து (கண்டி வீதி) பூ ஓயா வரை, மதவுவைத்தகுளம், பண்டாரிக்குளம், தவசிகுளம், தோணிக்கல், கற்குண்டமடு, கார்கில்ஸ் மின்தடைப்படும்

## வவுனியா விபத்தில் முதியவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா- வைரவப் புளியங்குளத்தில் நேற்று ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா நகரப்பகுதியிலிருந்து குருமன்காடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவரை அதே பகுதியில் பயணித்த ஒரு மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முயற்சித்த வேளை குறித்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த 1990 அம்புலன்ஸ் வண்டி முதல் உதவி குழுவினர் உடனடியாக படுகாயமடைந்து மயக்கத்திலிருந்த வயோதிபருக்கு முதலுதவி சிகிச்சையளித்து வவுனியா பொது வைத்திய சாலை விபத்து பிரிவில் அனுமதித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

## கொடுத்த கடனை மீளப்பெற சென்ற நபர் உயிரிழப்பு

### தென்மராட்சிப் பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

வட்டுக்கோட்டைப் பகுதியில் இருந்து தென்மராட்சிப் பகுதிக்கு கொடுத்த கடனை மீளப் பெறச் சென்ற நபரொருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் ஒன்று தென்மராட்சி-கனகம்புளியடிச் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

தான் கொடுத்த கடனை மீளப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த நபர் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் வட்டுக்கோட்டை-சங்கரத்தைப் பகுதியில் இருந்து தென்மராட்சி-கனகம்புளியடிச் சந்திப் பகுதிக்கு தனது உறவினர் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். இந்நிலையில் கடனைப் பெற்றுக் கொண்டவர்களுடன் உரையாடியவாறே தனது உறவினரின் மார்பில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட்டுக்கோட்டை-சங்கரத்தைப் பகுதியைச் சேர்ந்த 68வயதான கே.துரைராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சடலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-03-30)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### உயிர்களுக்கு தீங்கு செய்யாதீர்!

✦ மன மாசு தியானத்தாலும், வாயினால் செய்த பாவங்கள் இறைவனைத் துதிப்பதாலும், உடம்பால் செய்த பாவங்கள் இறைவனை அர்ச்சிப்பதாலும் நீங்கும்.

✦ வளரும் பயிருக்கு முள்ளை வேலியாக இட்டால் ஆடுமாடு போன்ற உயிர்களால் துன்பம் நேராமல் வளர்ந்து நிற்கும். நாம் சம்பாதிக்கும் பணத்திற்கும் ஒரு வேலி இருக்கிறது. அது தான் தர்மம். தர்மம் செய்தால் பாவம் நீங்கி புண்ணியம் சேரும்.

✦ தனக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், பிற உயிர்களுக்குச் சிறிதும் துன்பம் செய்யாதிருப்பதும் மிக உயர்ந்த குணங்கள்.

✦ உலகில் மக்கள் செய்கின்ற பிழைகளில் எல்லாம் பெரிய பிழை எது தெரியுமா? அறிவு தரும் நல்ல பயனுள்ள நூல்களைப் படிக்காமல் இருப்பதாகும்.

✦ கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகத்திற்குச் சேவை செய்வதோடு, கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் சேவை செய்யும் கடமை நமக்கு இருக்கிறது.

✦ யாராவது நம்மைப் புகழும்போது மகிழ்ச்சி அடைதல் கூடாது. இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் சமமாகக் கருதினால் மனம் அமைதி பெறும்.

# திருகுமரன்-லஜிதன் வெற்றிக்கிண்ணம்; வென்றது ஆவரங்கால் மத்தி அணி



அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக மறைந்த உறுப்பினர்களான அமரர்கள் திருகுமரன்-லஜிதன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்டரீதியாக நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி ஆரம்ப அசத்தல் பாரம்பரிய வரவேற்பு நடனங்களுடனும் கண் கவர் வாண வேடிக்கைகள், கண் கவர் வர்ண கொடிகள், மெய் சிலிர்க்கும் இசைகள் என கடந்த சனிக்கிழமை அளவெட்டி மத்தியவிளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இடம் பெற்ற போட்டியில முதலாவது சுற்றை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. 2வது சுற்று சற்று சூடுபிடிக்க இரண்டு அணிகளும் சம புள்ளிகளை பெற்றுச் செல்ல ஆட்டம் விறு விறுப்பான கட்டத்தை அடைந்தது. ஆவரங்கால் மத்தி வீரர் தனது அதிரடியை காட்ட தொடங்க 31:29 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2 ஆவது சுற்றையும் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. 3ஆவது சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் ரசிகர்களின் அனல் பறக்கும் விசில் சத்தங்களுடனும் கைதட்டல்களோடும் வெற்றி பெற ஆட்டத்தின் போக்கு மாறியது. 4வது சுற்று ஆரம்பிக்க ஆரம்பத்தில் புள்ளிகளை அள்ளியது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம். பின்னர் மத்தி வீரன் அதிரடி காட்ட 4வது சுற்றை 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது ஆவரங்கால் மத்தி.

தொடரின் சிறந்த இளம் வீரராக இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் இனியவனும் போட்டியின் Stylish player ஆக நிதர்சனும் மக்கள் மனம் கவர்ந்த வீரராக மத்தி விளையாட்டுக்கழக வீரர் இந்துஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மக்கள் மனம் கவர்ந்த வீரர்களான வாக்கெடுப்பில் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார். போட்டியின் ஆட்டநாயகனாக சுஜீவன் தெரிவு செய்யப்பட்டதுடன் தொடர் நாயகனாக சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)






# பிறேம்நாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்; விபுலானந்தா அணி சம்பியன்

அமரர்.க.பிறேம்நாத் ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை நெடியகாடு விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலான 21 வயதிற்குட்பட்டவர்களுக்கிடையிலான மென்பந்தாட்ட சுற்று போட்டியை நடத்தியது. 22 அணிகள் பங்குபற்றிய இப் போட்டிகள் 5 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட சுற்றுப் போட்டியாக நடைபெற்றது. இறுதிப் போட்டியில் விபுலானந்தா விளையாட்டுக்கழகம் உடுப்பிட்டி அல்ரோன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடியது.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டி நெடியகாடு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டஇறுதி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உடுப்பிட்டி அல்ரோன் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அந்தவகையில் அல்ரோன் அணி 4 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 30 ஓட்டங்களை பெற்றது.

இதில் உமாகரன் 15 ஓட்டங்களை அணி சார்பாக பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் விஜேனோஜன் 3 விக்கெட்டையும், கிஷோக் 2 விக்கெட்டையும் அணி சார்பாக பெற்றனர். 31 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களம் இறங்கிய விபுலானந்தா 3.2 பந்துப் பரிமாற்ற நிறைவில் விக்கெட் இழப்பு இன்றி 31 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பாக வினோஜன் 17 ஓட்டங்களையும் அபிலாஷ் 5 ஓட்டங்களையும் பெற்றுக் கொடு த்தனர். போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாகவும், ஆட்ட நாயகனாகவும் வினோஜன் தெரிவு செய்யபட்டார். இப்போட்டியின் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே சிவாஜிலிங்கம் மற்றும் விருந்தினராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-30)




# ரி.பி. பத்மநாதன் வெற்றிக் கிண்ணம் வென்றது யாழ்.சென்.பற்றிக்ஸ் அணி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் உதைபந்தாட்டப் பயிற்றுநர் அமரர் ரி.பி. பத்மநாதன் ஞாபகார்த்தமாக, யாழ்.மாவட்டத்தில் உதை பந்தாட்டத்தில் முன்னணியில் திகழும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த சனி,ஞாயிறு தினங்களில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மகாஜனக் கல்லூரி நிர்வாகம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டிக்கு மகாஜனக் கல்லூரியின் 1978 சிங்கர் கிண்ண உதைபந்தாட்ட சம்பியன் அணியினர் இவ் வருடத்திற்கு அனுசரணை வழங்கியிருந்தனர்.



இச்சுற்றுப்போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி, ஸ்கந்த வரோதயக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வயாவிளான் மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகிய எட்டு அணிகள் கலந்துகொண்டன.

விலகல் முறையில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. (க-105)

# பளுதூக்கும் சம்மேளன இணைப்பாளர் தெரிவு

(கரணவாய்)

இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளன நிர்வாகத் தெரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் க.கனகராஜா இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனத்தின் உபதலைவர் மற்றும் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் இணைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க-60)



## பிரித்தானியா...

(லண்டன்)

பிரித்தானியாவின் புதிய பிரத்மராக, கன்சர்வேட்டிவ் கட்சியின் போரிஸ் ஜோன்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார. அவர் விரைவில் பதவியேறக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதற்கான, பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்கெடுப்பு நடந்தது. இதில் போரிஸ் ஜோன்சனுக்கு ஆதரவாக 92,153 வாக்குகளும் ஜெர்மி ஹன்ட்டிற்கு ஆதரவாக 46,656 வாக்குகளும் கிடைத்தன. (ம-3)

## சிங்கள பௌத்த...

முன்பாக நேற்று போராட்டம் இடம்பெற்றது.

புலம்பெயர் உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பெருந்திரளானவர்கள் பங்கெடுத்திருந்தனர்.

திருகோணமலை - கன்னியா வெந்நீரூற்று மற்றும் பிள்ளையார் கோயில் பிரச்சினை தற்போது பூதாகரமாக எழுந்துள்ள நிலையிலேயே இந்த போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை கறுப்பு யூலை தமிழினப் படுகொலைக்கு நீதிகோரி, பிரித்தானிய பிரதமர் வாசஸ்தலத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்த இந்த போராட்டத்தில் காலம் பல கடந்து சென்றாலும் ஈழத் தமிழர் தேசத்தின் அரசியல் ஆன்மாவில் ஓர் பெரும் துயர வடுவாக நிலைத்திருப்பதோடு, என்ன விலை கொடுத்தேனும் அரசியல் சுதந்திரத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற பற்றுறுதியை தமிழர் தேசத்தடம் கறுப்பு யூலை நினைவுகள் விதைத திருக்கின்றன என இக்கவனயீர்ப்பு போராட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தமிழர்களையும்...

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சபையில் வலியுறுத்தினார்.

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம் இன்று அபகரிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்து மக்களுக்கு கிருத்தியங்களைச் செய்ய முடியாதுள்ளது. கடந்த 16ஆம் திகதி ஆதீனத்துக்கான உரிமையாளர் ரமணியம்மாள் மற்றும் அகத்தியர் ஆகியோர் அங்கு சென்றபோது அவர்கள் மீது காடையர்கள் சுடுநீரை ஊற்றியுள்ளனர். ஜூலை கலவரம் இடம்பெற்று 36 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் இவ்வாறான சம்பவங்கள் இன்னமும் அரங்கேற்றப்படுவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு இன்னும் எந்தளவு தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை முதலில் சிங்கள சமூகத்தினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் தலையிட்டு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கும் ஞானசார தேரர் மற்றும் அத்துரலிய ரத்ன தேரர் போன்றவர்கள், ஏன் தமது மதவெறிகளைத் தூக்கிவைத்துவிட்டு நியாயபூர்வமாக இந்துக்களுக்காக குரல்கொடுக்கக் கூடாது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ம-3)

## அரசியல் கைதி...

சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தான் முழுமையாக மேற்கொணடு வருவதாகவும், இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இவ்வாறானதொரு அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## அமெரிக்கத்...

இந்த கலந்துரையாடலின்போது பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் கலந்து கொண்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள், தற்போதைய அரசியல் பின்னணி மற்றும் இரு நாடுகளுக்கிடையில் ஏற்கெனவே இருக்கும் உறவுகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து விவாதித்ததாக எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-3)

## சந்திக்க மறுத்த...

சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துரலியே ரத்ன தேரர், நீதிக்கான தாய்மார் அமைப்பு, குடும்ப கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறப்படும் தாய்மார் சார்பில் ஆஜராகி வரும் சட்டத்தரணிகள் நேற்று மதியம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க, ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றிருந்தனர்.

மருத்துவர் சிஹாப்தீன் ஷாபியினால், குடும்ப கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறப்படும் பெண்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்குமாறு கோரி, ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றை கையளிக்கவே அவர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்றிருந்தனர்.

எனினும் ஜனாதிபதியை சந்திக்கவில்லை எனவும் ஜனாதிபதியின் பணிக்குழுவின் பிரதான அதிகாரியிடம் மகஜரை கையளித்ததாக ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

தான் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் தாய்மார் செய்துள்ள முறைப்பாடு தொடர்பான வழக்கு பற்றிய அக்கறை இருப்பதாகவும் இந்த அநீதியை யாரிடம் முறையிடுவது எனவும் ரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம-3)

## நேரில் சென்று...

மிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் சாட்சி வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் அழைக்கப்படவுள்ளதாக அக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியையும், கர்தினாலையும் தெரிவுக்குழுவுக்கு அழைப்பது பொருத்தமற்றது என்பதனால், அவர்கள் இருக்கும் இடத்துக்கு தெரிவுக் குழு சென்று விசாரணைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விசேட தெரிவுக் குழு முன்னெடுத்து வரும் விசாரணைகளின் போது ஜனாதிபதி மற்றும் கர்தினால் ஆகியோர் குறித்து பலராலும் வெவ்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதனால், இந்த இருவரிடமும் கருத்துக்களைக் கேட்டறிவது முக்கியமானது எனவும் தெரிவுக் குழு கருதுவதாகவும் அக்குழு உறுப்பினர் மேலும் கூறியுள்ளார்.

இந்த தெரிவுக் குழுவில் ஒருபோதும் ஆஜராகப் போவதில்லையென ஜனாதிபதி இதற்கு முன்னர் பல தடவைகள் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஐ.தே.க ஜனாதி...

பிரேமதாசவை நிறுத்தும் யோசனையை அந்தக் கட்சியின் பாராளுமன்றக் குழு உறுப்பினர்கள் பலரும் முன்மொழிந்துள்ளனர்.

இதையடுத்து, கட்சியின் வேட்பாளர் விரைவில் அதிகாரபூர்வமாகத் தெரிவு செய்யப்படுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், சஜித் பிரேமதாசவை வேட்பாளராக நிறுத்தும் யோசனை ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முன்மொழிந்துள்ளனர் என்று தனது பெயரை வெளியிட விரும்பாத உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் செயற்குழு மற்றும் பாராளுமன்றக் குழு என்பன ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் குறித்து இறுதி முடிவை எடுக்கும் என்றும், அது அதிகாரபூர்வ முடிவாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும், கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தையோ பாராளுமன்றக் குழுக் கூட்டத்தையோ எப்போது கூட்டுவது என்று முடிவெடுக்கப்படவில்லை.

அதேவேளை கட்சியின் சில உறுப்பினர்கள் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழிந்துள்ளனர் என்று தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச்செயலர் அகில விராஜ் காரியவசம், ஏனையவர்கள் ஓகஸ்ட் 5ஆம் திகதி தேசிய ஜனநாயக கூட்டணி உருவாக்கப்பட்ட பின்னர் முடிவெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர் என்று கூறினார். (ம-3)

## முஸ்லிம் தரப்...

அம்பாறை மாவட்டத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த அவர் கல்முனை அலியார் வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்கப் பேரவை அமைப்புடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அண்மைக்காலமாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இனமுறுகலை ஏற்படுத்தும் கல்முனை உப செயலக விடயம் தொடர்பாக முஸ்லிம் தரப்பினரின் கருத்துக்கள் அவை சார்ந்த நியாயங்கள் தொடர்பாக சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்கப் பேரவை தலைவரும் அரசியல் விமர்சகருமான எம்.எச்.எம் இப்றாஹீம் தலைமையிலான பேரவை உறுப்பினர்கள் விளக்கமளித்தனர்.

இவ்வாறு கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பாக முஸ்லிம் தரப்பினரால் கொடுக்கப்பட்ட ஆதாரங்கள் விளக்கங்களை பெற்றுக்கொண்ட முன்னாள் நீதியரசரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் இவ்விடயம் தொடர்பாக நேரடி பேச்சுவார்த்தையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

அத்தோடு அடுத்த கட்ட நகர்வாக ஒரு குடையின் கீழ் யாவரும் ஒன்றுபட்டு ஒரு இனத்தின் உரிமைகளை மதித்து நடப்பதுடன் விட்டுக்கொடுப்பின் ஊடாக மேற்குறித்த விடயத்தில் தீர்வை காண முடியும் எனக் கூறினார்.

இதனை செவிமடுத்த முஸ்லிம் தரப்பினர் அவரின் கருத்தை ஏற்று கொண்டதுடன் கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பான விளக்கப்புத்தகம் ஒன்றினையும் வழங்கி வைத்ததுடன் இனிவரும் காலங்களில் இன ஐக்கிய விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (ம-3)

## பட்டதாரி பயிலு...

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக அரச சேவைக்கு உள்ளீர்க்கும் செயற்பாட்டின் கீழ் அடுத்த வாரம் 16 ஆயிரம் பேர் பட்டதாரி பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்திருந்து 1253 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் யாழ்.மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று முதல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியலில் உள்ள பலர் கடந்த ஆண்டு ஏற்கெனவே பட்டதாரி பயிலுநர்களாக நியமனம் பெற்று தற்போது கடமையாற்றி வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்படி முதலாம் கட்டத்தில் நியமனம் பெற்ற பலர் இரண்டாம் கட்டத்தில் சேர்க்கப்பட்டமையால் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருந்த பல பட்டதாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## மாதா சொரூபம்...

நேற்று இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு யாழ்ப்பாணப் பொலிஸார் சென்று சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3.9)

## பொதுவான...

தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் நேற்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கூட்டணியில் இணையும் சகல கட்சிகளின் அடையாளங்களை பாதுகாத்து உருவாக்கப்படும் புதிய கூட்டணி அடுத்த 5 ஆண்டுகளுக்கு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும்.

2015ஆம் ஆண்டு எமது அரசாங்கம் பதவிக்கு வந்த போது, இலங்கை சர்வதேசத்திடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. எமக்கு கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

நாட்டின் மீது பெரும் கடன் சுமை சுமத்தப்பட்டிருக்கும் நிலையில், படிப்படியாக அந்த சவாலை எதிர்கொண்டு முன்னோக்கி வந்துள்ளோம். இதற்கு அமைய நாட்டை கடனில் இருந்து ஸ்திரமான நிலைமைக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

நாட்டை அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்த கடந்த நான்கரை ஆண்டுகளில் நாங்கள் நடவடிக்கைகளை எடுத்து வந்தோம். நாட்டில் கடன் ஸ்திர நிலைமை காணப்பட்டாலும் பெருந்தொகை கடனை எதிர்கால சந்ததிக்கு மீதம் வைக்க முடியாது.

அடுத்த 5 ஆண்டுகளில் முதலீடுகளை பெற்று நாட்டை அபிவிருத்தி செய்து, மேலதிக கையிருப்புடன் கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவது எமது இலக்கு எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கொவிசெத
திகதி 2019.07.23
சீட்டிழுப்பு இலக்கம் 2187
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 19 27 41 71
தேசிய லொத்தர் சபை

நீரோகா லக்ன ஜய
திகதி 2019/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 0575
லக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 34 54 55 69

மஹஜன சம்பத
திகதி 2019/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 3966
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 1 6 4 1 2
தேசிய லொத்தர் சபை

சேவன
திகதி 2019/07/23
சீட்டிழுப்பு இலக்கம் 0203
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 36 51 52 64
தேசிய லொத்தர் சபை

# Techno World

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**A/L 2021,2020 பொறியியல், உயிர்முறைமைகள் மாணவர்களுக்கான கல்விச்சுற்றுலா**

கண்டி | நுவரெலியா | ஹட்டன்

ஆராய்ச்சி நிலையம், பண்ணை(Newzealand Farm), Tissue Culture Lab, Automobile Lab பார்வையிடப்படும்.

**0770175346, 0771703549 | August 12,13,14**

(C-7079)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623**

(9681)

---

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

(9674)

---

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

**021 221 5656** யாழ்ப்பாணம் **077 888 9388**

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-7069)

---

## பெண் பணியாளர் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளைத் தங்கி நின்று செய்யக்கூடிய பொறுப்புக்களற்ற பெண் பணியாளர் தேவை

உணவு, தங்குமிடவசதியுடன் நியாயமான சம்பளமும் தரப்படும், பணிபுரிய விரும்புவோர் நேரடியாக தொடர்பு கொள்ளவும்

இடம்: நெல்லியடி

**076 484 7171**

(C-7083)

---

## பணியாளர் & பயிற்சிப் பணியாளர் தேவை

நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணி நிலைகளுக்கு பெண் பணியாளர்கள் தேவை

1. பியூட்டி பார்லர் வேலைகள்
2. ஸ்கிறீன் பிறிண்ட் வேலைகள்
3. விற்பனை மற்றும் ஓடர்கள் ஏற்பவர்
4. வளங்கள் மற்றும் நிலையப் பராமரிப்பாளர்

பொறுப்புடன் பணிசெய்யக் கூடியவர்கள் நேரில் வரவும்

சம்பளத்துடன் வேலைகளை பழக விரும்புபவர்களும் வரலாம்

இல: 11 பொன் கந்தையா பாதை, மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி

பொறுப்பாளர் 077 914 3171

(C-7084)

---

## வேலைவாய்ப்பு

யாழ் வடமராட்சி பருத்தித்துறையில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு கணனியில் ரைப்பிங் (Type Setting) புத்தகம் கட்டுனர் (வைண்டிங்) செய்யத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

**தொடர்புகளுக்கு : 077 832 9477 / 021 226 0055**

(C-7085)

---

## SB travels and tours pvt ltd

இல: 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா வீசா விண்ணப்பப்படிவம் 100/= க்கு நிரப்பித்தரப்படும் மற்றும் நம் நிறுவனத்தினூடாகவும் இந்தியா வீசாவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

சென்னைக்கு 23200/= திருச்சி 30500/= இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Schengen வீசா விண்ணப்பப்படிவம் நிரப்பித்தரப்படும்.

தொடர்புகளுக்கு :- 0212229555, 2228555

கொழும்பு-15 0112540111

கொழும்பு-6 0112361711

(C-7077)

---

## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

**T.P: 021 720 1005**



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே

---



விசேட **Special Offer!** **விலைக் கழிவு**

## தில்லையம்பதி மோட்டோர்ஸ்

இல.100, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

THILLAIYAMPATHYS MOTORS

T.P : 021 222 5710
Fax : 021 222 4542
E-mail : tmotorsin@yahoo.com

**ஜூலை 24 முதல் ஜூலை 28 வரை**

**Dealers in :**

Agriculture & Electric,
Water Pumps,
Power Tools,
Engineering Tools,
Generators, Machines

அனைத்து பிரண்டட் வகை உபயோக பொருள்களும் மலிவு விலையில் வாங்கலாம்.



---

## FLC FRENCH LANGUAGE CENTRE



**பிரெஞ்சு**

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

| 40, பலாலி வீதி, அரியகுளம். | 181, பிரதான வீதி, நெல்லியடி |
|---|---|
| 0779 789 456 / 021 221 7781 | 0779 789 456 /0762 669 614 |
| ஆரம்பம் :27.07.2019 சனி காலை 10 மணி | ஆரம்பம் : 29.07.19 3.30 pm |

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-7055)

---

## விசேட கருத்தரங்கு

கிளிநொச்சியில் இறுதிக் கருத்தரங்கு

வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கானது

P. கமல்தாசன் SLPS

வியாழன் 2.pm - 6.30 pm

எதிர்பார்க்கை விடயங்கள்

கம்பன் கல்வி நிறுவனம்
கனகபுரம் வீதி,
சிவபூமி பாடசாலை அருகில்
0771116739, 0775483470

(C-7086)

---

## துரித தபால்கள் பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/=
Germaney - 700/=
France - 700/=

**திருமுருகன் கொம்நெற்**

321, K.K.S.Road, Jaffna.

கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.

**0777 554 528**

(C-7067)

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532

---

## DCM யாழ்நகர்

**அளவையியல்**

இறுதிக்கருத்தரங்கு

26.07.2019 : 2.00 – 5.00
27.07.2019 : 9.00 – 4.00

யாழ் முன்னணி பிரபல ஆசிரியர்கள்

S.சயந்தன்
R.P.சர்மா
T.T.நீதன்

அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்

077 011 9434 – நிர்வாகி

---

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

பயிற்சிக்கான ஊக்கத்தொகை -7'500/-

சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**0768226243**
v2vacancies@gmail.com

(C-7017)

---

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS

UK-550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

0768226240

V2 TRAVELS

---

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2020 ஜனவரி பரீட்சைக்கான

## aat (SriLanka)

(AA1, AA2, AA3)

Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382,
021 222 9149

# தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## வினாத்தாள் பகுதி-II

## கிழக்கு மாகாணம்

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

லூயி பாஸ்டர் என்பவர் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆவார். 1858 ஆம் ஆண்டு 'நொதித்தல்' பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு நுண்ணுயிர்களே காரணம் எனக் கண்டுபிடித்தார். விசர் நாய்க் கடியினால் மக்களுக்கு உண்டாகும் பயங்கரமான நோயை ஆராயத் தொடங்கினார். அந்நோயை வராமல் தடுப்பதற்கான ஊசிமருந்தைக் கண்டுபிடித்தார். தான் கண்டுபிடித்த மருந்தை விலங்குகளுக்குச் செலுத்தி வெற்றி கண்டார். ஜோசப் மைஸ்டர் என்ற சிறுவன் விசர் நாயினால் கடியுண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். அவன் உயிர் பிழைப்பது அரிது என்று மருத்து வர்கள் கையை விரித்தனர். அவனுக்கு தான் கண்டுபிடித்த ஊசிமருந்தைச் செலுத்தினார். சிறுவன் குணமடைந்தான்.
பாஸ்டரின் இக் கண்டுபிடிப்பினால் உலகம் விசர்நாய்க் கடியின் துன்பத்தினின்று தப்பும் வழியை அறிந்தது.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.
(i) உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு காரணம் எவை?
..........................................................................
(ii)எந்நோயை பரவாமல் தடுப்பதற்கான ஊசிமருந்தை லூயி பாஸ்டர் கண்டுபிடித்தார்?
:.........................................................................
(iii)குவலயம் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக
:.........................................................................
(iv)எளிது என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக
..........................................................................
(v)படர்க்கை ஒருமை, உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக
..........................................................................

2. கீழே தரப்பட்ட வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத் தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.
(i) தொழிலாளி நெற்றி .................. (வியர்வை / வேர்வை) நிலத்திலே சிந்த உழைத்தான்.
(ii) எசமான் தன் மீது ...................(பாரபச்சமாக / பாரபட்சமாக) நடந்துகொள்கிறார் எனர் பிரபு எண்ணினான்.

3. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிலே இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
(i) பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் .......................... (மலர்ந்தது / மலர்ந்தன)
(ii)மழை பெய்யும் காலங்களில் ஆற்றில் வெள்ளம் பெருகி ...................... (ஓடும் / ஓடியது)
(iii)பார்வையாளர்கள் கூட்டம் மெல்ல மெல்லக் கரையத். ..................
(தொடங்கியது / தொடங்கினர்)

4. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.
(i) நாம் துன்பப்படுவோருக்கு கைகொடுத்தல் வேண்டும். தடித்த எழுத்திலுள்ள மரபுத் தொடரின் கருத்து
(உதவுதல் / அரவணைத்தல்) என்பதாகும்.
(ii) அவனை எல்லோரும் அண்டப்புழுகன் என்று கூறுவர். அண்டப்புழுகன் என்னும் மரபுத் தொடரின் கருத்து
(பொய்யன் / கள்வன்) என்பதாகும்.

5. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.
(i) பசுக்கள் புல் மேஞ்சன.
..........................................................................
(ii) நான் தினமும் காலையில் தண்ணி குடிப்பேன்.
..........................................................................

6. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
..........................................................
உறவு கொள்வர் அப்பா

7. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!

ஏழையாக இருந்தாலும் இரவில் என்ன செய்ய வேண்டும்?
..........................................................................

8. பின்வரும் தாவரத்தின் இளமைப் பெயரை எழுதுக.
நெல் ................................

9. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன்
..........................................................

10. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.
பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியுவற்றின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன

11. பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்க.
அக்கம் ........................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.
(i)sea: ..........................................
(ii)hospital: ..............................

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்தில் எழுதுக.
(i)

..........................
(ii)

..........................

14. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.
(i)is / school / my / This
..................................................
(ii)blackboard / will / I / clean / the
..................................................

15. (i) க்ரீடாபூமி என்னும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக : ..........
(ii)பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
மலசலகூடம் எங்கே உள்ளது?
..................................................

- தரப்பட்டுள்ள புள்ளிக் கோடுகளில் விடைகளை எழுதுக.

16. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.
அறுபத்தொன்பதாயிரத்து தொண்ணூற்றேழு
..........................................................................

17. (4 8 / 2 7) வட்டத்தில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.
..........................................................

18. 3642, 3021, 3854, 3278, 3093 என்னும் எண்களை ஏறுவரிசையில் அல்லது இறங்குவரிசையில் எழுதும் போது நடுவில் வரும் எண் யாது? :
................................

19. (i)எதிரே தரப்பட்டுள்ள உருவில் 3/10 ஐ நிழற்றுக.
(ii)அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக. : .................


20. வெற்றிடங்களை நிரப்புக.

3kg 650g
2kg 700g
.....kg.....g

21. ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப் பட்டியலில் ஒரு பகுதி கீழே காணப்படுகின்றது

| பொருள் | 1Kgவின் விலை | சதம் |
|---|---|---|
| செத்தல் மிளகாய் | 320 | 00 |
| பெரிய வெங்காயம் | 120 | 00 |
| நெத்தலி | 240 • | 00 |
| கடலை | 160 | 00 |

(i)விலைப்பட்டியலுக்கேற்ப பின்வரும் அட்டவணையில் உள்ள வெற் றிடங்களை நிரப்புக

| பொருள் | அளவு | பணம் | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| செத்தல் மிளகாய் | 2kg | 640 | 00 |
| பெரிய வெங்காயம் | 750g | .... | .... |
| நெத்தலி | 250 g | 60 | 00 |
| கடலை | ....... | 240 | 00 |


(ii)காவியா மேற்குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருட்களை விலைக்கு வாங்குகிறாள்
அ) பொருட்களுக்காக அவள் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
ரூபாய்........................................
ஆ)பொருட்களுக்காக அவள் ரூபாய் 1500 பணத்தைக் கடை உரிமையாள ருக்குக் கொடுக்கும் போது அவளுக்கு கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?
ரூபாய்........................................

22. ஒரு வாளியில் 7l 500ml நீர் இடப்படலாம். இப்போது அதில் 2l 800ml நீர் உள்ளது. வாளியை நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு நீர் தேவை.
...............l................ml


23. முயலும் ஆமையும் போட்டிக்கு ஓடின. முழுதூரத்தின் 3/4 ஐ அடைந்த முயல் நித்திரைக்கு சென்றது. முழுத்தூரம் 416 எனின் முயல் ஓடிய தூரம் எவ்வளவு?
..........................................................

24. வானொலிப் பெட்டியொன்றின் விலை ரூ. 2500 ஆகும் தொலைக்காட்சிப் பெட்டியொன்றின் விலை வானொலிப் பெட்டியொன்றின் விலையிலும் 6 மடங்காகும் . தொலைக்காட்சிப் பெட்டியொன்றையும் வானொலிப் பெட்டியொன்றையும் விலைக்கு வாங்குவதற்கு பணத்தொகை எவ்வளவு.?
..........................................................................

25. ஆசிரியை 510 வர்ணச் சுண்ணக்கட்டிகளை 5 வகுப்புகளுக்கு சமமாகப் பகிர்ந்த ளித்தார். ஒரு வகுப்பிற்கு கிடைத்த வர்ணச் சுண்ணக்கட்டிகளின் எண்ணிக்கை எத்தனை?................................

26.


(i)இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங் கள் உள்ளன?
.................
(ii)இவ்வுருவின் சுற்றளவைக் காண்க?
..................


27. கடிகாரம் Aஇன் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் B இன் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளை யும் நிமிட முள்ளையும் வரைக.


28. A B C

.......................... Km

ABC என்னும் மூன்று நகரங்களின் அமைவு படத்தில் காட்டப்பட்டுள்ளது. A இற்கும் B இற்கும் இடையிலான தூரம் 77 km ஆகும். A இற்கும் C இற்கும் இடையிலான தூரம் 122\m ஆகும். B இற்கும் C இற்கும் இடையிலான காரம் எவ்வளவ?

29. தரம் 5 வகுப்பொன்றில் உள்ள பிள்ளைகள் மிகவும் விரும்பும் பானத்தை விசாரித்து அவர்களின் எண்ணிக்கையை வகை குறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட்டுள்ளது.




(i) தேநீரை விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கை கோப்பியை விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கையின் இரண்டு மடங்காகும். கோப்பியை விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) அவ் வகுப்பறையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? மிகவும் குறைவான பிள்ளைகள் விரும்பும் பானம் எது?

- 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. இலங்கைக்கே உரித்தான தாவரங்கள் மாத்திரம் அடங்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.
1) காட்டிலுப்பை, தொரணை, சீண்டுக்கொடி
2) தொரணை, சாத்தாவாரி, வேம்பு
3) ஈரப்பலா, மஞ்சள், ரம்புட்டான்
4) சீண்டுக்கொடி, மா, திருக்கொன்றை

31. காற்றினாலும் நீரினாலும் பிராணிகளாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை எது?
1) புலிநகம், கொய்யா, பப்பாசி 2) எருக்கலை, கமுகு, புலிநகம்
3) மரமுந்திரி, பப்பாசி, புலிநகம் 4) கமுகு, மரமுந்திரி, கடல் மாங்காய்

32. இலங்கைக்கே உரித்தான வண்ணத்துப்பூச்சி
1) புள்ளிக்கொட்டி 2) நரைப்புமுணி
3) சேல்கொண்டை 4) கொம்பூணான்

33. உடல் வளர்ச்சிக்குரிய உணவு
1) வாழைப்பழம் 2) கடலை 3) சோறு (4) பசளிக்கீரை

34. ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் விலங்கு
1) வெட்டுக்கிளி 2) மரவட்டை 3) நத்தை 4) மயிர்கொட்டி

35. கண்களின் ஊடாக மட்டும் தகவல்களைப் பெறத்தக்க ஊடகம்
1) தொலைக்காட்சி 2) வானொலி 3) பத்திரிகை 4) ஒலிபெருக்கி

36. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவது
1) 2 வருடங்களுக்கு ஒருமுறை 2) 3 வருடங்களுக்கு ஒருமுறை
3) 4 வருடங்களுக்கு ஒருமுறை 4) 5 வருடங்களுக்கு ஒருமுறை

37. இலங்கை அரசாங்க இலச்சினையில் உள்ள நெற்கதிர்கள் அடையாளப்படுத்துவது
1) தன்னிறைவை ஆகும் 2) நிலைத்திருத்தலை ஆகும்
3) தார்மீகத்தை ஆகும் 4) சௌபாக்கியத்தை ஆகும்.

38. பின்வரும் திரவங்களை நீரில் இடும்போது நீரின் மேல் மிதக்கும் திரவம் எது?
(1) மண்ணெண்ணெய் (2) பால் (3) வினாகிரி (4) இரசம்

39. இலங்கைத் தீவு அமைந்துள்ள கண்டம் எது?
1) ஆசியா கண்டம் 2) ஐரோப்பா கண்டம்
3) ஆபிரிக்கா கண்டம் 4) அவுஸ்திரேலியா கண்டம்

40. நுளம்பின் மூலம் பரவும் நோய்
1) நீர்வெறுப்பு 2) கொள்ளை 3) மலேரியா 4) கழிச்சல்

41. கைக்குட்டையில் உருவில் காட்டப்பட்டுள்ளவாறான பூவைத் தைக்கும் போது பூ இதழ்களைச் சுற்றித் தைக்க வேண்டிய தையல் எது?



1) சங்கிலித் தையல் 2) நரம்புத் தையல்
3) கம்பளித் தையல் 4) வெட்டுக்குத்துத் தையல்

42. நீரைக் குளிரச் செய்யும்போது
1) நீர் ஆவியாகும் 2) நீர் திண்மமாகும்
3) நீர் உருகும் 4) நீரின் இயல்பு மாறாது

43. மின்காந்தம் காணப்படும் ஓர் உபகரணம்
1) வானொலி (2) தொலைக்காட்சி (3) மின்குமிழ் (4) மின்மணி


44. இலங்கையின் தேசிய கொடியில் காணப்படும் நிறங்கள் மூன்றைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க
1) கபிலம், வெள்ளை, சிவப்பு 2) நீலம், மஞ்சள், பச்சை
3) ஊதா, சிவப்பு, வெள்ளை 4) சிவப்பு, பச்சை, செம்மஞ்சள்

45. வானொலியைக் கண்டு பிடித்த பெருமைக்குரியவர்
(1) ஜோன் லோகி பெயாட் (2) தோமஸ் அல்வா எடிசன்
(3) மார்க்கோனி (4) அலெக்சாண்டர் கிரகம் பெல்

46. ஒருவருடைய காலில் நாய் கடித்துள்ள சந்தர்ப்பத்தில் அவருக்கு முதலுதவி வழங்கும்போது முதலில் செய்ய வேண்டியது.
1) நாயைக் கண்டு பிடித்து இனங்காணல்
2) கடித்த இடத்தைத் தூய தண்ணீரால் கழுவுதல்
3) காயத்தின் மீது கைமருந்து பூசுதல்
4) சூடான பானத்தைப் பருகக் கொடுத்தல்

47. கிரிக்கெட் விளையாட்டில் ஒரு குழுவில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை
1) 5 2) 6 3) 11 4) 15


48. A,B ஆகிய சிறிய கண்ணாடிக் குவளைகள் இரண்டிலும் ஆரோக்கியமான பாசிப்பயறு வித்துகள் சம அளவில் இடப்பட்டுள்ளன. குவளை A இல் வித்துக்கள் நன்கு மூடப்படும் வரை நீரிடப்பட்டுள்ளது. குவளைB இல் ஈரமான பஞ்சின் மீது வித்துகள் இடப்பட்டுள்ளன. அவ்விரு குவளைகளையும் சூரிய ஒளியுள்ள இடத்தில் வைத்து சில நாட்களின் பின் சோதித்துப் பார்க்கும் போது கிடைக்கும் அவதானிப்பு எதுவாக இருக்கும்?




(1) குவளை A இல் வித்துகள் நன்றாக முளைத்திருக்கும்.
(2) குவளை B இல் வித்துகள் நன்றாக முளைத்திருக்கும்
(3) குவளை A,B ஆகிய குவளைகள் இரண்டிலும் நன்றாக முளைத்திருக்கும்
(4) குவளை A,B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துகள் நன்றாக முளைத்திருக்காது.

49. 1945 இல் 'வயர்லெஸ் வேர்ல்ட்' எனும் சஞ்சிகையில் வெளியிட்ட ஒரு கட்டுரை காரணமாக பிரபல்யமடைந்தவர்
1) கலாநிதி ஆனந்தக் குமாரசாமி 2) சேர் டீ.பி.ஜயதிலக்க
3) கலாநிதி ரீ.பீ.ஜாயா 4) ஆதர் சி.கிளாக்

50. 'மீள் சுழற்சிக்குட்படுத்தக் கூடியது' என்பதைக் காட்டுவதற்கு பயன்படும் உருவக் குறியீடு யாது?



(1) (2) (3) (4)

51. பப்பாசி வித்தை ஒத்த வித்து பின்வரும் வித்துக்களில் எது?
1) மிளகு 2) கடுகு 3) கராம்பு 4) ஏலம்

52. சந்திர கிரகணம் ஏற்படும் தினம்
1) அமாவாசை 2) பௌர்ணமி 3) நவமி 4) அட்டமி

53. படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது?



1) வாகனம் நிறுத்தும் இடம் முன்னால்
2) அபாயகரமான சரிவு முன்னால்
3) ஓடத்துறை ஒன்றிலுள்ள வீதி முன்னால்
4) வழுக்கும் வீதி முன்னால்

54. களுத்துறைப் பிரதேசக் கடலில் விழுவது
1) களனி கங்கை 2) மகாவலி கங்கை 3) களுகங்கை 4) வளவகங்கை

55. தென்னம் பொச்சினால் ஆக்கிய சாடியை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இம்மாற்று முறை தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டவற்றுள் பிழையானது எது?



1) பராமரிப்பு இலகுவானது
2) ஒரே இடத்தில் வைத்து வளர்க்க வேண்டும்
3) மழை வெயில் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்
4) இடவசதி குறைவாகவுள்ள இடங்களில் வளர்ப்பதற்கு உகந்தது

56. கிழங்குத் துண்டுகளை நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க பயிர் வகை
1) வற்றாளை 2) மரவள்ளி
3) கங்குன் 4) உருளைக்கிழங்கு

57. மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் அலகு
1) மில்லி லீற்றர் 2) மில்லி மீற்றர்
3. லீற்றர் 4) மீற்றர்

58. சீனி மிக விரைவாகக் கரைவது
1) தண்ணீரில் 2) குளிர்நீரில்
3) வெந்நீரில் 4) உவர்நீரில்

59. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளின் நான்காவது படிமுறை யாது?
1) மனதைத் தளர்த்துதல் 2) மனவுறுதி
3) பிரார்த்தனை 4) மலர்வு

60. குடும்பப் பொருளாதாரத்திற்கு ஆதாரமாக அமையும் ஓர் அம்சமாக வீட்டுத் தோட்டத்தை குறிப்பிடலாம். வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடும் பயன்தரத்தக்க அனுபவத்தைப் பெறுவது மகிழ்ச்சிகரமானது. வீட்டுத் தோட்டத்தின் பயன்கள் பற்றி மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

1..............................................................................
..............................................................................
2..............................................................................
..............................................................................
3..............................................................................
..............................................................................

## 19.07.2019 அன்று வெளியான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

பகுதி-I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1.2 | 11.1 | 21.2 | 31.3 |
| 2.2 | 12.3 | 22.2 | 32.2 |
| 3.3 | 13.2 | 23.1 | 33.3 |
| 4.1 | 14.1 | 24.1 | 34.2 |
| 5.2 | 15.1 | 25.3 | 35.3 |
| 6.2 | 16.3 | 26.3 | 36.1 |
| 7.3 | 17.2 | 27.1 | 37.1 |
| 8.1 | 18.2 | 28.3 | 38.3 |
| 9.2 | 19.2 | 29.1 | 39.2 |
| 10.1 | 20.3 | 30.1 | 40.1 |